விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 14 செவ்வாய்க்கிழமை (28.05.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 160

முதலாவது குழந்தைக்கு பிறகு குழந்தை இல்லை

## குருநாகல் வைத்தியருக்கெதிராக இதுவரை 51 பெண்கள் முறைப்பாடு

(கொழும்பு)

குருநாகல் வைத்தியசாலையின் மகப்பேற்று பிரிவில் பணியாற்றிய வைத்தியர் சிஹாப்டின் மொஹமட் சபிக்கு எதிராக தொடர்ச்சியாக பலரும் முறைப்பாடு செய்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை சுமார் 51 பெண்கள் அவர் மீது முறைப்பாடு செய்துள்ளதாக வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

குருநாகல், வாரியபொல, கலீவெல, தம்புள்ள, மவதகம, மெல்சிரிபுரா பகுதிகளை சேர்ந்தவர்களே இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளதாக கூறப்படுகின்றது.

அத்துடன், குறித்த வைத்தியருக்கு எதிராக மேலும் பலர் 23☛

## போதைப்பொருள் ஒழிப்பதற்கான செயற்திட்டங்கள் விரிவுபடுத்தப்படும்

### ஜனாதிபதி மைத்திரி அறிவிப்பு

(கொழும்பு)



போதைப்பொருள் ஒழிப்புக்கான வேலைத்திட்டங்களை மேலும் பலப்படுத்தி அச் செயற்திட்டத்தினை விரிவுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய ஜூன் 22ஆம் திகதி 23☛

## அவசரகால சட்டத்தை நீடிக்க முடியாது

### சம்பிக்க எதிர்ப்பு

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக தொடர்ச்சியாக அவசர கால சட்டத்தை கையாள முடியாது. ஆகவே பயங்கரவாத செயற்பாடுகள், அடிப்படைவாத செயற்பாடுகள் மற்றும் இன குரோத 23☛

குருநாகல் வைத்தியரை

## விசாரிப்பதற்கு விசாரணைக்குழு நியமனம்

(கொழும்பு)

குருநாகல் வைத்தியசாலையின் மகப்பேற்று பிரிவில் பணியாற்றிய வைத்தியர் சிஹாப் 23☛

ஐ.எஸ் உடன் தொடர்பு

## இதுவரையில் 63 பேர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடி பகுதியில் ஐ.எஸ் பயங்கரவாதத்துடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இதுவரை 23☛

## வல்வைப் பகுதியில் வீட்டிலிருந்த நகைகள் திருட்டு

(கரணவாய்)

வீடு திறந்திருந்ததை சாதகமாகப் பயன்படுத்தி அங்கிருந்த தங்க ஆபரணங்கள் திருடப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறை 23☛

வடக்கு, கிழக்கை அபிவிருத்தி செய்வதற்காக

# பனை அபிவிருத்தி நிதியம் பிரதமரால் ஆரம்பிப்பு

(கொழும்பு) போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்வதற்கு பனை அபிவிருத்தி நிதியம் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



வடக்கு, கிழக்கு அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக இந்த வருடத்தில் மொத்தமாக 50 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட அனைத்து நிதியும் அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்காக உரிய வகையில் செலவு செய்யப்படுகின்றது 23☛

முல்லை நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில்

## பிக்குவால் பொருத்தப்பட்ட சிசிரிவி கமராக்களை உடனடியாக அகற்றுமாறு நீதிமன்றம் உத்தரவு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் அத்துமீறி விகாரை அமைத்துள்ள பௌத்த பிக்குவால் பிள்ளையார் ஆலயத்துக்கு மட்டும் பொருத்தப்பட்டுள்ள இரகசிய சிசிரிவி கமராக்களை உடனடியாக அகற்றுமாறு முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதவான் எஸ். லெனின்குமார் உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நீதிமன்ற தீர்ப்புக்கு உட்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை ஆகியவற்றின் அனுமதிகளுடன் பிள்ளையார் ஆலயத்தின் இருமருங்கிலும் வீதி ஓரம் பெயர் பலகையை நாட்டச் சென்ற நீராவியடி பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினரும் 23☛

ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான

## நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஜே.வி.பி பூரண ஆதரவு

(கொழும்பு)

அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்பட்ட 10 குற்றச்சாட்டுக்கள் அடங்கிய நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஆதரவு வழங்குவதாக மக்கள் விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

அத்தோடு தற்போதைய அரசாங்கத்தின் எந்தவொரு உறுப்பினரையும் பாதுகாக்க வேண்டிய எந்தவொரு நோக்கமும் ஜே.வி.பிக்கு கிடையாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற மக்கள் 23☛

## மோ.சைக்கிள்- டிப்பர் விபத்து சம்பவ இடத்தில் ஒருவர் பலி

### ஏ9 வீதி நுணாவிலில் துயரம்



(சாவகச்சேரி)

ஏ9 வீதியில் சாவகச்சேரி நுணாவில் பொது நூலகத்துக்கு முன்பாக இடம்பெற்ற விபத்தில் சம்பவ இடத்தில் ஒருவர் பலியாகியுள்ளதுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 23☛

## 22 ஆயிரம் பட்டதாரிகளுக்கு விரைவில் அரச உத்தியோகம்

### பிரதமர் ரணில் உறுதி

(கொழும்பு)



நாட்டில் 22 ஆயிரம் பட்டதாரிகள் விரைவில் அரச சேவைக்குள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், 23☛

## ரிஷாத்தை சிறைப்பிடிக்க வேண்டும்!

### ஜி.எல்.பீரிஸ் கோரிக்கை

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குண்டுதாக்குதல் தொடர்பில் தெகிவளை சந்தேகநபர் குறித்து அமைச்சர் ரிஷாத் பதியுதீன் இராணுவ தளபதிக்கு அழுத்தம் கொடுத்தமை பாரிய 23☛

## University of Jaffna, Sri lanka

**THE APTITUDE TEST TO FOLLOW FOUR YEAR SPECIAL DEGREE PROGRAM OF BACHELOR OF ARTS IN TRANSLATION STUDIES.**
**- (Tamil and English)**

The above examination has been re-scheduled to be held **on 09th June, 2019 Sunday from 2.00 pm to 5.00 pm** at the following centres.

- New Arts Block Examination Hall of the University of Jaffna.
- Examination Hall of the Eastern University of Srilanka, Vantharumoolai, Chenkallady.

Admission Cards have already been posted to the eligible candidates to their home address. Candidates are hereby requested to bring the admission cards and National Identity Cards to prove their identity to sit for this examination.

**Registrar,**
University of Jaffna.

(C-6500)


# முதலாம் தரத்துக்கு மாணவர்களை இணைப்பதற்கான சுற்றுநிருபம் வெளியீடு

(கொழும்பு)

எதிர்வரும் 2020ஆம் ஆண்டுக்காக அரச பாடசாலைகளில் முதலாம் தரத்துக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான சுற்றுநிருபம் கல்வி அமைச்சினால் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த சுற்றுநிருபத்தினை கல்வி அமைச்சின் இணையத்தளமான www.moe.gov.lk ஊடாக பதிவிறக்கம் செய்ய முடியும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (3)


## சுத்திகரிப்புத் தொழிலாளி தேவை

நாளொன்றுக்கு 8 மணித்தியாலமும் வாரத்தில் 5 நாட்களும் வேலை செய்யக்கூடிய சுத்திகரிப்புத் தொழிலாளி தேவை. பொருத்தமான மாதச் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். தெல்லிப்பழையை அண்டிய பகுதியில் வசிப்பவராக இருந்தால் விரும்பத்தக்கது.

(C-6498)

**தொடர்புகளுக்கு:-0776622078**



## விசேட வகுப்புக்கள்

- வருமான பரிசோதகர்
- முகாமைத்துவ உதவியாளர்

மாலை நேர வகுப்பு இன்று செவ்வாய், புதன், வியாழன் பி.ப 4.00-6.00 (C-6503)

**0766883394**

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்திலிருந்து 100M தூரத்தில்)



## இணுவில் இந்துவின் ஆழ்ந்த அனுதாபங்கள்



எமது பாடசாலை அதிபர்
திரு.திருநாவுக்கரசு தேவதயாளன்
அவர்களின் தாயார்
திருமதி **இராசேஸ்வரி திருநாவுக்கரசு**

[தோற்றம் 23.08.1940] [மறைவு: 18.05.2019]

அவர்களின் மரணச் செய்தியறிந்து ஆழ்ந்த துயருறுகின்றோம். அவரது குடும்பத்தினருக்கு எமது பாடசாலைச் சமூகம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்,**
**இணுவில் இந்துக் கல்லூரி**

(8949)



பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்) (C-6496)

**ரெங்கசாமி**
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153.

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## குறோஷியா, றோமானியா வேலைவாய்ப்பு

தச்சுவேலை, கட்டடவாக்கப் பணியாளர்கள்

**சம்பளம்** ரூ.87,500 - ரூ.92,250

உணவு, தங்குமிடம், போக்குவரத்து, மருத்துவ வசதிகள் வழங்கப்படும்

077 00 38 215, 0777 324 004, 021 221 9 221

**எமரல்ட் ஐல்** License No. 2268
221-1/1, மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்

www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk



# INVERTER MADE IN Germany / Austria + Tier 1 Panels

MICRO PC SYSTEMS
Micro Power Co Systems

25 YEARS WARRANTY

SMA Fronius



Online Monitoring

- செலவை ஏற்படுத்திய மின்சாரம் வருமானத்தைப் பெற்றுத் தரும்
- மின் கட்டணம் இல்லை



Snap Inverter
(New Technology)

| 6kW SYSTEM | 7kW SYSTEM | 8.5kW SYSTEM | 10kW SYSTEM | 12kW SYSTEM | 18kW SYSTEM | 22kW SYSTEM | 33kW SYSTEM | 44kW SYSTEM |
|---|---|---|---|---|---|---|---|---|
| 985,000/= | 1,155,000/= | 1,385,000/= | 1,515,000/= | 1,735,000/= | 2,175,000/= | 2,495,000/= | 3,395,000/= | 4,995,000/= |
| 712 Units | 864 Units | 1030 Units | 1188 Units | 1425 Units | 2138 Units | 2613 Units | 3960 Units | 5306 Units |
| PV.max 7.5kW | PV.max 9kW | PV.max 11.4kW | PV.max 12.3kW | PV.max 15kW | PV.max 22.5kW | PV.max 30kW | PV.max 37.8kW | PV.max 60kW |

மின்சார தடை இல்லை
No Power-Cut



விவசாயிகளுக்கான மின்சாரம்




SOLAR STREET GARDEN LIGHTS




**TIPS!!!**

*Factors affecting performance of a solar PV system!*

A) Factors which are under the control of Human efforts:

1. Solar Panels: Figures given in the datasheet by the panel manufacture and its accuracy of Peak power, Module efficiency, temperature co efficient.=> So request for Tier 1 brand
2. Installation: Panel's orientation and tilt, System Design, Grid quality =>Select well-trained / Certified Company for the Installation.
3. Inverter: Efficiency =>so select premium brands.

B) Factors which are beyond the control of Human efforts:

1. Solar irradiance (SI) available at the site
2. Ambient temperature
3. Accumulation of Dirt/Smog
4. wind speed etc.

KACO SMA Fronius victron energy REC JinKO Solar VINGLI SOLAR ReneSola LECO Approved

கொழும்பு - 077 3963281/ 077 3963283 / 071 0356062 / 077 3963278
வவுனியா - 0777 425974 / 0777 763071 / 077 3963273
யாழ்ப்பாணம் - 077 3963280 / 0777 425973 / 0777 425974 / 077 3963284
மட்டக்களப்பு - 071 0356069 / 071 8963280 / 071 0356072 / 077 3963281

மொத்த விற்பனையாளர்கள் தொடர்பு கொள்ளவும் : 0773 076409 / 071 9963275 | E-mail: mail@micropcsystems.com | Web: www.solarpowerlk.com

No.218, Hospital Road, Jaffna. Tel: 021 2225893 | No.66B, 2nd Cross Street, Vavuniya. Tel: 024 2221969

# ஐ.எஸ்.பயங்கரவாதிகளுக்கு இலங்கை முஸ்லிம்களின் ஆதரவு ஒருபோதுமில்லை

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதம் தலைதூக்க முடியாதளவுக்குப் புதிய முறைமையொன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரபுநாடுகள் சிலவற்றில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு பொது மக்களின் ஆதரவு உள்ளது. எனினும் இலங்கையில் முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகளுக்கு எவ்வித ஆதரவும் இல்லை. அடிப்படைவாத செயற்பாடுகளை மேற்கொண்டு அவர்களுக்கு ஆதரவை ஏற்படுத்தினால் நாட்டில் பாதுகாப்புப் பிரச்சினை ஏற்பட்டு விடும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

சிவில் சமூக மற்றும் தொழிற் சங்க ஒன்றிணைப்பின் உறுப்பினர்களை சந்தித்தபோதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டினார்.

இக்கலந்துரையாடலில் வணக்கத்துக்குரிய தம்பர அமில தேரர், கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன, கலாநிதி பாக்கிய ஜோதி சரவணமுத்து, பேராசிரியர் சந்திரகுப்த தேநுவர, பேராசிரியர் எச்.டபிள்யூ. சிறில், கலாநிதி ஜெஹான் பெரேரா, சமன் ரத்னப்பிரிய, சுனில் டி சில்வா, பிலிப் திஸாநாயக்க, ராஜா உஸ்வெடிகெய்யாவ, சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ உட்பட பலர் கலந்து கொண்டனர்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலின் பின்னர் நாட்டின் பாதுகாப்பு நிலைமை தொடர்பிலும், அந்தத் தாக்குதலை தவிர்ப்பதற்கு தவறியமை தொடர்பில் அரசியல் மற்றும் நிறுவனாங்களின் பொறுப்புக்கள் தொடர்பில் சிவில் சமூக மற்றும் தொழிற் சங்க ஒன்றிணைப்பின் உறுப்பினர்கள் பிரதமரிடம் காரணாங்களைக் கேட்டறிந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-7)

# ஒருமாத காலப்பகுதிக்குப் பின்னர் அவசரகால சட்டம் தளர்த்தப்படும்

## தூதுவர்களிடம் ஜனாதிபதி உறுதி



(கொழும்பு)

**தற்போது நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரகால சட்டம் ஒருமாத காலப் பகுதிக்குப் பின்னர் தளர்த்தப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்தார்.**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் வெளிநாட்டு தூதுவர்களுக்கிடையிலான சந்திப்பு நேற்று திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போதே அவர் இந்த உறுதியை வழங்கினார்.

பாதுகாப்புத் துறையின் வெற்றிகரமான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையால் மீண்டும் அவசர கால சட்டத்தை நீடிக்கும் தேவை ஏற்படாது என தான் நம்புவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும் இத்தகைய கொடூரத் தாக்குதல்கள் மீண்டும் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்வதற்கு பாதுகாப்புத் துறையினரால் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் புதிய சட்டங்கள் வகுக்கப்படுவதுடன், நிறுவனக் கட்டமைப்பொன்றை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கடந்த மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து இலங்கையில் பாதுகாப்பு கெடுபிடிகள் அதிகம் காணப்படுகின்றமையால் இலங்கைக்கு வரும் சுற்றுலாப்பயணிகளுக்கு பல நாடுகள் எச்சரிக்கை விடுத்திருந்தன.

இந்நிலையில் தாக்குதலுக்குப் பின்னர் இலங்கைக்குவரும் சுற்றுலா பயணிகளுக்கு விடுக்கப்பட்டுள்ள பயண எச்சரிக்கையை தளர்த்துமாறும் ஜனாதிபதி தூதர்களிடம் இதன்போது கேட்டுக் கொண்டார்.

தற்போது நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் நூற்றுக்கு 99 சதவீதம் இயல்பு நிலைக்கு திரும்பியிருப்பதாகவும் பாதுகாப்புத் துறையினரும் புலனாய்வுத் துறையினரும் மேற்கொண்ட வெற்றிகரமான நடவடிக்கைகளே இதற்குக் காரணமாகும் என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டின் பாதுகாப்புத் துறையினருக்கு வெளிநாட்டு புலனாய்வுத் துறையினரிடமிருந்து கிடைக்கப்பெற்ற உதவிகளையும் பாராட்டினார்.

தாக்குதல் நடைபெற்று தற்போது ஒரு மாத காலம் நிறைவடைந்துள்ள நிலையில் கடந்த வாரம் இடம்பெற்ற வெளிநாட்டு இராஜதந்திரிகளுடனான சந்திப்பின்போதும் பயண எச்சரிக்கையை தளர்த்துமாறு பிரதமர் ரணில் கோரிக்கை விடுத்திருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களையடுத்து, இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் தமது நாட்டுக் குடிமக்களுக்கு சீனா விடுத்திருந்த பயண எச்சரிக்கையை சீன அரசாங்கம் தளர்த்தியுள்ளது. இந்தப் பயண எச்சரிக்கை நீக்கப்பட்டுள்ளதாக, சீன தூதரக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## யாருக்கும் அஞ்சி

# அமைச்சை துறக்க மாட்டேன்

### றிசாத் உறுதி



(கொழும்பு)

எந்தவித குற்றமும் செய்யாத என்னை பதவி விலகுமாறு கூறுவதை ஏற்கத் தயாரில்லை. எனக்கு எதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணையை எதிர்கொள்ள நான் தயார். யாருக்கும் அஞ்சி அமைச்சுப் பதவியைத் துறக்க மாட்டேன் என அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார். பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் சாட்சியமளித்து என்னை நிரூபிப்பேன் எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 2014.2015 ஆம் ஆண்டுகளில் அமைச்சராக இருந்த காலங்களில் அரிசி இறக்குமதியில் செய்யப்பட்ட முறை கேடுகள் குறித்த குற்றச்சாட்டில் விசாரணைகளுக்காக அமைச்சர் றிசாத் பதியுதீன் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் மற்றும் அவர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயங்கள் குறித்து வினவியபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,


கடந்த 2014, 2015 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் அரிசி இறக்குமதி விடயங்களில் சில முறைகேடுகள் இடம்பெற்றதாகக் கூறியே அது குறித்து வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக் கொள்ள விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தேன். இது குறித்து நான் எனக்குத் தெரிந்த அனைத்து விடயங்களையும் முன்வைத்துள்ளேன். மேலதிக விசாரணைகள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. விசாரணைகளுக்கு நான் தடையாக இருக்கப்போவதில்லை. ஊடகங்கள் இன்று என்னைத் தவறான வகையில் சித்திரிக்க முயற்கின்றன. என் மீது எந்தத் தவறும் இல்லாத நிலையில் என்னை குற்றவாளியாக காட்டவே முயற்சிக்கின்றன. சிலர் என்னை பயங்கரவாதி என்றே கூறும் நிலைமை உருவாகியுள்ளது.


இன்று எனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டு வந்துள்ளனர். நான் பதவி விலக வேண்டும் எனவும் இவர்கள் கூறுகின்றனர். நான் எந்தத் தவறும் செய்யாத நிலையில் குற்றச்சாட்டை ஏற்கத்தயாரில்லை. அதேபோல் இவர் களுக்கு அஞ்சி நான் எனது அமைச்சை துறக்கவும் தயாரில்லை. நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரட்டும். நான் அதற்கு முகங்கொடுக்கத் தயாராக உள்ளேன். என்னால் எந்தக் குற்றமும் இடம்பெறாத நிலையில் நான் தைரியமாக அதற்கு முகங்கொடுக்கத் தயாராக உள்ளேன். அத்துடன் இப்போது பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதிலும் நான் சாட்சியமளிக்கத் தயாராக உள்ளேன். என்னை நியாயமானவன் என நிரூபிக்க என்னால் முடியும்.

எதிர்க்கட்சியினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் அனைத்துமே அடிப்படை நியாயமற்றதாகவே உள்ளன. குறிப்பாக நான் இராணுவத் தளபதியை தொடர்புகொண்டு அழுத்தம் கொடுத்ததாக கூறுவது முற்றிலும் பொய்யானது. அதனை இராணுவத்தளபதியே கூறியுள்ளார்.

மேலும் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு நான் ஒருநாளும் துணைபோனவன் அல்ல. நான் கடந்த காலத்தில் மகிந்த ராஜபக்ஷ ஆட்சியிலும் அமைச்சராக செயற்பட்டுள்ளேன். அப்போது என்னுடன் இணைந்து செயற்பட்ட நபர்கள் தான் இன்று தமது அரசியல் சுயலாபங்களைக் கருத்திற் கொண்டு எனக்கெதிராக செயற்பட ஆரம்பித்துள்ளனர். யார் அழுத்தம் கொடுத்தாலும் என்மீது குற்றம் இல்லாத நிலையில் அனைத்து சவால்களுக்கும் தைரியமாக முகங்கொடுக்க நான் தயார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சமையலறைக் கழிவுகளை அகற்றும் புதிய செயற்றிட்டம் நேற்று ஆரம்பம்





யாழ்.மாநகரசபைக்கு உட்பட்ட நாளாந்த சமையலறைக்கழிவுகளை அகற்றும் புதிய செயற்றிட்டத்தை பரீட்சாத்தமாக முதல்வர் ஆனல்ட் நேற்று ஆரம்பித்தார்.

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களின் தூய்மை மற்றும் துர்நாற்றம் அற்ற சூழலை உருவாக்கும் யாழ்.மாநகரசபையின் சுத்தமான பசுமை நகரை நோக்கிய திட்டத்தின் கீழான திட்டங்களில் ஒன்றான மாநகர கழிவுகளை அகற்ற புதிய செயன்முறையான சமையலறைக்கழிவுகளை வட்டாரங்களில் புதிய ஒலிச்சத்தம் ஒன்றுடன் மாநகரின் 09 பிரட்டு அலுவலகங்களுக்கூடாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளமை ஏற்கனவே அறியத்தரப்பட்டிருந்தது.

அந்தவகையில் மாநகர குப்பைகாவும் வண்டிகளின் மூலம் சமையலறைக்கழிவுகளை அகற்றும் புதிய செயற்றிட்டம் பரீட்சார்த்தமாக நேற்றுக்காலை மணியளவில் யாழ்.மாநகர சபை வளாகத்தில் வைத்து யாழ் மாநகர முதல்வரால் ஆரம்பிக் கப்பட்டது.

இந் நிகழ்வில் யாழ்.மாநகர பிரதம பொறியியலாளர், மாநகர சபையின் பொறியியலாளர், மாநகர பொதுச்சுகாதாரப் பொறியியற் பிரிவின் பிரதம பொறுப்பதிகாரி, மாநகர பொதுச்சுகாதாரப் பொறியியற்பிரிவின் உத்தியோகத்தர்கள், யாழ்.மாநகர வாகனப் பகுதியின் பிரதம பொறுப்பாளர், மாநகரசபை அதிகாரிகள்,சாரதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (இ-5)

# பயிற்சியில் முயற்சிக்குமா இந்தியா

## இன்று பங்களாதேஷுடன் மோதல்



பயிற்சியின்போது இந்திய அணித் தலைவர் விராட் ஹோலி

உலகக் கிண்ணப் பயிற்சி போட்டியில் இந்திய அணி இன்று பங்களாதேஷைச் சந்திக்கிறது. முதல் போட்டியில் ஏமாற்றிய இந்திய அணி வீரர்கள் இன்று வெற்றிக்கு முயற்சிக்க வேண்டும்.

இங்கிலாந்தில் உலக கோப்பை கிரிக்கெட் தொடர் வரும் 30ம் திகதி ஆரம்பமாகிறது. மொத்தம் 10 அணிகள் 'ரவுண்ட் ரொபின்' முறையில் மோத வுள்ளன. இதற்கு தயாராகும் வகையில் ஒவ்வொரு அணியும் தலா இரண்டு பயிற்சி போட்டிகளில் பங்கேற்கின்றன.

முதல் போட்டியில் இந்திய அணி நியூசிலாந்திடம் வீழ்ந்தது. இன்று தனது இரண்டாவது போட்டியில் பங்களாதேஷை சந்திக்கிறது. முதல் ஆட்டத்தில் ஆரம்ப வீரர்கள் ரோகித், ஷிகர் தவான் தலா 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். ஹோலி, தோனி இன்று சுதாகரித்துக் கொள்வர் என நம்பப்படு கிறது.

பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள நான்காவது இடத்தில் களமிறங்கிய லோகேஷ் ராகுல், தினேஷ் கார்த்திக் தங்களுக்கு கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தினால், பிரதான போட்டிக்கான அணியில் இடம் பெறலாம்.

'சகலதுறை வீரர்' ஹர்திக் பாண்ட்யா, துடுப்பாட்டம், பந்துவீச்சில் ஆறுதல் கொடுக்கிறார். இடது தோள்பட்டை வலியால் அவதிப்படும் கேதர் ஜாதவ் இன்று களமிறங்குவாரா எனத் தெரியவில்லை. பின் வரிசையில் ஜடேஜா அரைச்சதம் அடித்தது நம்பிக்கை தருகிறது.

பந்துவீச்சில் எதிர்பார்த்தது போல பும்ரா, மொஹமட் ஷமி மிரட்டினர். புவனேஷ்வர் ரன்களை வாரி வழங்கினார். சுழலில் குல்தீப் யாதவ், சகால் இருவரும் விக்கெட் வேட்டையை ஆரம்பித்தால் நல்லது.

### கிண்ண உற்சாகம்

பங்களாதேஷ் அணி மொர்டசா தலைமையில் மீண்டும் களமிறங்குகிறது. சமீபத்தில் அயர்லாந்தில் நடந்த முத்தரப்பு தொடர் இறுதிப் போட்டியில் மே.தீவுகளைச் சாய்த்து கிண்ணம் வென்ற உற்சாகத்தில் உள்ளது. பாகிஸ்தானுக்கு எதிரான முதல் பயிற்சி மழையால் ரத்தானதால், இன்றைய போட்டியில் சவால் கொடுக்கலாம்.


தமிம் இக்பால், சவுமியா சர்கார், முஷ்பிகுர் ரகிம், மகமதுல்லா என அனுபவ வீரர்கள் இருப்பது கூடுதல் பலம். பந்துவீச்சில் அணித் தலைவர் மொர்டசா, முஸ்தபிஜுர் ரஹ்மான், மொசாதெக் ஹொசைன் இந்திய அணிக்கு சிக்கல் கொடுப்பர் எனத் தெரிகிறது. முன்னணி 'சகலதுறை வீரர்' சகிப் அல் ஹசன் இருப்பது கூடுதல் பலம்.

### மழை வருமா?

கார்டிப்பில் இன்று வெப்பநிலை அதிகபட்சம் 16, குறைந்த பட்சம் 13 டிகிரி செல்சியஸ் இருக்கும். போட்டியின் இரண்டாவது பாதியில் மழை வர 69 சதவீதம் வாய்ப்புள்ளதால், பயிற்சி ஆட்டம் முழுமையாக நடப்பது சந்தேகம்தான்.

**வருவாரா விஜய்**

பயிற்சியின் போது கலீல் அகமட் வீசிய பந்து தாக்கியதில் வலது கையில் அடிபட்ட தமிழகத்தின் விஜய் சங்கர், நியூசிலாந்துக்கு எதிராக களமிறங்கவில்லை. நேற்று இவர் வலைப்பயிற்சியில் துடுப்பாட் டம் செய்தார். இதனால் இன்று களமிறங்குவார் என நம்பப்படுகிறது.




# சாதிக்கத் தூண்டிய நெற்றித் திலகம்



சச்சின்

கடந்த 1983ல் நடந்த உலகக் கிண்ணத் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற இந்திய அணி, அதன்பின் பெரிய அளவில் சோபிக்கவில்லை.

2003 உலகக் கிண்ணத் தொடருக்கு முன், இந்தியாவின் செயல்பாடு திருப்திகரமாக இல்லை. மே.தீவுகள் மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு எதிரான ஒரு நாள் தொடரை மோசமாக இழந்த இந்திய அணி, ரசிகர்களின் அதிருப்திக்கு ஆளாகினர்.

இந்நிலையில் 2003ல் நடந்த உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணி, தனது முதல்லீக்போட்டியில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக தோல்வி கண்டது. பின் எழுச்சி கண்ட இந்திய அணி இறுதிப் போட்டிக்கு முன் னேறியது. இது குறித்து இத்தொடரில் பங்கேற்ற தினேஷ் மொங்கியா கூறுகையில்,


"உலகக்கிண்ணத் தொடருக்கு மும்பை விமான நிலையம் செல்லும் வழியில், சில பெண்கள் நாங்கள் சென்ற பஸ்சை மறித்தனர். அவர்கள் சச்சினை கீழே இறங்கும்படி வற்புறுத்தினர். பஸ்சில் இருந்து இறங்கிய சச்சினுக்கு நெற்றியில் திலகம் இட்டு வாழ்த்தினர். இது, போட்டியில் சாதிக்க கைகொடுத்தது." என்றார்.

### தெரியுமா?

உலகக்கிண்ண அரங்கில் எந்த ஒரு விக்கெட்டுக்கும் அதிக ஓட்டங்கள் சேர்த்த ஜோடிகள் வரிசையில் மே.தீவுகளின் கிறிஸ் கெய்ல், மார்லன் சாமுவேல்ஸ் ஜோடி முன்னிலை வகிக்கிறது. கடந்த 2015ல் கான்பெராவில் நடந்த சிம்பாப்வே அணிக்கு எதிரான போட்டியில் 2வது விக்கெட்டுக்கு இணைந்த இந்த ஜோடி 372 ஓட்டங்கள் குவித்தது. இதன்மூலம் இந்தியாவின் கங்குலி-டிராவிட் (318 ஓட்., 2வது விக்கெட், எதிர் இலங்கை, 1999) ஜோடியின் சாதனையை முறியடித்தது.

## பிரெஞ்ச் ஓபன்

# நடால், ஜோகோவிச் வெற்றி



ரபேல் நடால்

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் 'நடப்பு சம்பியன்' ஸ்பெயின் வீரர் ரபெல் நடால், ஜோகோவிச், வாவ்ரின்கா உள்ளிட்டோர் வெற்றி பெற்றனர். டென்மார்க் வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கி அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில், நடப்பு ஆண்டின் 2வது கிராண்ட்ஸ்லாம் தொடரான பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் நடக்கிறது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் 'நடப்பு சம்பியன்' ஸ்பெயினின் ரபெல் நடால், ஜெர்மனியின் யானிக் ஹான்ப்மன் மோதினர். ஒரு மணி நேரம், 57 நிமிடம் நீடித்த போட்டியில் அபாரமாக ஆடிய நடால் 6-2, 6-1, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று 2வது சுற்றுக்குள் நுழைந்தார்.

மற்றொரு போட்டியில் ஜேர்மனியின் மிஸ்சா ஸ்வெரேவ், பிரான்சின் ரிச்சர்ட் காஸ்குயட் மோதினர். இதில் காஸ் குயட் 6-3, 6-4, 6-3 என்ற நேர் செட் கணக் கில் வெற்றி பெற்றார்.



வோஸ்னியாக்கி

### ஜோகோவிச் வெற்றி

ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், போலந்தின் ஹூபெர்ட் ஹர்காஜ் மோதினர். ஒரு மணி நேரம், 36 நிமி டம் நீடித்த போட்டியில் அபாரமாக ஆடிய ஜோகோவிச் 6-4, 6-2, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

### வோஸ்னியாக்கி ஏமாற்றம்

பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் டென் மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி, ரஷ்யா வின் வெரோனிகா குடெர்மிடோவா மோதினர். முதல் செட்டை 6-0 எனக் கைப்பற்றிய வோஸ் னியாக்கி, 2வது செட்டை 3-6 என இழந் தார். வெற்றி யாளரை நிர்ணயிக்கும் 3வது செட்டில் மீண்டும் ஏமாற் றிய இவர், 3-6 எனக் கோட்டைவிட்டார்.

# மரண அறிவித்தல்



## வல்லிபுரம் பொன்னம்பலம்

மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பொன்னம்பலம் நேற்று திங்கட்கிழமை (27.05.2019) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவராசா மற்றும் யோகராசா (சுகாதார பரிசோதகர்), மங்களம், மகாலட்சுமி (லண்டன்), திருச்செல்வம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகராசா, தனராஜசேகரம் (லண்டன்), ஜெயப்பிரியா, கமலேஸ்வரி, உஷாவாணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் யாழினி, யமீலா, சாரோன், கஸ்தூரி (சுவிஸ்), கல்யாணி, பவானந்தன், பவாநந்தினி, திவாகர் (சுவிஸ்), கிருபாகரன் (பிரான்ஸ்), பபிநாத் (லண்டன்), பபிகரன் (லண்டன்), பிரதீப் (லண்டன்), லக்ஷனா (லண்டன்), சுதர்சன் (லண்டன்), டிலக்ஷன், டிலக்ஷனா, சுஜானி, கேதாரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் றியா (சுவிஸ்), தியா (சுவிஸ்), ஐத்தரியா (சுவிஸ்) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2019) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10.00 மணியளவில் கிராய் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-6491)

மூத்தவிநாயகர் கோவிலடி,
கரணவாய்.

தகவல்:-
குடும்பத்தினர்

# காற்றாலை விடயத்தில் தவிசாளர் மௌனம் உறுப்பினர் கேள்வி

(சாவகச்சேரி)

தென்மராட்சி-மறவன்புலோ பகுதியில் மக்களின் எதிர்ப்பிற்கு மத்தியில் இடம் பெற்று வருகின்ற காற்றாலை விடயத்தில் சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் மௌனம் காக்கக் காரணம் என்னவென சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் கு.குகானந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் காற்றாலை அமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

மேலும் அவர் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்,

காற்றாலை விடயத்தில் தவிசாளர் மௌனம் காத்து வருவதால் இதற்கு தவிசாளரும் உடந்தையா? என்ற சந்தேகம் எழுகின்றது. இதற்குத் தவிசாளர் பதில் கூறி மக்களைத் தெளிவுபடுத்த வேண்டும்.


மக்களைச் சந்திப்பதில் தவிசாளர் ஆர்வம் காட்டவில்லை. மக்களைப் பயமுறுத்தி வரும் அபிவிருத்தி எமது மக்களுக்குத் தேவையில்லை.

இவ்வாறான வேலைத்திட்டங்களை மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் இருந்து தவிர்த்து குடியிருப்பு இல்லாத அறுகு வெளிப் பகுதிகளில் அமைக்க வேண்டும்.

மறவன்புலோ பகுதியில் வீடுகளில் இருந்து சொற்ப அளவு தூரத்திலேயே காற்றாலை காணப்படுவதாக மேலும் அவர் சுட்டிக்காட்டினார். (5-30)

# மரண அறிவித்தல்

## அமரர் தம்பிஐயா பத்மநாதன்



அரியாலையை பிறப்பிடமாகவும் இலக்கம் 01, கனகரட்ணம் விதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற இலங்கை போக்குவரத்துச் சபையின் பொறியியல் பகுதி உத்தியோகத்தர் **தம்பிஐயா பத்மநாதன்** அவர்கள் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா- பொன்னம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான இரத்தினகோபால்-பாக்கியம் தம்பதியரின் மருமகனும் / உமா மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சயந்தினி (பிரான்ஸ்), வசந்தினி, நிரஞ்சினி (நோர்வே), பிரதீபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான கனகேஸ்வரி, இரத்தினேஸ்வரி, பரமேஸ்வரி, சண்முகநாதன், யோகராஜா மற்றும் கமலா, பத்மா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், தவயோகராஜா மற்றும் பவானி, கலாநிதி, காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் திருநீலண்டர், இரத்னேஸ்வரி, காலஞ்சென்ற தியாகரத்தினம் மற்றும் குகரத்தினம், கமலேஸ்வரி, பத்மேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் யோகதாசன் (பிரான்ஸ்), சரா.புவனேஸ்வரன் (பொதுச் செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்), மோகனதாஸ் (நோர்வே), கிருஷாந்தி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் வினித்தா, நில்லி, டிலானிகா, Dr.துவாரகா, சஞ்சிகா, சஜீசன், தர்மிகா, தாரதி, கதிரவன், சதுர்வன் ஆகியோரின் பேரனுமாவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 29.05.2019 நாளை புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.**

இல 1, கனகரட்ணம் வீதி,
அரியாலை.

(C-6496)

தகவல்: குடும்பத்தினர்.

# ஆட்டோவை உருக்குலைத்த ஹயஸ்; சாரதி உட்பட இருவர் படுகாயம்!



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு அருகாமையில் ஹயஸ் ஆட்டோவுடன் மோதி ஏற்பட்ட விபத்தில் இருவர் படுகாயமடைந்ததுடன், ஆட்டோ முற்றாக சேதமடைந்தது.

யாழ்ப்பாணம் பெந்தகோஸ்தே தேவாலயத்திற்கு அருகாமையிலுள்ள வளைவில், நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

ஏ-9 வீதி வழியாக யாழ்ப்பாணம் நகரத்தை நோக்கி பயணித்த ஹயஸ் புங்கன்குளம் வீதியைக் கடந்து.வளைவிற்கு அருகாமையில் சென்றுகொண்டிருந்த போது, முன்பாகச் சென்ற பட்டா ரக வாகனத்தை கடந்து செல்ல முற்பட்ட வேளையில் எதிரே வந்த ஆட்டோ மீது மோதியதில் ஆட்டோ வட்டமாக சுழன்று பழுத்த சேதமடைந்தது.

ஆட்டோ சாரதி மற்றும் அதில் பயணித்தவர் உட்பட இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-5-101)

# இராசி பலன்

**மீனம்:** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள், திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், போசன சுகமுண்டு.

**மேடம்:** நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, தொழிலில் கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம்.

**இடபம்:** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வாகன சுகமுண்டு, உஷ்ணம் சம்பந்தமான ரோக பயமுண்டு, உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

**மிதுனம்:** பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழில் வளர்ச்சி கூடும் நாள், அரசு வழியில் அனுகூலமுண்டு.

**கும்பம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் நிலை ஏற்படலாம், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**கடகம்:** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.

**மகரம்:** தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் கைகூடும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**சிம்மம்:** நீங்கள் நல்லவர் என நினைத்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், வேலைச் சுமை கூடும், விரயங்கள் கூடும் நாள்.

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | சுக் | சூரி, புத | செவ், ராகு |
| சந் | இராசி பலன் | | |
| | | | |
| சனி, கேது | குரு | | |

சந்திராஷ்டமம்
மகம், பூரம்

**28.05.2019**

வைகாசி 14, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு

நவமி பிற்பகல் 1.06 மணிவரை

பூரட்டாதி முன்னிரவு 6.41 மணிவரை

சுபநேரம் 10.22 - 11.52 மணிவரை

இராகுகாலம் 2.52 - 4.22 மணிவரை


வளவன்

**தனுசு:** புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பெற்றோர் மீது பிரியம் கூடும், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**துலாம்:** நல்ல செய்திகள் நாடி வரலாம், தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், நல்லவர்களின் சிநேகம் கிடைக்கலாம், உடல் நலன் சீராகும்.

**கன்னி:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.



யாழ்ப்பாணம் அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய (நாவலடி அம்மன்) 7 ஆம் திருவிழா கடந்த புதன்கிழமை மாலை வெகுவிமர்சையாக இடம்பெற்றது. (படங்கள்:-ஐ.சிவசாந்தன்)

# நிர்வாகம் உடைந்து விட்டது உறுப்பினர் குற்றச்சாட்டு

(சாவகச்சேரி)

அரசியல் ரீதியாக முரண்பட வேண்டிய நிலை ஏற்படும் என சாவகச்சேரி நகரசபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் ம.நடனதேவன் நகரசபையின் ஆளுநங்கட்சிக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற விசேட அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மேலும் அவர் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரசபையினர் சாதாரண குப்பைத் தொட்டி வைத்தல், ரயில் கடவைகளுக்கு பிரகாசமான மின்குமிழ் பொருத்துதல் ஆகிய சாதாரண வேலைகளைக் கூட செய்ய வழியற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

ஆனால் செம்மணிப் பகுதிக்கு, அப்பால் சகல வீதிகளும் காப்பெற் வீதிகளாகக் காணப்படுகின்றன. அவர்களால் செய்ய முடிவதனை ஏன் எம்மால் செய்ய இயலவில்லை? உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் இருக்கும் கதிரைக்கு தாம் தகுதியானவரா என்று பார்க்க வேண்டும்.

மக்களின் வரிப்பணத்தை சரியாகப் பங்கிட்டு உரிய முறையில் அபிவிருத்தி செய்ய வேண்டும். பத்திரிகைகள் மற்றும் பொது மக்களுக்கு தவறான செய்திகளை வழங்குகிறீர்கள்.

இனிமேல் இதற்கு இடமளிக்க முடியாது. சபையினை ஒழுங்கான முறையில் நடத்த வேண்டும். பதவியின் மதிப்பினை உணர்ந்து செயலாற்ற வேண்டும். அவ்வாறு செயற்படாது விட்டால் அரசியல் ரீதியாக முட்டுப்பட வேண்டிய நிலை ஏற்படும். அத்துடன் நகரசபைச் செயலாளர் விழிப்பாக இருக்க வேண்டும்.

நகரசபை நிர்வாகம் உடைந்து விட்டது. செயலாளர் அனுப்பும் கடிதங்கள் கூட உரிய தரப்பிற்கு கிடைப்பதில்லை. அனுப்பும் கடிதம் உரிய தரப்பைச் சென்றடைந்து விட்டதா என்பதனை செயலாளர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என மேலும் அவர் தெரிவித்துள்ளார். (5)

# பாடசாலை பணியாளர்கள் நிரந்தர நியமனம் கோரி அங்கஜன் எம்.பியுடன் சந்திப்பு



(கொடிகாமம்)

யாழ்.மாவட்ட பாடசாலை பணியாளர்கள் நிரந்தர நியமனத்தை கோரி நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜனுடன் கடந்த 23 ஆம் திகதி சந்திப்பொன்று இடம்பெற்றது.

2013 ஆம் ஆண்டு பாடசாலை பணியாளர்கள் 8 ஆம் தரத்துடன் பணி நிலை நியமனங்களுக்கான அறிவித்தல்கள் வர்த்தமானி மற்றும் பத்திரிகைகளின் ஊடாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைவாகவே உரிய முறையில் தமக்கான நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தது என பாடசாலை சிற்றூழிய பணியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அவ்வாறே ஏனைய திணைக்களங்கள் ஊடாகவும் பணியாளர்கள் உள்ளீர்க்கப்பட்டிருந்தனர் எனவும் அவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் தலைமை காரியாலயத்தில் இடம்பெற்றிருந்த சந்திப்பின் போதே தமது பணிநிலைகளுக்கான நிரந்தர நியமனங்களை உறுதிப்படுத்தித் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஏனைய திணைக்களப் பணியாளர்கள் நிரந்தர நியமனங்களை பெற்றும் கல்வி திணைக்களத்தின் கீழ் பணிகளை தொடரும் சிற்றூழிய பணியாளர்களுக்கான நிரந்தர நியமனங்கள் 6 வருடங்கள் கடந்தும் இதுவரையும் உறுதிப்படுத்தப்படவில்லை என கவலை வெளியிட்டுள்ளனர்.

இதன்போது கல்வி சிற்றூழிய பணியாளர்களுக்கு கருத்துத் தெரிவித்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் உரிய நடைமுறைகளின் ஊடாக தீர்வுகளை பெற்றுத் தர நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார். (5-114)

# கும்பாபிஷேகம்

நல்லூர் மூத்த விநாயகர் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன ஏககுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.30 மணிமுதல் காலை 8.15 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது. எண்ணெய்க்காப்பு எதிர்வரும் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ளது. (5)

# தையிட்டி வாசிக்கு ஒரு இலட்சம் அதிர்ஷ்டம்

கடந்த 12 ஆம் திகதி தேசிய லொத்தர் சபையின் மகஜன சம்பத சீட்டிழுப்பின் வெற்றியாளராக தையிட்டி வாசி தெரிவு செய்யப்பட்டார். வலமிருந்து இடமாக 5 இலக்கங்கள் பொருந்திய நிலையில் இவருக்கு ஒரு இலட்சம் ரூபாய்பணப் பரிசு கிடைத்துள்ளது. (10-272)

# முதியோர் மருத்துவ முகாம்

யாழ். பிரதேச செயலகத்துக் குட்பட்ட ஜே/82, ஜே/83 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள முதியோர்களுக்கான மருத்துவ முகாம் எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 8.30 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை யா/வைத்தீஸ்வரக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதில் பங்குபற்ற வருபவர்கள் தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை என்பவற்றைக் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (5)

# பன்னாட்டு உணவகத்திற்கு எதிராக சுகாதார வைத்திய அதிகாரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கசூரினாக் கடற்கரையில் இயங்கி வரும் பன்னாட்டு உணவகம் ஒன்றிற்கு எதிராகக் காரைநகர் சுகாதாரப் பணிமனை வைத்திய அதிகாரி என். நந்தகுமாரினால் நேற்றைய தினம் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடம் (2018) ஆம் ஆண்டு அப்போதைய வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் பாரம்பரிய உணவகம் என்ற பெயரில் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த உணவகம் காரைநகரில் வாழும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், குறைந்த வருமானத்தைப் பெறும் பெண்கள் ஆகியோர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் தொழில்வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்காகவும் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த கட்டடத்தை யாழ்ப்பாணத்தில் தனது கிளையை நடத்தி வரும் பன்னாட்டு உணவகம் ஒன்றிற்கு காரைநகர் பிரதேசவாசி ஒருவரால் குத்தகைக்கு கொடுக்கப்பட்டு விளம்பரப் பலகையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் அவதானம் செலுத்திய காரைநகர் பிராந்திய சுகாதாரப் பணிமனை ஊர்காவற்றுறை நீதிமன்றில் பாரம்பரிய உணவகம் ஏற்படுத்தியதன் நோக்கம் மற்றும் தற்போது இயங்கி வரும் பன்னாட்டு உணவகம் உரிய சுகாதார அனுமதிகளைப் பெறாது இயங்குகின்றமை தொடர்பில் ஆட்சேபித்து நேற்றைய தினம் வழக்குத் தாக்கல் செய்துள்ளது. வழக்கை விசாரித்த நீதவான் எதிர்வரும் 11 ஆம் திகதி காரைநகர் பிரதேசசபைத் தவிசாளரையும் செயலாளரையும் மன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை பிறப்பித்துள்ளார். (5-10)

# சந்தையில் அடிப்படை வசதிகள் இல்லை-மக்கள் குற்றச்சாட்டு

நவாலி பிரசாத் சந்தையின் மீன் விற்பனை செய்யும் பகுதி ஒழுங்காகச் சுத்தம் செய்யப்படுவதில்லை எனப் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். வலி.தென் மேற்குப் பிரதேச சபையின் பொறுப்பிலுள்ள குறித்த சந்தைத் தொகுதியில் மலசலகூட வசதியும் இதுவரை அமைக்கப்படவில்லை எனவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

சந்தையில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளிடம் வாடகைப் பணம் அறவிடும் பிரதேச சபையினர் வியாபாரிகள் மற்றும் பொது மக்களுக்கான அடிப்படை வசதிகளை செய்யாது காலம்தாழ்த்துகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் வலி.தென் மேற்கு தவிசாளர் ஜெபநேசனைத் தொடர்பு கொண்டபோது மீன் சந்தையை சுத்தம் செய்யாத விடயம் தொடர்பில் அதிகாரிகளிடம் விளக்கம் கேட்பதாகவும் மலசலகூடம் தொடர்பில் கேட்டதற்கு இச் சந்தை 80 வருடப் பழைமையானதாகக் காணப்படுவதால் இவை புனரமைப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களிடம் உதவியை நாடியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (5-10)

# உயர்தர மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சைகள்

வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தினால் 2019 ஆம் ஆண்டு க.பொ.த (உ/த), பரீட்சைக்குத் தோற்றவுள்ள கணிதம் மற்றும் விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான மாகாண மட்ட முன்னோடிப் பரீட்சை வடமாகாண பாடசாலைகளில் நடத்தப்படவுள்ளது. எனவே குறிப்பிட்ட மாணவர்கள் மேற்படி பரீட்சைக்குத் தவறாது பங்குபற்றுமாறு வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

30.05.2019 வியாழக்கிழமை மு.ப.8.30-மு.ப 10.30 வரை உயிரியல் பகுதி-1, மு.ப.8.30-மு.ப 11.40 வரை இணைந்த கணிதம் பகுதி -1, 31.05.2019 வெள்ளிக்கிழமை மு.ப.8.30-மு.ப 11.40 வரை உயிரியல் பகுதி-2, மு.ப 8.30-மு.ப 11.40 இணைந்த கணிதம் பகுதி-2, 03.06.2019 திங்கட்கிழமை மு.ப 8.30-மு.ப 10:30 வரை இரசாயனவியல் பகுதி-1, 04.06.2019 செவ்வாய்க்கிழமை மு.ப 8.30-மு.ப 11.40 இரசாயனவியல் பகுதி-02, 06.06.2019 வியாழக்கிழமை மு.ப.8.30-மு.ப 10.30 வரை பௌதீகவியல் பகுதி-01, 07.06.2019 வெள்ளிக் கிழமை மு.ப 8.30-மு.ப 11.40 வரை பௌதீகவியல் பகுதி-2. (5)

# 1,200 மொழியாசிரியர்கள்- தொழில் வாய்ப்புக்களைப் பயன்படுத்துங்கள்

(கொழும்பு)

800 தமிழாசிரியர்கள், 300 சிங்கள மொழி ஆசிரியர்கள், 100 ஆங்கில மொழி ஆசிரியர்கள் என மொத்தமாக, ஆயிரத்து 200 மொழியாசிரியர்கள் தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சில் உள்வாங்கப்பட்டு பயிற்றுவிக்கப்படவுள்ளார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழாசிரியர்கள் சிங்கள கல்வி கூடங்களில் தமிழ் மொழியையும், சிங்கள ஆசிரியர்கள் தமிழ் கல்வி கூடங்களில் சிங்கள மொழியையும், ஆங்கில ஆசிரியர்கள் அவசியமான கல்வி கூடங்களில் ஆங்கில மொழியையும் போதிக்கும் தொழில் வாய்ப்புகளை பெறுவார்கள் எனவும் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பயிற்றுவிக்கப்படவுள்ளவர்களுக்கு அரச பணியாளர்களுக்கு மொழி கல்வியை போதிக்கும் சந்தர்ப்பங்களும் இவர்களுக்கு கிடைக்கும். இது இவர்களுக்கு நாட்டின் ஒருமைப்பாடு தொடர்பாக பங்களிக்க வாய்ப்புகளாகவும், தொழில் வாய்ப்புகளாகவும் அமையும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த தொழில் வாய்ப்புகளுக்கான தகைமைகள்:

1.வயதெல்லை 18 தொடக்கம் 40 வயது வரை

2.க.பொ.த (சா/த) பரீட்சையில் தமிழ்மொழி உட்பட மூன்று பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல்

3.க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டாம் மொழி சிங்களத்தில் குறைந்தது சாதாரண சித்தியை பெற்றிருத்தல் அல்லது

4.தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத் தினால் நடத்தப்பட்ட சிங்கள கற்கை நெறியினை (100 மணித்தியாலத்திற்கு மேற்பட்டது) பூர்த்தி செய்திருத்தல் அல்லது

5.அரசகரும மொழிகள் திணைக்களம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சிங்கள கற்கை நெறியினை பூர்த்தி செய்திருத்தல்

6.க.பொ.த. (உ/த) பரீட்சையில் தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல்

மேலதிக தகைமை:

க.பொ.த. (சா/த) பரீட்சையில் தமிழ் இலக்கியத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகும்.

குறிப்புகள்:

அடிப்படைத் தகைமைகளை கொண்டு நேர்முக தேர்வுக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்கள் தமது முதல் மொழியில் 1/2 மணித்தியால எழுத்துப் பரீட்சை ஒன்றிற்கு உட்படுத்தப்படுவர்.

தெரிவு செய்யப்படுவோர், மொழி ஆசிரியர் கற்கை நெறி பயிற்சிக்கு உள்வாங்கப்படுவார்கள்.

இக் கற்கைநெறி முழுநேர மற்றும்/ அல்லது பகுதி நேர (வார இறுதி நாட்கள்) 600 கற்கை மணித்தியாலங்களைக் கொண்டதாக அமையும்.

இக் கற்கை நெறி பயிற்சிக்கான முழுச் செலவினையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்வதோடு கற்கை நெறியின் முடிவில் குறித்தகால எல்லைக்குள் பாடசாலையில் இரண்டாம் மொழி ஆசிரியராக சேவை யாற்றுவதற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிடல் வேண்டும்.

கற்கை நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்பவர்களுக்கு இரண்டாம் மொழி ஆசிரியராக சேவையாற்றும் தொழில் வாய்ப்பு வழங்கப்படும்.

மேற்படி தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள், கீழ்வரும் மாதிரி விண்ணப்பப்படிவத்தை தயாரித்து பூர்த்தி செய்து (கல்வி மற்றும் ஏனைய மொழித் தகைமைகளுடனான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன்) 31.05.2019 ஆம் திகதிக்கு முன்னதாக கீழ்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் " மொழி ஆசிரியர் - பயிற்சி - தமிழ் - 2019 " மற்றும் வதிவிட மாவட்டத்தை குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

முகவரி

பணிப்பாளர் நாயகம், தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சு, இல.321/1, ஹைலெவல் வீதி,மாகும்புர, பன்னிபிட்டிய.

தொலைபேசி இல: 011 309 2903, 077 033 3479, 075 284 0561, 075 742 2485. (இ-7)

## வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்பு

# மதுமாதவ உட்பட மூவருக்கு வெளிநாடு செல்லத் தடை!



(கொழும்பு)

மினுவாங்கொட நகரில் கடந்த 13ஆம் திகதி இரவு இடம்பெற்ற, வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் மூன்று சந்தேக நபர்கள், வெளிநாடு செல்வதைத் தடுக்கும் உத்தரவு நேற்று மினுவாங்கொட நீதவான் கேசர சீ. ஏ. சமரதி வாகரவால் குடிவரவு- குடியகல்வு திணைகளை நாயகத்துக்கு அறிவிக்கப்பட்டது.

பிவிதுரு ஹெல உறுமயவின் பிரதித் தலைவர் மதுமாதவ அரவிந்த உள்ளிட்ட மூவருக்கு எதிராகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள், நம்பிக்கைக்குரிய நபர்களின் தகவல்கள், பாதுகாப்பு கமரா ஆகியவற்றைப் பயன்படுத்தி, பொலிஸ் விசேட குழுக்கள் முன்னெடுத்த விசாரணைகளுக்கமைய, இச்சம்பவத்துடன் தொடர்புடைய 15 சந்தேகநபர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதுடன், அவர்களைக் கைதுசெய்வதற்கான விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் நீதிமன்றத்துக்கு அறிவித்தனர்.

ஹீனடியாவ, தம்மாலோகம, கஹஹேகொட, மஹகம, குருகம, பொல்வத்த ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 15 சந்தேக நபர்களே கைது செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இந்த வன்முறை தொடர்பில், 17 சந்தேக நபர்கள் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுக்கமைய 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் நீதிமன்றத்துக்கு அறிவித்தனர். (இ-7)


# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-17, கஸ்தூரியார் வீதி, 306, 308 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் P.சபாரட்ணமும் பெண் இராசம்மாவும் என்னும் பெயரில் ஆதனப்பதிவேட்டில் காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் காரைதீவு கிழக்கு விளானையைச் சேர்ந்த பரமு சபாரத்தினமும் பெண் இராசம்மாவும் பிரசித்த நொத்தாரிசு க.ஆறுமுகம் முகதாவில் 20.12.1972 ஆம் திகதியிடப்பட்ட 7658 இலக்கத்தில் ஆ.சிதம்பரத்தின் சீவிய உரித்துக்கமைவாக தமது மகள் புனிதவதியாருக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். பரமு சபாரத்தினம் மகள் புனிதவதியார் அதே பிரசித்த நொத்தாரிசு முகதாவில் 06.06.1974 ஆம் திகதியிடப்பட்ட 8486 இலக்கத்தில் பரமு சபாரத்தினம் மகள் சிவனேஸ்வரிக்கு அறுதியாக வழங்கியுள்ளார். பரமு சபாரத்தினமும் பெண் இராசம்மாவும் 20.12.1972 ஆம் திகதியிடப்பட்ட 7659 இலக்கத்தில் ஆ.சிதம்பரத்தின் சீவிய உரித்துக்கமைவாக தமது மகள் சிவனேஸ்வரிக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். பின்னர் ஈஸ்வரன் மகாதேவாவும் பெண் சிவனேஸ்வரியும் (11 ம் வட்டாரம் புங்குடுதீவைச் சேர்ந்த பரமலிங்கம் ரமேஷ்க்கு) பிரசித்த நொத்தாரிசு திருமதி.ச.இளங்கோவன் முகதாவில் 07.10.2017 ஆம் திகதியிடப்பட்ட 14320 இலக்கத்தில் கந்தையா பரமலிங்கத்தின் சீவிய உரித்துக்கமைய வழங்கியுள்ளார்.

ஆதன விபரம்:- வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை 'அடியார்க்கு நல்லான் வளவும் தலைமடையும் மெடியார்க்கு நல்லான் குளத்தில் வரம்பும்' இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ.நகுலேஸ் அவர்களின் வரைபட இலக்கம் 1260/10.04.2004 இல் துண்டு 3.4 எனக்காட்டப்பட்ட நிலப்பரப்பு குளி 13.98 ஆகும். எனினும் இவ்வாதனம் தற்போது விண்ணப்பதாரியினால் யாழ்.மாநகரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட உத்தரவுபெற்ற நில அளவையாளர் ந.கேதீஸ்வரன் அவர்களால் 30.06.2018 ஆம் திகதிய 3982/1 ம் இலக்கத்தில் அளந்து தயாரித்த படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்டு இதன் விஸ்தீரணம் குளி 15.04 எனக் கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளது.

கிழக்கு:-வீடமைப்புத் திணைக்களத்தின் ஆதனமும் கன்னாதிட்டி குளமும்.
வடக்கு:- சபாரத்தினம் சிவபாதவிருதயரின் ஆதனம்.
மேற்கு:- கஸ்தூரியார் வீதி.
தெற்கு:- இராசதுரை இராசேந்திரத்தின் ஆதனம்.

தற்போது கந்தையா பரமலிங்கம் ரமேஸ் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது கந்தையா பரமலிங்கம் ரமேஸ் என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மானுவல் ஆனல்ட்
முதல்வர்,
மாநகரசபை.

எனது இல:- கஸ்தூரியார் வீதி,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(சி-6495)



# கல்யாணமாலை


## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்:பரணி<br>கி.பா:35 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L, பாடசாலை உதவியாளர் எதிர்பார்ப்பு:படித்தபெண்<br>தொ.இ: B/2864 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி 2<br>கி.பா: 13 ¾<br>உயரம்: 162cm<br>தகைமை/தொழில்:B.Sc, Civil Engineer<br>எதிர்பார்ப்பு: Engineer, Accountant<br>தொ.இ: G/5136 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்:சித்திரை 1<br>கி.பா: 27செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:வியாபாரம், சொந்த வாகனம்<br>எதிர்பார்ப்பு: சாதாரண கல்வி தகைமை<br>தொ.இ: B/2872 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்:சுவாதி 3<br>கி.பா: 21 சூரிசெவ் 12 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5138 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: 56 ¾ உயரம்: 5'10"<br>தகைமை/ தொழில்:BAபட்டதாரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: B/2873 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்:ரோகிணி 2<br>கி.பா: 53<br>உயரம்: 169cm<br>தகைமை/தொழில்:BA ,Planning Officer<br>எதிர்பார்ப்பு: அரசதனியார்தொழில்<br>தொ.இ: G/5143 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை 1<br>கி.பா: 35 ½செவ் 2 ல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:B.Scபட்டதாரி, புகையிரத நிலையஅதிபர்<br>எதிர்பார்ப்பு: A/Lபடித்தபெண்<br>தொ.இ: B/2914 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம் 3<br>கி.பா: 17செவ் 2 இல்<br>உயரம்: 155cm<br>தகைமை/தொழில்:A/L, சுகாதார தொண்டர<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும<br>தொ.இ: G/5145 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# அமெரிக்காவின் ஆயுதப்படைகளை இலங்கைக்குள் களமிறக்கவில்லை

## இராணுவ ஊடகப் பேச்சாளர் உறுதி



(கொழும்பு)

**ஐக்கிய அமெரிக்காவின் ஆயுதப்படைகளை இலங்கைக்குள் களமிறக்கவில்லை எனவும் இலங்கையின் பாதுகாப்புப் படைகளின் பாதுகாப்பில் மட்டுமே இலங்கை உள்ளது எனவும் இராணுவம் தெரிவித்துள்ளது.**

நாட்டின் நெருக்கடி நிலைமைகளையடுத்து இலங்கைக்குள் அமெரிக்க இராணுவம் களமிறக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவருகின்ற நிலையில் அதன் உண்மைத்தன்மை குறித்து வினவிய போதே இராணுவ ஊடகப் பேச்சாளர்மேஜர்ஜெனரல்ரொஷான் செனவிரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்குள் எந்தவித சர்வதேச இராணுவப் படைகளும் களமிறக்கப்படவில்லை. குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவின் இராணுவப்படைகள் இலங்கைக்குள் குவிக்கப்பட்டுள்ளதாக தொடர்ச்சியாக கேள்வி எழுப்பப்பட்டு வருகின்றன. இதற்கு சில புகைப் படங்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆனால் எமது பாதுகாப்பு படையினர் மாலி தீவுகளுக்கு அனுப்பப்படவுள்ள காரணத்தினால் எமது இராணுவ வாகனங்கள் சில பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. இந்த வாகனங்கள் அனைத்துமே எமக்கு ஐக்கிய நாடுகள் அமைதிப்படை மூலமாக வழங்கப்பட்ட வாகனங்கள். அவற்றையே நாம் பரிசோதனை செய்து தயார்படுத்தி வருகின்றோம். அந்த புகைப் படங்களை வைத்துக்கொண்டே சில வதந்திகள் பரப்பப்பட்டு வருகின்றன.

எனினும் அமெரிக்க இராணுவ படைகளை இலங்கைக்குள் கொண்டுவரவில்லை. அவர்கள் வருவதாக கோரவும் இல்லை. இலங்கையில் தற்போது நிலவும் பதற்றமான நிலைமைகளை கையாள எமது முப்படையினர் மற்றும் பொலிஸ் மட்டுமே ஈடுபடுத்தப்பட்டுள்ளன. நிலைமைகளை வழமைக்கு கொண்டு வந்துள்ளோம்.

மக்கள் எந்தவித அச்சமுமின்றி அமைதியாக வாழக்கூடிய சூழல் இன்று நிலவுகின்றது. ஆகவே பொய்யான தகவல்களை சிலர் பரப்புவதன் மூலமாக மக்களின் இயல்பு வாழ்க்கையை குழப்பவே முயற்சித்து வருகின்றனர்.

மேலும் தொடர்ச்சியாக தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாட்டின் சகல பகுதிகளிலும் முப்படையினர் குறிப்பாக இராணுவம் மற்றும் பொலிஸ் தரப்பினர் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

செப்புத் தொழிற்சாலையில் குண்டு தயாரித்த ஊழியர்

## அப்துல்லாவின் மறியல் நீடிப்பு

(கொழும்பு)

வெல்லம்பிட்டிய செப்புத் தொழிற்சாலை ஊழியர் ராஜேந்திரன் அப்துல்லாவின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த குறித்த சந்தேக நபர் நேற்று திங்கட்கிழமை மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டார்.

இதன்போதே அவரை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

தற்கொலைத் தாக்குதல்களுக்குப் பயன்படுத்தப்பட்ட குண்டுகளைத் தயாரித்த தொழிற்சாலையென சந்தேகிக்கப்படும் தொழிற்சாலையொன்று வெல்லம்பிட்டியில் அண்மையில் முற்றுகையிடப்பட்டது.

இதனைத்தொடர்ந்து குறித்த தொழிற்சாலையை பொலிஸார் சோதனைக்கு உட்படுத்தியபோது தொழிற்சாலையின் முகாமையாளர் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

---

# இனப்படுகொலை செய்த இலங்கை அரசை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும்

## பிரிட்டன் பிரதமரிடம் நாடுகடந்த தமிழீழ அரசு கோரிக்கை

(லண்டன்)

தமிழினத்திற்கு எதிராக சிங்கள பேரினவாதம் நிகழ்த்திய மாபெரும் இன அழிப்பின் 10 ஆண்டுகள் அடைந்துள்ள போதிலும் இனியும் காலம் தாழ்த்தாது தமிழர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க பிரித்தானிய அரசு காத்திரமான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர் சொக்கலிங்கம் யோகலிங்கம் நெறிப்படுத்தலில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரித்தானியா Advocay அணியின் ஒருங்கிணைப்பாளர் பொன்ராசா புவலோஜன் தலைமையில், அணியின் உறுப்பினர் டக்ளஸ் மென்டிஸ் அற்புதம் மற்றும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் புதிதாக தேர்வு செய்யப்பட்ட அமைச்சரவை உறுப்பினர்கள் இராஜேந்திரம் நுஜிதன் . சந்திரகுமார் பிரேம்குமார் ஆகியோர் இணைந்து நேற்று முன்தினம் பிரதமர் அலுவலகத்தில் மனுக் கையளித்தனர்.



அந்த மனுவில் பிரதானமாக நான்கு கோரிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை, போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் அரசால் மேற்கொள்ளப்பட்ட பிற குற்றங்கள் தொடர்பாக ஒரு சர்வதேச நீதி அமைப்பை உருவாக்குதல் வேண்டும். மேலும் உறுதிப்படுத்தப்பட்ட காணாமல் போனவர்களுக்கு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.

இலங்கையின் வரலாறு அதன் மக்கள் தொகை மற்றும் தமிழர்களின் சுய நிர்ணய உரிமை ஆகியவற்றின் பல மொழி, பல இன, மதத் தன்மையை அங்கீகரிக்கும் ஒரு அரசியல் தீர்வை இலங்கை அரசு வழங்குவதற்கு பிரித்தானியா அழுத்தம் கொடுக்க வேண்டும்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை (PTA) அகற்றுவதற்கும் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலைசெய்யவும் இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் -இந்தப் பயங்கரவாத தடைச் சட்டம் (PTA) தன்னிச்சையான கைது மற்றும் விசாரணைகள் ஏதுமின்றி தடுத்து வைக்க அனுமதிக்கிறது.

இலங்கைத் தீவின் வடக்கு மற்றும் கிழக்கில் தமிழர் தாயகத்தை அனைத்து ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தையும் மக்களிடம் ஒப்படைக்க வேண்டும். மற்றும் தாமதமின்றி தமிழ் மக்களை மீள்குடியேற்ற வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்மனுவை கையளித்த பின் அவர்கள் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமை சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானமானது, பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகளுக்கு மாறாக நாடுகளின் நலன் சார்ந்து நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் தமிழினத்தின் மீதான போர்க்குற்றங்களுக்கும் இனப்படுகொலைக்கும் இலங்கையை பொறுப்புக் கூற வைக்க அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் அல்லது அதற்கு சமனான அனைத்துலக தீர்ப்பாயங்களே பொருத்தம் என்றும் அதற்கு பிரித்தானியா அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டும். சிங்கள அரசின் முள்ளிவாய்க்கால் தமிழினவழிப்பு தற்செயலாக நிகழ்ந்ததொரு நிகழ்வல்ல. எதிர்பாராமல் நிகழ்ந்ததொன்றுமல்ல. அது இலங்கை இராணுவத்தின் அத்துமீறலின் விளைவும் அல்ல. மாறாக இது தமிழ் மக்களின் சுதந்திர வேட்கையினைக் கருவறுக்க இலங்கை அரசு திட்டமிட்டுப் புரிந்தவொரு வெறியாட்டமே முள்ளிவாய்க்கால் இனவழிப்பு.

10ஆவது ஆண்டு நினைவேந்தலை நாம் தற்போது நினைவுகூறியிருக்கின்றோம். இப் பத்தாண்டுகளில் நாம் எவற்றைச் சாதித்திருக்கிறோம் என்ற கேள்வி எம்மில் பலருக்கும் எழுவதனையும் காண முடிகிறது. பத்தாண்டுகள் கடந்தும் நாம் எமது உரிமைளை வென்றெடுக்கும் போராட்டத்தில் பெரிதும் முன்னேறவில்லையே என்ற ஏக்கக் குரல் பலர் மத்தியில் எழுவதையும் நாம் அவதானிக்க முடிகிறது.


நாம் இந்த இடத்தில் இலங்கை அரசு மேற்கொண்ட முள்ளிவாய்க்கால் இனவழிப்பின் உள்நோக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழினவழிப்பின் ஊடாக சிங்கள அரசு அடைந்து கொள்ள முயன்ற விடயங்களை, அடைந்து கொள்ள முடிந்ததா? என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முள்ளிவாய்க்கால் தமிழினவழிப்பு மூலம் தமிழ் மக்களின் சுதந்திர வேட்கையை நசுக்கிவிட அரசு முயன்றது. இலங்கை அரசின் கொள்கையான 'ஒரு நாடு ஒரு மக்கள்' என்ற நிலைப்பாட்டை நடைமுறையில் அமுல்படுத்தலாம் என்று எண்ணியது.

சிங்கள அரசின் நிலைப்பாடுகளையும் விருப்பங்களையும் இயல்பாக ஏற்று அதற்கு அடிபணிந்து தமிழ் மக்கள் வாழும் நிலையை ஏற்படுத்த முடியும் என்று எண்ணியது. இவ்வாறான நிலையை உருவாக்குவதன் மூலம் தமிழ் மக்களை நிரந்தரமாகத் தோற்கடித்து விடலாம் என்று சிந்தித்தது. தமிழீழம் என்ற தனியரசு என்ற எண்ணக் கருவை அழித்துச் சிதைத்து விடலாம் என்று எண்ணியது.

ஆனால் பத்தாண்டுகள் கழிந்தும் தான் விரும்பியவற்றை இலங்கை அரசால் அடைந்து கொள்ள முடியவில்லை. தமிழ் மக்களைத் தோற்கடிக்கப்பட்ட மக்களாக மாற்ற முடியவில்லை என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (இ-231)

# யாழில் ஒரு இலட்சம் தென்னங்கன்றுகளை இராணுவத்துடன் இணைந்து நடத்திட்டம்





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சியின் எண்ணக்கருவுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக இலங்கை தென்னை வளர்ப்பு சங்க உறுப்பினர்களுடன் இராணுவத்தினர் முதல் தடவையாக இணைந்து நடத்திய தென்னை வளர்ப்பு சம்பந்தமான கலந்துரையாடலானது நேற்று முன்தினம் காங்கேசன்துறை தல்செவின ஹோட்டலில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலின் போது யாழ்ப்பாண பிரதேசத்தினுள் ஒரு இலட்சம் தென்னாங்கன்றுகள் நட திட்டமிடப்பட்டிருப்பதாகவும், அதனை விரிவுபடுத்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன், மேலும் யாழ்ப்பாண பிரதேசத்தில் 578 ஏக்கர் நிலப்பரப்பில் 37 ஆயிரம் தென்னாங்கன்றுகள் இதுவரை நாட்டப்பட்டுள்ளதுடன், இச்செயற்பாடானது யாழ்ப்பாண பிரதேசத்தில் கடமையாற்றும் இலங்கை இராணுவ வீரர்கள் மற்றும் யாழ்ப்பாண பிரதேசத்தினுள் வசிக்கும் பிரதேசவாசிகள், தென்னை வளர்ப்பு சங்க உறுப்பினர்கள் ஆகியோரது உதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இக் கலந்துரையாடலானது யாழ்ப்பாண கட்டளை தலைமையகத்தின் பிரிகேடியர் பியந்த கமகே தலைமையில் நடைபெற்றதுடன், இக்கலந்துரையாடலின் போது இலங்கை தென்னை வளர்ப்பு சங்கத்தின் செயலாளர் ஜெயந்த விக்கிரமசிங்க, கலாநிதி நிஹால் சில்வா, ரஞ்சித் டயஸ், யாழ்ப்பாண மாவட்ட தென்னை வளர்ப்பு சங்கத்தின் தலைவர் பேராசிரியர் மோகன்தாஸ் உட்பட சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் இலங்கை இராணுவத்தின் உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (இ-7)

## அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டத்திலிருந்து வியாழேந்திரன் திடீரென வெளிநடப்பு





(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் திடீரென வெளிநடப்புச் செய்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டம் அதன் இணைத் தலைவர்களான இராஜாங்க அமைச்சர் அலிசாஹிர் மௌலானா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன் தலைமையில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

இதன்போது கடந்த மாதம் 21ஆம் திகதி மட்டக்களப்பு உட்பட பல பகுதிகளிலும் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் உயிர் நீத்தவர்களுக்காக இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் எம்.உதயகுமாரின் உரையுடன் கூட்டம் ஆரம்பமானது. அப்போது உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்று நிருபத்திற்கு மாறாக கிழக்கின் முன்னாள் முதலமைச்சர் நஷீர் அகமட், அபிவிருத்திக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் தெரிவித்தார்.

குறித்த நியமனம் ஐக்கிய தேசிய கட்சியின் சிபாரிசுக்கு அமைவாக ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளதாகவும் சுற்று நிருபத்திற்கு மாறாக இவ்வாறான நியமனங்கள் வழங்கப்படுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது எனவும் அவர் எதிர்ப்பை வெளியிட்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் அலிசாஹீர் மௌலானா, ஜனாதிபதி கடந்த காலத்தில் அரசியலமைப்புக்கு மாறாக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியதாகவும் அவராலேயே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், அரசாங்கம் தமக்கு வழங்கிய அறிவுறுத்தலுக்கு அமைவாகவே தாங்கள் இந்த கூட்டத்தை நடத்துவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு, இதற்கான பதிலை அரசாங்கத்திடம் இருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இவ்விடயம் குறித்து கலந்துரையாட முடியாது என்றும் அலிசாஹீர் குறிப்பிட்டார்.

அதேநேரம், இங்கு கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சிறிநேசன், இது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாடி, இதில் மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்று தெரிவித்தார்.

எனினும், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றுநிருபத்திற்கு மாறாக நடைபெறும் அபிவிருத்திக்குழு கூட்டத்தில் தம்மால் கலந்துகொள்ள முடியாதென தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் திடீரென கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# O/L மாணவர்களின் தேசிய அடையாள அட்டைக்கான கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் தேசிய அடையாள அட்டை விண்ணப்பப்படிவங்கள் ஒப்படைக்கப்படும் இறுதித் திகதி எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமையாகும் என்று, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்தார்.

தேசிய அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை கடந்த 24 ஆம் திகதியுடன் நிறைவடைய இருந்தாலும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் நன்மை கருதி இந்தக் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான பாடசாலை பரீட்சார்த்திகளின் விண்ணப்பப்படிவங்கள் ஏற்கனவே கிடைக்கப் பெற்றுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தப் பரீட்சைக்கு தோற்றும் அரச ஊழியர்களின் விண்ணப்பப்படிவங்களை அத்தாட்சிப்படுத்தும் அதிகாரம் உரிய பிரதேச கிராம உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக நிறுவன தலைமை அதிகாரிக்கும் வழங்கப்பட்டுள்ளது என்று ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பேராசிரியர் சரத் விஜேசூர்யவை நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவு



(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டு தொடர்பில் பேராசிரியர் சரத் விஜேசூர்யவை ஜூன் மாதம் 21 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தர விடப்பட்டது.

சட்டத்தரணி சம்பத் விஜித குமார மற்றும் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான அனில் வசந்த அல்விஸ் ஆகியோரால் குறித்த மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

சரத் விஜேசூர்ய சமூக ஊடகங் களின் ஊடாக பல்வேறு முறை நீதிமன்றத்தை அவமதிக்கும் கருத்துக்களைத் தெரிவித்ததாக மனுதாரர்கள் சுட்டிக்காட்டினர்.

இதனால் குறித்த நபருக்கு ஏன் தண்டனை வழங்கக்கூடாது என விசாரித்து அவருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்குமாறும் மனுதாரர்கள் வேண்டுகோள் விடுத்தனர். (இ-7)

# மக்களின் பாதுகாப்பிற்காகவே அவசரகாலச் சட்டம் அமுல்

## உதவி பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு



(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் சாவகச்சேரி கொடிகாமம் பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரன், உறுப்பினர் வை.ஜெகதாஸ், பிரதேச சிறுவர் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள், பாடசாலை அதிபர், கிராம உத்தியோகத்தர், பொது மக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதில் தென்மராட்சி பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் தசநாயக்க உரையாற்றுகையில்,

தற்போது நாட்டில் அவசரகாலச் சட்டம் போடப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடும்பத்தினதும் பிள்ளைகளினதும் பாதுகாப்பிற்காகவும் அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

10 வருடகாலமாக ஒரு பிரச்சினையும் இல்லை. அண்மையில் ஐ. எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளால் பிரச்சினை ஏற்பட்டது. பொலிஸாரும்படையினரும் இணைந்து ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை முடிவுக்கு கொண்டு வந்துள்ளோம். எனக்கு நம்பிக்கையுள்ளது இனி குண்டு வெடிப்பு நடைபெறாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-114)

# கஞ்சாவுடன் கைதானவர்களை பொலிஸ் காவலில் வைத்து

## விசாரிக்க உத்தரவு

மன்னார் பேசாலை உருத்திபுரம் கிராம பகுதியில் கேரளக் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களில் இருவரை பொலிஸார் தடுத்து வைத்து விசாரணை செய்ய மன்னார் நீதவான் நீதிமன்றம் உத்தரவு வழங்கியிருப்பதுடன் ஒருவரை எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் ரி.சரவணராஜா கட்டளை பிறப்பித்தார்.

பேசாலை உருத்திபுரம் கிராமப் பகுதியை நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை அதி காலை பாதுகாப்புப் படையினர் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தியபோது 73 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவை கைப்பற்றியிருந்தனர்.

காட்டுப்பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட இக் கஞ்சாப் பொதிகளில் இருவர் காட்டுப் பகுதியில் தலா 2 1/4 கிலோ கஞ்சாவை தங்கள் வசம் வைத்திருந்த போதும் மற்றைய நபர் வீட்டிலும் 2 1/4 கிலோ கஞ்சாவை வைத்திருந்த போதும் கைது செய்யப்பட்டனர்.

இம் மூவரையும் பேசாலை பொலிஸார் நேற்று திங்கட்கிழமை மன்னார் நீதவான் நீதிமன்றில் நீதவான் ரி.சரவணராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தினர். அதில் இருவரை பொலிஸாரின் கோரிக்கைக்கு அமைய எதிர்வரும் 31.5.2019 வரை தடுத்து வைத்து விசாரணை செய்ய நீதவான் உத்தரவிட்டார்.

வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டவர் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதவான் கட்டளை பிறப்பித்தார். (9-285)

# கிராம மக்களை அச்சுறுத்தியவரை துரத்திப் பிடித்த வவு.பொலிஸார்

## இடியன் துப்பாக்கியும் மீட்பு

(குருமன்காடு)

வவுனியா, நெளுக்குளம் சாம்பல்தோட்டம் சந்திப்பகுதியில் நேற்று முன்தினம் மதுபோதையில் வந்து கிராம மக்களை அச்சுறுத்திய நபர் ஒருவரை இடியன் துப்பாக்கியுடன் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுரா அபேயவிக்கிரம தலைமையின் கீழ் செயற்படும் போதை ஒழிப்புப்பிரிவினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது நபர் ஒருவர் மது போதையில் கிராம மகக்களை அச்சுறுத்தி வருவதாக கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் சாம்பல்தோட்டம் டிஸ்கோ சந்திப்பகுதியில் குறித்த நபரின் வீட்டிற்குச் சென்றுள்ளனர்.

பொலிஸாரைக் கண்டதும், குறித்த நபர் தப்பி ஓடியுள்ளார். துரத்திச் சென்ற பொலிஸார் அவரைக் கைது செய்து அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது இடியன் துப்பாக்கி ஒன்றினை அவர் வைத்திருந்தமை பொலிஸாருக்குத் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து குறித்த நபர் இடியன் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளார். அப் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய நபரே மேற்படி கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் நீதிமன் றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பொலிஸார் மேலும்தெரிவித்துள்ளனர். (9-250)

# வவுனியாவில் படையினரால் சுற்றிவளைக்கப்பட்ட மர்ம வீடு

# தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் ஆவணங்கள் மீட்பு



(குருமன்காடு)

வவுனியா மரக்காரம்பளையிலுள்ள கைவிடப்பட்ட மர்ம வீடு ஒன்று நேற்றுக் காலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சில பொருட்கள், ஆவணங்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை படையினர் மற்றும் புலனாய்வுப்பிரிவினர் இணைந்து மரக்காரம்பளையிலுள்ள பாவனையற்ற, கைவிடப்பட்ட வீடு ஒன்றை நீதிமன்ற அனுமதியுடன் சோதனை நடவடிக்கை மேற்கொண்டனர்.

அங்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உடல் அங்கிகள், ஆவணங்கள், மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

இது குறித்து நீதிமன்ற அறிவுறுத்தலின் படி மேலதிக விசாரணைகளை பொலிஸாரும் புலனாய்வுப்பிரிவினரும் இணைந்து மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-250)

# பகிரங்க ஏலவிற்பனை

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்பட்ட படகுகள் வெளியிணைப்பு இயந்திரங்கள், மின் பிறப்பாக்கிகள், துவிச்சக்கர வண்டிகள், சவள்கள், மண் வெட்டிகள் மற் றும் கோடரிகள் ஆகியவற்றின் பகிரங்க ஏல விற்பனையானது எதிர்வரும் 2019.06.08 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ள தாக நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (9)




# இழப்பீடு வழங்குவதில் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக உருத்திரபுரீஸ்வர விவசாயிகள் குற்றச்சாட்டு

## அரச அதிபரிடம் கமக்கார அமைப்பு முறையீடு

(கிளிநொச்சி)

வெள்ள அழிவுகள் பதியப்பட்டும் இழப்பீட்டுக் காப்புறுதி வழங்கப்படாமல் விவசாயிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக உருத்திரபுரீஸ்வர கமக்கார அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

விவசாய திணைக்களத்தினருடன் இணைந்து கொழும்பில் இருந்து வந்த குழுவினர் கடந்த ஜனவரி மாதம் வெள்ள அழிவை பதிவு செய்திருந்தனர். அதனடிப்படையில் விவசாயிகளுக்கு இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் உருத்திரபுரம் kn 32 பிரிவைச் சேர்ந்த 215 விவசாயிகளுக்கும் இழப்பீட்டுக் காப்புறுதி வழங்கப்படவில்லை.

தனிப்பட்ட காரணங்களுக்காக குறித்த பிரிவு விவசாயிகள் பழிவாங்கப்படுவதாக கமக்கார அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. அத்துடன் நேற்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரை சந்தித்து மேற்படி விடயம் தொடர்பாக முறையிட்டுள்ளதாகவும் குறித்த அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (9)

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிப்பு



(பனிக்கன்குளம்)

புலமைப்பரிசில் பரீட்சையில் முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட சித்தியடைந்த 40 மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முல் லைத்தீவு, முள்ளியவளை கணு க்கேணி கிழக்கு பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் தண்ணீரூற்று இந்து தமிழ் கலவன் பாடசாலை, முள் ளியவளை கலைமகள் வித்தி யாலயம், முல்லைத்தீவு தமிழ் வித்தியாலயம், வற்றாப்பளை மகா வித்தியாலயம், முல்லை த்தீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் ஆகிய பாடசா லைகளைச் சேர்ந்த 40 மாண வர்கள் கௌரவிக்கப்பட்டிருந் தனர்.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் சிவசக்தி ஆனந்தன், கரைதுறைப்பற்று பிரதேச சபை யின் தவிசாளர் தவராசா, கரை துறைப்பற்று பிரதேச சபை உறுப் பினர் த.அமலன், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர் கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (9-281)

# சங்கிலிய மன்னனின் நினைவு தினத்தை முன்னிட்டு கிரியைகள்



(கண்டாவளை)

மன்னன் சங்கிலியனின் 400 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவில் கிரியைகள் இடம்பெற்றன. கிளிநொச்சி உருத்திரபுரத்தில் அமைந்துள்ள சிவனாலயத்திற்கு அருகில் உள்ள நீர் தெக்கத்தில் குறித்த கிரியை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வடமாகாண சபையின் முன் னாள் உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். முல்லைத்தீவு வற்றாப்பளையில் நந்திக் கடற்கரையோரத்திலும் பிதிர்க்கடன் நிறைவேற்றப்பட்டது. (9-315-312)

# சமய நல்லிணக்க கலந்துரையாடல்



(குருமன்காடு)

வவுனியாவில் சமய நல்லிணக்கம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று வவு னியா நகரசபை மண்டபத்தில் மாவட்ட சர்வமதக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தற்கொலை தாக்கு தலையடுத்து மதங்களுக்கு இடையில் உள்ள நல்லிணக்கம் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், மத நல் லிணக்கத்தை ஏற்படுத்த மேற் கொள்ள வேண்டிய வழிவகைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

இதில் இந்து, இஸ்லாம், பௌத்தம், கத்தோலிக்க மதத் தலைவர்கள், சமூக மட்ட பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-250)

### றிசாத் குற்றம் செய்திருந்தால்

# நீதியின் முன் நிறுத்தி விசாரியுங்கள் வீண்பழி சுமத்த வேண்டாம்

## வவு.நகரசபை உறுப்பினர் எம்.லரீப்

அமைச்சர் றிசாத் பதியுத்தீனின் குரலை நசுக்குவதற்காகவும், அவரை அரசியலில் இருந்து ஓரங்கட்டி சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தை அடிமைச் சமூகமாக வைத்திருக்கலாம் என இனவாத சக்திகள், எண்ணுவது மனவேதனை அளிக்கின்றது என வவுனியா நகர சபை உறுப்பினர் ஏ.ஆர்.எம் லரீப் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய சூழ்நிலையில் சிறுபான்மை சமூகமாகிய முஸ்லிம்களுக்காக இந்நாட்டின் உயரிய சபையாகிய பாராளுமன்றத்திலும்.சரி, அமைச்சரவையிலும் சரி உரத்துக் குரல் கொடுத்து உரிமைகளை பெற்றுக் கொள்ள முயலுகின்ற சாதனையாளன் றிசாத் பதியுதீனின் குரல்களை நசுக்குவதற்கு முனைகின்றனர். தொடர்ச்சியாக திட்டமிட்டு பொய்க் குற்றச்சாட்டுகளை சுமத்தி வருகின்றனர்.

இதற்கென இனவாத குழுக்கள் ஒற்றுபட்டு முனைப்புடன் செயற்படுவது மிகவும் வேதனையாகவுள்ளது. சிறுபான்மை மக்களின் துன்பகரமான வாழ்க்கையை, வலிகளை நன்குணர்ந்த றிசாத் பதியுதீன் சிறுபான்மை சமூகத்தின் வாழ்வை மேம்படுத்துவதற்காவும், உரிமைகளை வென்று எடுப்பதற்காவும் அரசியலில் கால்வைத்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

அண்மையில் நடைபெற்ற முஸ்லிம் பெயர் தாங்கிய நாசகாரக் கும்பல்களின் மிலேச்சத்தனமான செயற்பாட்டை வைத்துக்கொண்டு இந்நாட்டிற்கு விசுவாசமாவும் அர்ப்பணிப்புடனும் அந்நிய செலாவணியினை அதிகமாக பெற்றுக்கொடுப்பதற்கும் இரவு-பகலாக செயற்படுகின்ற அமைச்சரை பழி தீர்ப்பதற்கான முயற்சியில் இறங்கியுள்ளன. மொட்டைத் தலைக்கும் முழுங்காலுக்கும் முடிச்சுப்போடுவது போன்று சூழ்ச்சி செய்கின்றனர்.

அமைச்சர் குற்றம் செய்தால் அவரை நீதியின் முன் நிறுத்தி நிரூபிக்காமல், அதற்கு திராணியற்றவர்கள் கடந்த 2018 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஆட்சி மாற்றத்துக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை என்ற ஒரே காரணத்துக்காகவும் சிறுபான்மை சமூகத்தை அடிமையாக்குவதற்கும் தங்களது பொய்ப் பரப்புரைகளை கட்டவிழ்த்து ஆடுகின்றனர். அவர்களின் சதி முயற்சி இறைவனின் உதவியினால் தோல்வியிலேயே முடியும் என மேலும் தெரிவித்துள்ளார். (9-250)

# கிளிநொச்சி பாடசாலைகளில் நேற்று திடீர் சோதனை

கிளிநொச்சி மகாவித்தியாலயம் உள்ளிட்ட சில பாடசாலைகளில் நேற்று விசேட சோதனைகள் இடம்பெற்றன. பொலிஸாரும் படையினரும் இணைந்து குறித்த சோதனை நடவடிக்கையினை முன்னெடுத்திருந்தனர்.

நேற்றுக் காலை கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் மேற்படி சோதனைகள் முன்னெடுக்கப்பட்டதுடன், பலத்த பாதுகாப்பு கடமைகளிலும் பொலிஸார் மற்றும் படையினர் ஈடுபட்டனர். பாடசாலை சூழலில் பொலிஸ் மோப்ப நாய்கள் கொண்டு தேடுதலும் மேற்கொள்ளப்பட்டது.

21 ஆம்திகதி தாக்குதலின் பின்னர் பாடசாலைகளின் பாதுகாப்பு பலப்படுத்த ப்பட்டு வந்தது. எனினும் கெடுபிடிகள் படிப்படியாக குறைவடைந்து வந்த நிலை யில் நேற்று திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (9)

# குறைகளைச் சுட்டிக்காட்டியும் ஒரு வருடமாக திருத்தப்படாத வீதி

வீதி திறப்பு விழாவின் போதே மக்கள் பிரதிநிதிகளிடம் குறைகள் சுட்டிக்காட்டப்பட்ட வட்டக்கச்சி புதுப்பால தபாற்பெட்டி சந்தி இணைப்பு வீதி ஒரு வருடங்கள் கடந்தும் திருத்தப்படவில்லை என பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீதி கடந்த 2017 ஆம் ஆண்டு தேசிய நல்லிணக்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டது. அண்ணளவாக 650 கிலோ மீற்றர் தூரமுடைய வீதியை 8.5 மில்லியன் ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டு, 6.8 மில்லியன் ரூபாவுக்கு ஒப்பந்தகாரரால் எடுத்துத் திருத்தப் பணிகள் மேற் கொள்ளப்பட்டன.

குறித்த வீதியின் புனரமைப்புப்பணிகள் நிறைவுறுத்தப்பட்டு கடந்த 2018 ஆம் ஆண்டு அரசியல் பிரமுகர்கள், அரச அதிகாரிகள் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. ஆனால் வீதி திறப்பு விழாவின் போதே அப்பகுதி மக்களால் குறித்த வீதியில் இருந்த குறைபாடுகள் அதிகாரிகளுக்கும் அரசியல் பிரமுகர்களுக்கும் சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால் ஒரு வருடம் கழிந்தும் இதுவரை குறித்த வீதி திருத்தியமைக்கப்படவில்லை. குறித்த கொங்கிறீட் வீதியில் வெடிப்புகள் ஏற்பட்டு மக்கள் பயணிக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். பல நாட்களாக கோரிக்கை விடுக்கப்பட்டு புனரமைக்கப்பட்ட வீதியைப் பயன்படுத்த முடியாத வகையில் புனரமைத்துள்ளார்கள் என பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (9)

## கைக்குண்டு மீட்பு!

முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் பனை வடலியில் வைக்கப்பட்டகைக்குண்டு ஒன்று நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

அளம்பில் பகுதி வீதியில் பனை வடலி மட்டையில் வைக்கப்பட்டிருந்த நிலை யிலான கைக்குண்டு ஒன்று பொதுமக்களால் இனம் காணப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து தொடர்ந்து முல்லைத்தீவு பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டு அதனை நீதிமன்ற உத்தரவிற்கு அமைய சிறப்பு அதிரடிப்படையினரை கொண்டு அகற்றியுள்ளார்கள். (9-281)

# யுத்தத்தில் கைவிடப்பட்ட படகுகளை பாவனைக்குட்படுத்த நடவடிக்கை

இறுதி யுத்தத்தின் போது முல்லைத்தீவு மாவட்டத்தில், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கைவிடப்பட்ட படகுகள் படையினரால் கைப்பற்றப்பட்டு முள்ளிவாய்க்கால் கப்பலடி கடற்கரைப்பகுதியில் காட்சிப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மக்களின் 50 பைபர்கிளாஸ் படகுகளை அண்மையில் 68 ஆவது படைப்பிரிவினர் கடற்றொழில் நீரியல்வளத்திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளார்கள்.

இந்தப் படகுகளில் பல படகுகள் பாவனைக்கு உட்படுத்தக் கூடிய நிலையில் உள்ளன.

இந் நிலையில் அவற்றை இனம் கண்டு பிரதேச செயலாளர் ஊடாக கடற்றொழில் செய்யும் குடும்பங்களுக்கு வாழ்வாதாரமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரி எஸ்.கலிஸ்ரன் தெரிவித்துள்ளார். (9)



# கிராம சக்தி மக்கள் சங்கத்துடனான கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேசத்தில் கடந்த 2017 ஆம் ஆண்டு கிராம சக்தி கிராமங்கள் என்னும் தெரிவில் வரையறுக்கப்பட்ட திருவையாறு மேற்கு கிராம சக்தி மக்கள் சங்கத்துடனான கலந்துரையாடல் கடந்த வாரம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

கிராம சக்தி சங்கத்தின் தலைவர் க.கணபதிப்பிள்ளை மற்றும் செயலாளர் கோ.சசிகுமார் தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

விவசாயத்தை அடிப்படையாக கொண்ட இக் கிராமத்தின், கிராமசக்தி உறுப்பினர்களின் முன்னுரிமைப்படுத்தப்பட்ட சிபார்சின் அடிப்படையில் 25 ஆயிரம் ரூபா வீதம் 20 பேருக்கு உற்பத்தி ஊக்குவிப்பு நிதி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும் கிராம அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் நோக்காக மேட்டுநிலப் பயிர் செய்கைக்கான நீரோட்ட வடிகான்களை ஏற்படுத்துவதற்கும் தங்கள் கிராமத்தில் அமைந்திருக்கும் பாடசாலைக்கு உற்பத்தி செய்யும் பாலை விநியோகிப்பதற்கும் பால் சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்வதற்கும் திட்டமிட்டுள்ளனர்.

தரம் ஒன்று முதல் 5 வரையான மாணவர்களுக்கு ஒரு கப் பால் வழங்கும் செயற்றிட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளமையினை தங்கள் கிராமசக்தி சங்கத்தின் ஊடாக சேவை மற்றும் வருமான நோக்க அடிப்படையில் தெரிவு செய்துள்ளனர்.

இக் கிராம சக்தி நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் பழனியாண்டி நந்தகுமார், கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் விஸ்வநாதன் வித்தியானந்தன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (9)

## அந்தணர் ஒன்றியத்தின்

# கலை இலக்கிய கலாசார பெருவிழா





வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் கலை இலக்கிய கலாசார பெருவிழா வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் தலைவர் சிவசிறி. சிவ.குகநாத குருக்கள் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வவுனியா சிந்தாமணிப் பிள்ளையார் ஆலய கலாசார மண்டபத்தில் நேற்று முன் தினம் காலை முதல் மாலை வரை நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் மற்றும் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த அந்தணர்கள் மற்றும் கலைஞர்கள் கலந்து கொண்டிருந்தனர்.


இந்த நிகழ்வில் சிவச்சாரியார்கள், கலைஞர்கள் என 121 பேர் வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தினால் கௌரவிக்கப்பட்டிருந்தனர். சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவிகளால் தமிழ் மொழி வாழ்த்தும், நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியின் மாணவிகளின் நடனம் மற்றும் சிவதாண்டவம், தமிழ் மாமணி தமிழருவி சிவகுமாரன் தலைமையில் சுழலும் சொற்போர் நிகழ்வும் நடைபெற்றது. கலைநிகழ்வுகளில் பங்குபற்றிய மாணவிகளுக்கும் கௌரவம் வழங்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறை கலைப்பீடத்தின் தலைவர் கலாநிதி மகேஸ்வரக் குருக்கள் பாலகைலாசநாத சர்மா மற்றும் வைத்திய கலாநிதி வரத



ராஜா சுரேந்திரன், வைத்திய கலாநிதி குலசிங்கம் அகிலேந்திரன், கலாநிதி தமிழ்மணி அகளங்கன், வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (9-250)

# மன்னாரில் ஈரோஸ் அமைப்பின் அலுவலகம் திறப்பு



மன்னார் பேசாலையில் ஈரோஸ் அமைப்பின் அலுவலகம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் மாவட்டக் கிளைத் தலைவர் ஜே.அமல்ராஜ் குரூஸ் தலைமையில் திறந்து வைக்கப் பட்டது.


இதில் ஈழப்புரட்சி (ஈரோஸ்) அமைப்பின் ஆலோசகரும் நிறைவேற்றுக்குழு உறுப்பினருமான நா.நு.இராசநாயகம், கட்சியின் இணைச் செயலாளர்களான அ.எ.இராசநாயகம், இரா.இராஜஇராஜேந்திரன், கொள்கைப்பரப்பு செயலாளர் ஜீவன்இராஜேந்திரன்,கட்சி உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். (9-285)

# பாரதம்

## முன்னாள் பிரதமர் நேருவின் நினைவுதினம் அனுஷ்டிப்பு







(டில்லி)

முன்னாள் பிரதமர் நேருவின் 55 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, சோனியா காந்தி உள்ளிட்ட முக்கிய தலைவர்கள், அவரின் நினைவிடத்திற்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் 55 ஆவது நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

நேருவின் நினைவு தினத்தை முன்னிட்டு சாந்திவன் பகுதியிலுள்ள நேரு நினைவிடத்தில், ஐக்கிய முற்போக்கு கூட்டணி தலைவர் சோனியா காந்தி, காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், குடியரசு முன்னாள் துணைத்தலைவர் ஹமீது அன்சாரி, காங்கிரஸ் சிரேஷ்ட தலைவர் மோதிலால் வோரா உள்ளிட்டோர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (7)

## புதிய இந்திய அரசுடன் பேச்சுவார்த்தைக்கு தயார்

### பாக்.வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)

புதிதாக அமைந்துள்ள இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராகவிருப்பதாக பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஷா மெஹ்முத் குரேஷி தெரிவித்துள்ளார்.


இஸ்லாமாபாத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து தொடர்ந்தும் பேசிய அவர், "இந்தியாவில் புதிதாக பொறுப்பேற்றுள்ள மத்திய அரசுடன், இரு நாடுகளுக்கு இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தைக்கு பாகிஸ்தான் அரசு தயாராகவுள்ளது.

அந்தவகையில், இரு நாடுகளும் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தி அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண



வேண்டும்" என மேலும் தெரிவித்தார். (7)



நான்கு நாள் அரசுமுறை பயணமாக ஜப்பான் சென்றுள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஜப்பான் மன்னர் நாருஹிட்டோவை சந்தித்த முதல் வெளிநாட்டு பிரமுகர் என்ற சிறப்பைப் பெற்றுள்ளார்.

## லேபர் கட்சியின் புதிய தலைவராக Anthony Albanese நியமனம்!



(சிட்னி)

அவுஸ்திரேலிய லேபர் கட்சியின் புதிய தலைவராக Anthony Albanese போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தலைவர் பதவிக்கு போட்டியிடுவதற்கான பரிந்துரைகளைத் தாக்கல் செய்வதற்குரிய காலப்பகுதி நிறைவடைந்துள்ள நிலையில், Anthony Albanese மாத்திரமே இதற்கு விண்ணப்பித்திருந்தமையினால் அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (7)

## ஆப்கானில் அரச ப... தலிபான் தளபதிகள் ...

ஆப்கானிஸ்தானின் மேற்கு பகுதியிலுள்ள கந்தஹார் மாகாணத்தில் இரண்டு தலிபான் தளபதிகள் உட்பட 15 தீவிரவாதிகளை அரச படையினர் சுட்டுக் கொன்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் நாட்டின் மேற்கு பகுதியில் தலிபான் தீவிரவாதிகள் மற்றும் பல்வேறு சிறிய தீவிரவாத குழுக்களின் ஆதிக்கம் அண்மைக் காலமாக மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளது.

தீவிரவாதிகள் மீது கருணை காட்டாமல் நடவடிக்கை எடுக்குமாறு அந்த நாட்டின் இராணுவம்



மற்றும் பொலிஸாரைக் கொண்ட கூட்டுப்படைகளுக்கு ஜனாதிபதி அஷ்ரப் கா...

## நேபாளத்தில் தொட... நால்வர் பலி; ப...

(காத்மண்டு)

நேபாளத்தில் மேற்கொள்ளப்பட்ட அடுத்தடுத்த குண்டுத் தாக்குதல்களில் நால்வர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் அடுத்தடுத்து மூன்று குண்டுத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முதல் 2 தாக்குதல்கள் அடுத்தடுத்து இடம்பெற்றுள்ளன. மூன்



## 50 வருடங்களின் பின்னர் சா... நதி நீர் இணைப்புத் திட்டம்-பா.ம...

50 வருடங்களாக முன்வைக்கப்பட்ட கோதாவரி - காவிரி இணைப்புத் திட்டத்தை செயற்படுத்த மத்திய அரசு முன்வந்துள்ளமை வரவேற்கத்தக்கது என பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இது தனது கனவுத் திட்டம் எனவும், தனிப்பட்ட முறையில் பா.ம.கவுக்கு கிடைத்த வெற்றி எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ராமதாஸ் நேற்று திங்கட்கிழமை வெளியிட்ட அறிக்கையில், "மத்தியில் நரேந்திரமோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, அடுத்த சில நாட்களில் பதவியேற்க உள்ள நிலையில், தமிழகத்தின் நலன் கருதி



கோதாவரி - காவிரி இணைப்புத் திட்டம் செயற்படுத்தப்படும் என்று மத்திய நீர்வளத்துறை அமைச்சர் நிதின் கட்காரி அறிவித்துள்ளார். பா.ம.கவின் கனவுத் திட்டமான இதை நிறைவேற்ற மத்திய அரசு முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது.

மக்களைத் தேர்தலில் தமிழ் நாட்டில் அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் இணைவதற்கு பா.ம.க. முன்

# வெளிநாடு

## ...டையினர் தாக்குதல்
## ...் உட்பட 15 பேர் பலி




கானி உத்தரவிட்டுள்ளார்.

இந்த படைகளுக்கு உதவியாக அமெ ரிக்கா தலைமையிலான நேட்டோ படையினரும் வான்வழியாக சென்று தீவிரவாதிகளை வேட்டையாடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில், கந்தஹார் மாகாணத்தின் தெற்கு பகுதியில் உள்ள காக்ரிஸ் மாவட்டத்தில் நேற்று முன்தினம் கூட்டுப் படைகள் நடத்திய தேடுதல் வேட்டையில் குலாம் மற்றும் முஸ்தபா என்ற இரண்டு தலிபான் தளபதிகள் உட்பட 15 பயங்கரவாதிகளை அரச படையினர் சுட்டுக் கொன்றதாக அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது. (7)

## ...டர் குண்டுவெடிப்பு
## ...பலர் படுகாயம்



...றாவது சம்பவம் சில மணி நேர இடைவெளியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவங்கள் குறித்த விசாரணை தொடரும் வேளையில், சட்டவிரோதக் கம்யூனிஸ்ட் குழு அதற்குக் காரணமாயிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. இதேவேளை, குண்டுத் தாக்குதல்களை அடுத்து நேபாளத்தின் பல பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (7)

## ...சாத்தியமாகும்
## ...ா.ம.க.வரவேற்பு

...வைத்த 10 கோரிக்கைகளில் கோதாவரி - காவிரி இணைப்புத் திட்டத்தைச் செயற்படுத்த வேண்டும் என்பது மிகவும் முக்கியமான கோரிக்கை ஆகும்.

இந்தத் திட்டத்தை செயற்படுத்த வேண்டும் என்று மத்திய, மாநில அரசுகளை பா.ம.க. தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. அத்திட்டத்திற்கு செயல் வடிவம் கொடுக்க மத்திய அரசு முன்வந்திருப்பது தமிழகத்திற்கு கிடைக்கும் நன்மை ஆகும்.

கோதாவரி - காவிரி இணைப்புத் திட்டம் 1970 ஆம் ஆண்டுகளில் இந்திரா காந்தி ஆட்சியின் போதே நீர் மேலாண்மை வல்லுநர்களால் முன் வைக்கப்பட்ட திட்டம் ஆகும். கிட்டத்தட்ட 50 ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டிருந்த இத்திட்டத்திற்கு இப்போது செயல் வடிவம் கொடுக்க மத்திய அரசு முன்வந்துள்ளது.

இது தமிழகத்தின் வேளாண்மை வளர்ச்சிக்கு மிகப்பெரிய அளவில் துணையாக இருக்கும் என்பது மட்டுமன்றி, தமிழ்நாட்டுக்கு காவிரியில் ஆண்டு முழுவதும் தட்டுப்பாடின்றி தண்ணீர் கிடைக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்திட்டம் தமிழ்நாட்டின் வேளாண் தேவையை மட்டுமன்றி, குடிநீர் தேவையையும் நிறைவேற்றும் என்பது மகிழ்ச்சியான செய்தியாகும்.

உலக வங்கி அல்லது ஆசிய வளர்ச்சி வங்கியிடம் நிதி பெற்று இத்திட்டத்தை செயற்படுத்த மத்திய, மாநில அரசுகள் முன்வர வேண்டும். இந்தத் திட்டம் காய்ந்த பூமியான தமிழகத்தை பசுமை பூமியாக மாற்றும்.

கோதாவரி - காவிரி இணைப்புத் திட்டத்தை விரைந்து செயற்படுத்த மத்திய, மாநில அரசுகளுடன் இணைந்து பா.ம.கவும் நடவடிக்கை எடுக்கும்" என மேலும் அவர் குறிப்பிட்டுள்ளார். (7)

## கருவில் உள்ள குழந்தையை அழிப்பது
## கூலிப்படையை ஏவி கொலைசெய்வதற்கு சமம்
## போப் பிரான்சிஸ் கவலை

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தில் கருக்கலைப்புக்கு தடைவிதிக்கும் சட்டம் அண்மையில் அமுலுக்கு வந்தது. பெண் உரிமை ஆர்வலர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்தச் சட்டத்தை இரத்து செய்யக்கோரி நீதிமன்றில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

இந்த நிலையில், வோஷிங்டன் நகரில் வாடிகன் சார்பில் கருக்கலைப்புக்கு எதிரான மாநாடு நடைபெற்றது. இதில் போப் ஆண்டவர் பிரான்சிஸ் பங்கேற்று உரையாற்றினார். அப்போது அவர், "கருக்கலைப்பு விவகாரம் ஒரு மதரீதியான பிரச்சினையல்ல, மாறாக மனிதாபிமான பிரச்சினை" என்று தெரிவித்தார்.



பிரச்சினையை தீர்க்க மனித உயிரை பறிப்பது சட்டபூர்வமானதா? என்று கேள்வி எழுப்பிய அவர், கருவில் உள்ள குழந்தையை அழிப்பது கூலிப்படையை ஏவி கொலை செய்வதற்கு சமம் என்று வேதனை தெரிவித்தார்.

"கரு சரியாக வளரவில்லை என்பதால் கருக்கலைப்பு செய்வதை ஏற்கமுடியாது. அது மனிநேயமற்ற செயல். மிகவும் பலவீனமான முறையில் பிறந்தாலும் பரவாயில்லை, குழந்தைகளை வரவேற்போம்" என மேலும் தெரிவித்தார். (7)

## அவுஸ்திரேலிய அமைச்சரவையில்
## முதன்முதலில் பெண்களுக்கு முக்கியத்துவம்



(மெல்போர்ன்)

அவுஸ்திரேலிய வரலாற்றில் முதன்முறையாக பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், பிரதமர் ஸ்கொட் மொரிசன் தலைமையிலான அமைச்சரவையில் 7 பெண்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, பாதுகாப்புத்துறை அமைச்சராக லின்டா ரெய்னால்ட்ஸ், வெளியுறவுத்துறை மற்றும் மகளிர் நலத்துறை அமைச்சராக மரிசே பய்னே உட்பட மொத்தம் 7 பெண்களுக்கு அமைச்சுப்பதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நியமனங்களின் மூலம் அரசின் திட்டங்கள் மக்களுக்கு விரைவாகச்சென்றடையும் என்று நம்புவதாக பிரதமர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

151 இடங்களைக் கொண்ட அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்துக்கு கடந்த 18 ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெற்றது.

இந்தத் தேர்தலில் பிரதமர் ஸ்கொட் மொரிசனின் லிபரல் கட்சி தேசிய கூட்டணிக்கும் பில் சார்ட்டன் தலைமையிலான தொழிற்கட்சிக்கும் இடையே கடும் போட்டி நிலவியது.

தேர்தலுக்கு முந்தைய கருத்துக்கணிப்புக்கள் மொரிசனுக்கு சாதகமான கணிப்பாக இல்லாத நிலையில் அவற்றை முறியடித்து பிரதமர் ஸ்கொட் மொரிசன் தலைமையிலான ஆளுங்கட்சி மீண்டும் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது.

இந்நிலையில், மொரிசன் தலைமையிலான புதிய அமைச்சரவையில் பெண்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## வனப்பகுதியில் மாயமான பெண்
## 17 நாட்களுக்கு பிறகு மீட்பு

(ஹொனாலுலு)

அமெரிக்காவில் வனப்பகுதியில் மாயமான அமண்டா எல்லரை 17 நாட்களுக்கு பிறகு மீட்புக்குழுவினர் மீட்டனர். வழி தெரியாமல் காட்டில் சிக்கி கொண்ட அவர் இலை, தழைகளை சாப்பிட்டு உயிர் பிழைத்திருந்ததாக கூறியுள்ளார்.

அமெரிக்காவின் ஹவாய் மாகாணத்தை சேர்ந்தவர் அமண்டா எல்லர் (வயது 35). யோகா பயிற்சியாளரான இவர் கடந்த 8 ஆம் திகதி மக்கோவா நகரில் உள்ள வனப்பகுதிக்கு தனது காரில் சென்றார்.

பின்னர் அவர் அங்கு ஒரு இடத்தில் காரை நிறுத்திவிட்டு வனப்பகுதிக்குள் நடந்து சென்றார். அதன் பின்னர் அவர் திரும்பவில்லை. இதையடுத்து அமண்டா எல்லர் குடும்பத்தினர் அவரை செல்போனில் தொடர்பு கொள்ள முயன்றனர்.

ஆனால் அவர் தொலைபேசி பணப்பையை காரிலேயே விட்டு சென்றது தெரியவந்தது. இதையடுத்து அவர் மாயமானதாக கருதி அவரது குடும்பத்தினர் மற்றும் அதிகாரிகள் தீவிர தேடுதல் வேட்டை நடத்தினர். சுமார் 2 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான அடர்ந்த காடு என்பதால் அமண்டா எல்லரை உடனடியாக கண்டுபிடிக்க முடியவில்லை. 1000க்கும் மேற்பட்டோர் தேடும் பணியில் ஈடுபட்டும் எந்த பலனும் இல்லை.

இதையடுத்து, அமண்டா எல்லரை கண்டுபிடித்து தருபவருக்கு 50 ஆயிரம் டொலர் பரிசாக வழங்கப்படும் என அவரது குடும்பத்தினர் அறிவித்தனர்.

அவர்கள் அதோடு நிறுத்திவிடாமல் ஹெலிகொப்டர் ஒன்றை வாடகைக்கு எடுத்து அவர்களும் தேடுதல் வேட்டையில் இறங்கினர்.

இந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை மாலை, அமண்டா எல்லர் கண்டுபிடிக்கப்பட்டார். கார் நின்ற இடத்திலிருந்து சுமார் 7 கி.மீ. தொலைவில் வனப்பகு-



தியில் உள்ள நீர்வீழ்ச்சிக்கு அருகே அமண்டா எல்லர் இருப்பதை மீட்புக் குழுவினர் கண்டனர்.

2 கால்களும் பலத்த காயம் அடைந்த நிலையில் நகரமுடியாதபடி அமண்டா எல்லர் அமர்ந்திருந்தார்.

மேலும் அவர் மிகவும் மெலிந்தும், சோர்வாகவும் காணப்பட்டார். இதையடுத்து, மீட்புக் குழுவினர் அவரை பாதுகாப்பாக மீட்டு ஹெலிகொப்டரில் ஏற்றி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். (7)

# பாதுகாப்பு நிலைமை தொடர்பில் வெளிநாட்டுத் தூதுவர்கள் திருப்தி

## சபாநாயகர் கூறுகிறார்



(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்பு நிலைமை தொடர்பில் வெளிநாட்டுத் தூதுவர்கள் திருப்தி கொண்டிருப்பதாக சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு நிலைமை தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற மதிப்பீட்டுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றிய சபாநாயகர் சுற்றுலாப் பயணிகளுக்காக சில நாடுகள் விதித்திருந்த தடை விரைவாக நீக்கப்படும் என்றும் சபாநாயகர் சுட்டிக்காட்டினார். (இ-7)

# பாதுகாப்பில் கூடுதல் கவனம் செலுத்தாமையே பயங்கரவாதத் தாக்குதலுக்குக் காரணம்

## முன்னாள் தளபதி தயா சுட்டிக்காட்டு



(கொழும்பு)

தேசிய கொள்கை ரீதியாக பாதுகாப்பை உறுதிப்படுத்தினால் மட்டுமே சமூக ரீதியாக பலமான கட்டமைப்புடன் எம்மால் முன்னோக்கி நகர முடியுமாக இருக்கும் என முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

"2009 ஆம் ஆண்டு மே மாதத்துடன் நாம் இலங்கையிலிருந்து பயங்கரவாதத்தை முற்றாக இல்லாதொழித்தோம்.

யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் காலத்தில் மட்டுமல்லாது, யுத்தத்துக்கு பின்னரான காலத்திலும் அனைவரும் தேசிய பாதுகாப்பு குறித்து அவதானம் செலுத்த வேண்டும். தேசிய பாதுகாப்புக்கே அனைத்து தரப்பினரும் முக்கியத்துவம் வழங்க வேண்டும்.

10 வருடங்களாக நாட்டில் முழுமையான சமாதானம் நிலைநாட்டப்பட்டிருந்தமையால், நாம் தேசிய பாதுகாப்பு குறித்து பெரியளவில் கவனம் செலுத்தவில்லை.

இவ்வாறு பாதுகாப்பு நடவடிக்கையில் கூடுதல் கவனம் செலுத்தாமல் செயற்பட்டதன் விளைவே உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலாகும்.

இதில் நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதோடு, பாதுகாப்புத் தரப்பினருக்கு மீண்டும் சவாலான நிலைமை ஏற்பட்டது எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

# தேவாலயங்களுக்குள் கொல்லப்பட்டவர்கள் தியாகிகளாகப் பிரகடனம்



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறன்று தேவாலயங்களுக்குள் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்கள் தியாகிகளாக பிரகடனம் செய்யப்படவுள்ளனர்.

கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இதனைத் தெரிவித்தார்.

பொரளையிலுள்ள தேவாலயத்தில் நேற்று முன்தினம் நடத்திய சிறப்புப் பிரார்த்தனையில் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இந்த அறிவிப்பை வெளியிட்டார். "சமயம் என்பது வாழ்க்கை. தமது சமய நம்பிக்கையினாலேயே இவர்கள் கொல்லப்பட்டார்கள். தாக்குதல்களை மேற்கொண்டவர்களுக்கு, வாழ்க்கையின் பெறுமானம் தெரியவில்லை" என்றும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார். (இ-7)

# சுற்றுலாப் பயணிகளுக்கு தேசிய காப்புறுதி

## ஒருவருக்கு 100 மில்லியன் ரூபாய்

தேசிய காப்புறுதி நிதியம், நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு புதிய காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்தவுள்ளது.

ஒரு சுற்றுலாப் பயணிக்கு 100 மில்லியன் ரூபாவை காப்புறுதியாக வழங்க தேசிய காப்புறுதி நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அதன் பிரதான நிறைவேற்று அதிகாரி சனத் ஜி.டி. சில்வா தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பிறவியின் பெரு நோக்கம்

ஒரு அம்மா வீட்டுக்காரரைப் பற்றி நிறைய குறைகளை சொல்லிக் கொண்டிருந்தார். ஒரு பெரியவரிடம் இதை முறையிட்டார். அவர் அந்த அம்மாவை உட்கார வைத்து சரிம்மா! அவரைப் பற்றிய குறைகளை பற்றி கூறுகின்றீர்கள் சரி! இன்றைக்கு அவர் செய்த நன்மைகளைப் பற்றி சொல்லுங்கள் என்று கேட்டார்.

அந்த அம்மா அவர் செய்த நல்ல காரியங்களை ஒவ்வொன்றாக சொல்லியிருக்கின்றார். ஏம்மா! இவ்வளவு நன்மைகளை செய்திருக்கின்றார். இனி என்ன உங்களுக்கு குறை? என்று கேட்டார். என்னை பாராட்ட வேண்டிய நேரத்தில் பாராட்டுவதில்லை. அலட்சியமாக நினைக்கின்றார். அது தான் குறையாக தெரிகின்றது.

சரி! இனிமேல் நீங்க அவரால் அடைந்த, இனி அடையக் கூடிய நன்மைகளை மட்டும் நினைத்துக் கொண்டு நன்மையையே பேசுவது அப்படி என்று ஒரு தீர்மானம் செய்து கொள்ளுங்கள் பார்க்கலாம் என்று சொல்லியிருக்கின்றார் அந்தப் பெரியவர்.

அந்த அம்மாவும் ஒரு வாரம் இதை ஒரு பயிற்சியாகவே செய்து பார்த்தாராம். அவ்வளவு தான். அவங்க முகத்தில் ஒரு தனி மலர்ச்சி ஏற்பட்டது. ஒருவர் மேல் குறையை கூறுவதை விட அவர் செய்த நல்ல செயல்களை நினைத்து அவருக்கு பாராட்டும் நன்றியும் சொல்லுகின்ற போது மன அமைதி ஏற்படும். முகத்தில் புன்சிரிப்பு வரும். எப்பொழுதும் சந்தோசமாக இருக்க முடியும்.

இது ஏதோ உபதேசமில்லை. அனுபவசாலிகள் சொல்லுகின்ற உண்மை. ஏன் இந்த உலகத்திலே பிறந்திருக்கின்றோம்? மனிதப் பிறவியினுடைய நோக்கம் என்ன? இந்தக் கேள்விக்கு அந்தப் பெரியவர் என்ன கூறினார் தெரியுமா?

எனக்கு என்ன தேவை? என்று உன்னை நீயே கேட்டுப்பார். மனநிறைவும் மகிழ்ச்சியும் தான் தேவை என்பது புரியும். இது தான் மனிதப் பிறவியின் பெருநோக்கம்! என்றார். மனித வாழ்வின் வெற்றிக்கெல்லாம் சிகரமானது மனநிறைவு தான். அதை உணர்ந்து கொள்கின்றது- பயிற்சி செய்கின்றது இதெல்லாம் மிகவும் சுலபம். முயற்சி தான் தேவை என்றார்.

நாம் எங்கே இருக்கின்றோம்- எப்படி இருக்கின்றோம்- எந்த இடத்தில் இருக்கின்றோம் என்பதனை முதலில் கணிக்க வேண்டும். அதாவது வயதில்-வாழ்வில்-கல்வியில்-வளத்தில்-அதிகாரத்தில் நாம் எந்த நிலைமையில் இருக்கின்றோம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அதைக் கொண்டு நமக்கும் குடும்பத்திற்கும் சுற்றத்தாருக்கும் என்ன நன்மை செய்ய முடியும் என்று பார்க்க வேண்டும். முடிந்த அளவு செய்ய வேண்டும்.

அதை செய்வதற்கு வேண்டிய திறமையை வளர்த்துக் கொள்வதற்கு திட்டம் போட்டு முறையான பயிற்சி மூலமாக வளர்க்க வேண்டும். ஒரு பெரிய இன்ப ஊற்று உள்ளத்திலே ஊறத் தொடங்கிவிடும் என்றார். எவரிடமும் எதையும் எதிர்பார்க்காதே! எதிர்பார்க்கின்றது பெரும்பாலும் ஏமாற்றத்தில் தான் முடிகின்றது. இந்த ஏமாற்றம் இன்ப ஊற்றை அடைத்து விடும் என்றார்.

நல்லது செய்கின்றதோடு விட வேண்டும். அதற்கு பதில் எதிர்பார்க்கின்றதை மறந்து விட வேண்டும். அவசியமில்லாமல் அடுத்தவர்கள் விடயத்தில் தலையிடக் கூடாது. இதனால் மற்றவர்களுக்கு நம் மேல் மதிப்பு ஏற்படும். நம் மனதிற்கு ஒரு அமைதி கிடைக்கும். மூன்று விடயங்களை நாம் முக்கியமாக பழக வேண்டும். சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுத்தல், தியாகம்.

தேவைக்குத் தகுந்த மாதிரியும் சந்தர்ப்பத்திற்கு தகுந்த மாதிரியும் இதைப் பயன்படுத்த வேண்டும். இப்படி செய்ய ஆரம்பித்தால் இந்த உலகமே நம் நட்பை விரும்பும். நமக்கு முன்னாடியும் பின்னாடியும் சூழ்ந்தும் ஊடுருவியும் இயற்கையோடு பெரிய ஆற்றல் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஒழுங்கு தவறாமல் இயங்கிக் கொண்டிருக்கின்றது. மனித செயல் ஒவ்வொன்றிற்கும் தகுந்த விளைவை இன்பமாகவோ துன்பமாகவோ கொடுக்கின்றது. இந்த உண்மையை மறக்கக்கூடாது. அந்த பேராற்றலை மதித்து நம் செயலில் அளவு-முறை-ஒழுங்கு இதை கடைப்பிடிக்க வேண்டும். இது தான் உயர்வான தெய்வ வழிபாடு.

சும்மா வேசம் போட்டுக் கொண்டிருக்கின்றது எல்லாம் ஆகாது. அந்தப் பேராற்றலோடு நம் மனம் இணைந்து கொண்டால் நமக்கு எப்பவும் மகிழ்ச்சிதான். அமைதி- நிறைவு தான் பிறவியின் நோக்கம் என்பது அப்பதான் நிறைவேறும்.

இது தான் அந்தப் பெரியவர் சொல்லியிருக்கின்ற நுட்பம். அவர் சொல்லுகின்ற நிலைக்கும் நாம் இருக்கின்ற நிலைக்கும் எவ்வளவு தூரம் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். விட்டுக் கொடுக்கின்ற விடயம் நம்மிடம் இருக்கின்றதா?

இரண்டு நெருங்கிய நண்பர்கள், ஒருத்தர் சொன்னார். என்னிடம் 2 இலட்சம் ரூபாய் இருந்தால் அதில் பாதி ரூபாயை உன்னிடம் கொடுத்து விடுவேன்! என்றான்.

உன்னிடம் 2 கார் இருந்தால் என்ன செய்வாய்? என்றான். ஒரு காரை உனக்கு கொடுத்து விடுவேன்! என்றான்.

உன்னிடம் 2 பங்களா இருந்தால்? என்று கேட்டான். ஒன்றை தருவேன்! என்றான்,

சரி! உன்னிடம் 2 பேனா இருந்தால் ஒரு பேனாவை என்னிடம் கொடுத்து விடுவாயா? என்றான். அது மட்டும் முடியாது! என்றான்.

பணம், கார், பங்களா, எல்லாம் தருகின்றேன் என்று கூறுகின்றாய். ஆனால் பேனாவை மட்டும் தரமாட்டேன் என்கின்றாயே? என்று கேட்டார்.

இரண்டு பேனா நிஜமாகவே என்னிடம் இருக்கின்றதே! இதனால் அப்படி சொன்னேன் என்றார் அவர்.

# இலங்கையின் இறையாண்மையை சோபா உடன்படிக்கை பாதிக்காது

## அமெரிக்கத் தூதுவர் அலைனா விளக்கம்

**(கொழும்பு)**

**சோபா உடன்படிக்கையால் இலங்கையின் இறையாண்மைக்கு எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படாதென அமெரிக்கா தெரிவித்துள்ளது. குறித்த உடன்பாட்டில் இலங்கை கைச்சாத்திடக் கூடாதென எதிர்ப்பு வலுப்பெற்று வரும் நிலையிலேயே இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ் இவ்வாறு தெரிவித்தார்.**

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் கையெழுத்திடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ள சோபா உடன்பாடு இராணுவப் பயிற்சி மற்றும் ஒத்துழைப்பு உள்ளிட்ட விடயங்களுடனேயே தொடர்புடையது என்றும் அவர் விளக்கமளித்தார்.

மேலும் இந்த உடன்பாடு இன்னமும் கையெழுத்திடப்படவில்லை. இரண்டு நாடுகளும் தற்போது கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றன. இரு நாடுகளும் உடன்பாட்டுக்கு வந்தால் அது இணையத்தளத்தில் வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் இரு நாடுகளுக்கும் இடையே இராணுவப் பயிற்சி மற்றும் ஒத்துழைப்பு நடக்கும் முறை தொடர்பாக உடன்பாட்டின் உட்பிரிவுகளில் சேர்க்கப்பட்டுள்ளன என்றும் அமெரிக்கப் படைகள் இலங்கைக்குள் வருகை தருவது தொடர்பாக அரசாங்கம் மற்றும் இராணுவத்துடன் கலந்துரையாடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

1995 ஆம் ஆண்டு இரண்டு நாடுகளும் செய்து கொண்ட உடன்பாடு தற்போது காலாவதியாகியுள்ளமையாலேயே அதில் நவீன காலத்திற்கு ஏற்ப திருத்தங்களைச் செய்ய வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்தோடு, இந்த உடன்பாடு விடயத்தில் இரு தரப்புக்களுக்கும் சரியான புரிதல் இருந்தால் பிரச்சினைகளைக் குறைக்க முடியும் என்று தெரிவித்துள்ள அலைனா வெளிப்படைத்தன்மையுடன் உடன்பாட்டை எட்ட முடியும் என்று இரண்டு நாடுகளும் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த உடன்பாடுகள் ஒருபோதும் இலங்கையின் இறைமைக்கு அச்சுறுத்தலாக அமையாது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.



அதேநேரம் அமெரிக்கப் படைகள் பயிற்சிக்காக இலங்கைக்கு வருவதனால் உடன்பாட்டு விதிமுறைகளுக்கு அமைவாக மட்டுமே செயற்பட முடியும் என்றும் பயங்கரவாத சவால்களின் போது ஏனைய நாடுகளுக்கும் அமெரிக்கா இவ்வாறு உதவியுள்ளதாகவும் அவர் விளக்கமளித்தார்.(இ-7)

# 2.2 பில்லியன் போலி பேஸ்புக் கணக்குகள் நீக்கம்

(லண்டன்)

2.2 பில்லியன் போலி பேஸ்புக் கணக்குகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்ததாக, பேஸ்புக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த வருடம் ஜனவரி மாதத்திலிருந்து மார்ச் மாதம் வரையான காலப்பகுதிக்குள் இவ்வாறு போலி பேஸ்புக் கணக்குகள் நீக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய தற்போது பேஸ்புக் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ பேஸ்புக் கணக்குகளாக 2.38 பில்லியன் கணக்குகளே காணப்படுவதாகவும் பேஸ்புக் நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது.

எனினும் 2017ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை போலி பேஸ்புக் கணக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் சுமார் 694 மில்லியன்களாகக் காணப்பட்ட போலி கணக்குகள் கடந்த வருடம் 1.2 பில்லியன் வரை அதிகரித்துள்ளதாகவும் பேஸ்புக் நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

# வர்த்தக நிலையத்தில் தீ



(ஏறாவூர்)

மட்டக்களப்பு நகரில் வர்த்தக நிலையம் ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் அரசடி பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றினுள் தீயால் பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

பூட்டியிருந்த வர்த்தக நிலையத்தைத் திறப்பதற்கு நேற்றுக் காலை அதன் உரிமையாளர் வந்தபோது வர்த்தக நிலையத்தினுள் எரிந்த மணம் வருவதை அவதானித்து மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்தார்.

இதன்போது மட்டக்களப்பு மாநகரசபையின் தீயணைக்கும் பிரிவினருக்கும் அறிவிக்கப்பட்ட நிலையில் தீயணைக்கும் பிரிவினரின் உதவியுடன் பொலிஸாரால் குறித்த வர்த்தக நிலையம் திறக்கப்பட்டு இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறித்த வர்த்தக நிலையம் பூட்டப்பட்டிருந்த நிலையில் உள்ளுக்குள் தீ ஏற்பட்டது தொடர்பிலான விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளையில் மட்டக்களப்பு மாவட்ட குற்றத்தடயவியல் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையில் பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வைத்தியர் ஷாபியை விடுதலை செய்யுமாறு எந்தவிதக் கோரிக்கையும் விடுக்கவில்லை

## அமைச்சர் ஹலீம் மறுப்பு

(கொழும்பு)

சந்தேகத்துக்கிடமான முறையில் சொத்துச் சேர்த்தமை தொடர்பில், கைதுசெய்யப்பட்டுள்ள, குருநாகல் போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று மற்றும் பெண்நோயியல் வைத்தியர் செய்கு ஷியாப்தீன் மொஹமட் ஷாபியை விசாரணையின் பின்னர் விடுதலை செய்யுமாறு, முஸ்லிம் மத அலுவல்கள், தபால் அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த 25 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் வைத்து இந்தக்கோரிக்கையை அவர் விடுத்தாரென, அமைச்சரின் குரல் பதிவுடன் சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் இந்த விடயம் குறித்து அமைச்சர் ஹலீமிடம் வினவியபோது “தான் அவ்வாறு விடுதலை செய்யுமாறு எந்தவிதக் கோரிக்கையும் விடுவிக்கவில்லையென மறுத்ததுடன், விசாரணையை துரிதப்படுத்துமாறே ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்ததாக" அமைச்சர் தெரிவித்தார். (இ-7)



# விமானப்படையின் புதிய தளபதியாக மார்ஷல் சுமங்கல டயஸ் நியமனம்

(கொழும்பு)

விமானப்படையின் புதிய தளபதியாக விமானப்படையின் பிரதானி எயார் வைஸ் மார்ஷல் சுமங்கல டயஸ் நியமிக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் கபில ஜயம்பதி நாளை ஓய்வுபெறுகிறார்.

இந்நிலையிலேயே புதிய விமானப்படை தளபதியாக விமானப்படையின் பிரதானி எயார் வைஸ் மார்ஷல் சுமங்கல டயஸ் நியமிக்கப்படவுள்ளார்.

இதுகுறித்த உத்தியோகபூர்வ அறிவித்தல் இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, ஓய்வுபெறவுள்ள எயார் மார்ஷல் கபில ஜயம்பதி 2016 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதல் விமானப்படைத் தளபதியாக பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜனாதிபதித் தேர்தலில் நேரடியாகப்போட்டியிடும் அந்தஸ்து ஐ.தே.கவுக்கு இல்லை - மகிந்த அணி

ஜனாதிபதித் தேர்தலில் நேரடியாகப் போட்டியிட்டு வெற்றி பெறும் மக்கள் அந்தஸ்து ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடையாது. பொது வேட்பாளரைக் களமிறக்கி அதனூடாக அரசாங்கத்தை அமைப்பதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் கொள்கையாகக் காணப்படுகின்றது.

இம்முறை எவரை களமிறக்கினாலும் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியைப் புறக்கணிப்பார்கள் எனப் பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.



பொதுஜன பெரமுன மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இடையிலான பரந்துபட்ட கூட்டணியமைத்தல் விவகாரம் எந்த அளவிற்கு சாத்தியப்படும் என்று அனுமானங்களின் ஊடாக குறிப்பிட முடியாது.

கூட்டணியமைத்தாலும் அமைக்காவிடினும் பொதுஜன பெரமுனவின் அரசியல் கொள்கைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும் நடைமுறையில் காணப்படுகின்ற கட்சியின் பெயரிலும் தாமரை மொட்டு சின்னத்திலும் எக்காரணத்தினாலும் மாற்றங்கள் ஏற்படாது எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதி, அரசியலமைப்புக்கு எதிராக இராணுவம் ஒருபோதும் செயற்படாது


## தளபதி மகேஷ் மறுப்பு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தினர் தொழில் ரீதியில் ஒழுங்குகளைப் பேணிவருகின்ற ஒழுக்கமுள்ள ஒரு பிரிவினர் எனவும், இதனால் எக்காரணம் கொண்டும் சட்ட முரணான நடவடிக்கைகளில் இராணுவம் சம்பந்தப்படாது எனவும் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க தெரிவித்தார்.

குறுகிய காலத்துக்காவது நாட்டின் அரசாங்கத்தை ஏற்குமாறு பல்வேறு தரப்பினரிடமிருந்து இராணுவத்துக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பதாகவும் இதற்குத் தான் பதிலளித்துள்ளதாகவும் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ள செய்திகளையும் இராணுவத் தளபதி முற்றாக நிராகரித்தார்.

நாட்டு மக்கள் இராணுவத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர் எனவும், நாட்டு மக்களினதும் நாட்டினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் இராணுவம் பிரதான பொறுப்பு வகிப்பதாகவும் இராணுவத் தளபதி சுட்டிக்காட்டினார்.



இலங்கை இராணுவம் நாட்டின் தலைவரான ஜனாதிபதியின் கட்டளைக்கு ஏற்ப, நாட்டின் அரசியலமைப்புக்கு மதிப்பளித்து செயற்படுகின்றது. இதனால், நாட்டின் தலைவருக்கோ, அரசியலமைப்புக்கோ எதிராக ஒருபோதும் இராணுவம் செயற்படாது எனவும் இராணுவத் தளபதி மேலும் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்தை இராணுவம் பொறுப்பேற்றால் சிறந்தது என சமூக ஊடகங்களில் வெளியாகும் தகவல் குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு பதிலளித்தார். (இ-7)

# றிசாத் பதியுதீன் பதவிவிலக வேண்டும்

## கம்மன்பில வலியுறுத்து




(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் சுயாதீனமாக இடம்பெற வேண்டுமாயின் அமைச்சர் றிசாத் பதியுதீன் அமைச்சுப் பதவியிலிருந்து விலக வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# பௌத்த நாடு என்ற வகையில் தாய்லாந்து இலங்கையுடன் தொடர்ந்து இணைந்திருக்கும்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று பயங்கரவாதத் தாக்குதலுக்கு முகங்கொடுத்து அதிலிருந்து மீண்டுள்ள இலங்கையுடன் சகோதர பௌத்த நாடு என்ற வகையில் தாய்லாந்து எப்போதும் இணைந்து செயற்படும் என்று தாய்லாந்து மகாநாயக்க தேரர் தெரிவித்தார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள தாய்லாந்து மகா நாயக்க தேரர் உள்ளிட்ட பௌத்த தூதுக்குழுவினர் கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ப்ரா பஹவனஹோஹு'ன் வட் மெஹோயோங் தேரரின் தலைமையில் தாய்லாந்து மகாநாயக்க தேரர் உள்ளிட்ட 70 பேர் கொண்ட தூதுக்குழுவினர் கடந்த 21 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்தனர். இவர்கள் நாட்டின் பல்வேறு பிரதேசங்களுக்குச் சென்று வெசாக் கொண்டாட்டங்களை பார்வையிட்டனர்.

மேலும் கிழக்கு மாகாணத்திலுள்ள பல்வேறு விகாரைகளுக்குச் சென்று பூஜை வழிபாடுகளிலும் ஈடுபட்டனர்.

தாய்லாந்து பௌத்த தூதுக்குழுவினருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குமிடையிலான சந்திப்பில் தாய் ஸ்ரீலங்கா பௌத்த கலாசார மத்திய நிலையத்தின் விகாராதிபதி சங்கைக்குரிய ராஸ்ஸகல சீவலி நாயக்க தேரரும் கலந்துகொண்டார்.

இந்நிலையில் தேரர்களின் வருகை குறித்து மகிழ்ச்சி தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பௌத்த நாடுகள் என்ற வகையில் இலங்கைக்கும் தாய்லாந்துக்குமிடையில் இருந்துவரும் நீண்டகால நெருங்கிய உறவுகளை இதன்போது நினைவு கூர்ந்தார். (இ-7)

# விபத்தில் மூன்று மாதக் குழந்தை பலி

## 5 பேர் காயம்

மாத்தறை - திக்கொட பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மூன்று மாதக்குழந்தை உயிரிழந்துள்ளதுடன் ஐவர் பலத்த காயமடைந்தனர்.

இந்த விபத்து சம்பவம் நேற்று முன்தினம் மாலை 4.45 மணியளவில் இடம்பெற்றது.

திக்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹக்மன - மாத்தறை வீதியில் திக்கொட நோக்கிச்சென்ற ஆட்டோ மாத்தறை நோக்கி சென்ற காருடன் மோதுண்டே இந்த விபத்து இடம்பெற்றது.

இதன்போது பலத்த காயங்களுக்குள்ளான ஆட்டோ சாரதி உட்பட 6 பேர் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மூன்று மாதக் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்தது. (இ-7)

# கடந்த ஐந்து மாதங்களில் 17,975 டெங்கு நோயாளர்கள்

## 26 பேர் மரணம்

(கொழும்பு)

கடந்த ஐந்து மாத காலப் பகுதியில் நாடு முழுவதிலும் 17,975 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், இக்காலப் பகுதிக்குள் மாத்திரம் டெங்கு நோயால் 26 பேர் மரணித்துள்ளதாகவும் தேசிய டெங்கு நோய் ஒழிப்பு பிரிவின் விசேட வைத்திய நிபுணர் பிரசிலா சமரவீர தெரிவித்தார்.

இந்த நோயாளர்களில் அதிக எண்ணிக்கையானவர்கள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாகவும் இந்த எண்ணிக்கை 3909 பேர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 25 நாட்களுக்குள் மாத்திரம் கொழும்பு மாவட்டத்தில் 2075 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் வைத்திய நிபுணர் தெரிவித்தார்.

மழை காலம் ஆரம்பமாகியுள்ளதனால், வீட்டுச் சூழல், பாடசாலை சூழல் என்பவற்றை சுத்தமாக வைத்திருக்க நடவடிக்கை எடுக்குமாறும் பொதுமக்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

கடந்த வருடத்தில் (2018) இலங்கை முழுவதிலும் 51 ஆயிரம் டெங்கு நோயாளர்களே பதிவாகியுள்ளதாகவும், இவர்களில் 51 பேர் உயிரிழந்துள்ளதாகவும் வைத்திய நிபுணர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## திருமண வீட்டில்

# முஸ்லிம் நபர் சமைத்த உணவு நிராகரிப்பு!

(குருநாகல்)

குருநாகலில் நடந்த திருமண வைபவம் ஒன்றில் முஸ்லிம் நபர் ஒருவர் சமைத்த உணவுகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

கடந்த 24 ஆம் திகதி கல்கமுவ பிரதேசத்தில் இடம்பெற்ற திருமண நிகழ்வின் போது முஸ்லிம் நபர் ஒருவர் சமையலில் ஈடுபட்டுள்ளார்.

இதன் காரணமாக ஆத்திரமடைந்த உறவினர்கள் மற்றும் விருந்தினர்கள் உணவை புறக்கணித்துள்ளதாக தென்னிலங்கை ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

திருமண நிகழ்வில் உறவினர்கள் மற்றும் விருந்தினர்கள் கலந்து கொண்டுள்ளனர். அவர்களுக்காக மதிய உணவு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விருந்தினர்கள் மணவீட்டிற்கு வந்த பின்னர் குறித்த திருமண உணவை முஸ்லிம் நபர் ஒருவரே சமைத்துள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலைக்கு முன்னர், அந்தப் பிரதேசத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளுக்கும் இன பாகுபாடு இன்றி குறித்த சமையல் கலைஞரே சமையல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

எனினும் தற்போது ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் காரணமாக குறித்த கலைஞரின் உணவுகளை புறக்கணித்துள்ளனர். திருமண நிகழ்வில் பங்கேற்றவர்கள் தம்பதியரை வாழ்த்தி விட்டு உணவு பெற்றுக்கொள்ளாமல் சென்றுள்ளதாக குறித்த ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது. (இ-7)

# மகிந்தவின் கையொப்பம் குறித்து எனக்கு எந்தக் கவலையுமில்லை

## வியாழேந்திரன் தெளிவு


(கொழும்பு)

கடந்த காலங்களில் றிசாத் பதியுதீனின் பேச்சுக்களில் குற்றம் கண்டு விமர்சித்தவர்கள், அவர் மீது அவ்வாறான குற்றங்களை முன்வைத்து பேசியவர்கள் அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்காவிட்டால், வெறுமனே மக்களைப் பேய்க்காட்டுவதற்கும் ஊடகங்களின் முன்பாக ஒரு கருத்தைச் சொல்லிவிட்டு போவதற்கான ஒரு செயற்பாடாகும் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.வியாழேந்திரன் தெரிவித்தார்.

றிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு நான் ஆதரவு தெரிவித்துவிட்டேன். அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்ட வேளையில் அதில் நான் 12 ஆவது ஆளாக கையெழுத்திட்டிருக்கின்றேன்.

நாங்கள் அப்பாவி முஸ்லிம் மக்களை நேசிக்கின்றோம். அமைச்சர் றிசாத் பதியுதீன் என்ற தனிநபரின் பேச்சு அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அந்த அடிப்படையில் அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்கினேன்.

மகிந்த ராஜபக்ஷ இதில் கையெழுத்து இட்டாலும், இடாவிட்டாலும் எனக்கு அதைப் பற்றிய எந்தக் கவலையுமில்லை. ஏன் ரணில் விக்கிரமசிங்க கையெழுத்து இட்டாலும், இடாவிட்டாலும் கூட எனக்கு அதைப் பற்றிய கவலை இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

258



சோல்பரி பிரபு

## சுதந்திரத்தின் பின் இலங்கை அரசின் அரசியல் நடவடிக்கைகளும் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும் (கி.பி.1948-கி.பி.1983)

தவறான புள்ளி விபரங்களையும் தரவுகளையும் பொய்யான வாக்குறுதிகளையும் உள்ளடக்கி டி.எஸ். சேனநாயக்கவினதும் அவரது அமைச்சரவையினதும் ஆலோசனையின் பேரில் சேர்.ஐவர் ஜென்னிங்ஸால் தயாரிக்கப்பட்ட 1947 ஆம் ஆண்டு அரசியல் சீர்திருத்தம் பிரித்தானிய ஆட்சியாளரின் அனுமதியுடன் சோல்பரி பிரபுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டது என்பது இதற்கு முன்னைய அத்தியாயத்தில் ஆதாரங்களுடன் விரிவாக ஆராயப்பட்டது.

சோல்பரி அரசியல் திருத்தம் அமுல்படுத்தப்பட்டு அதனடிப்படையில் நடைபெற்ற 1947 ஆம் ஆண்டுத் தேர்தலில் சோல்பரி பிரபு எதிர்பார்த்த சிறுபான்மையினருக்கான பிரதிநிதித்துவத்தின் எண்ணிக்கை மிகவும் பாதகமான முடிவுகளையே கொண்டிருந்தது.

இதுவே சோல்பரி அரசியல் சீர்திருத்தத்திற்கு விழுந்த முதல் மரண அடி என்பதும் ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. இருப்பினும் தமிழ் அரசியல் தலைவர்கள் டி.எஸ். சேனநாயக்கவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு தமது ஆதரவை வழங்கி தமிழ்த் தேசியத்திற்கு துரோகம் இழைத்தமை பற்றியும் அமைச்சுப் பதவிகளையும் துணை அமைச்சுப் பதவிகளையும் மூத்தோர் சபையில் பதவிகளையும் பெற்றமை பற்றியும் ஆராயப்பட்டது.

ஆனால் பிரித்தானிய அதிகார வர்க்கமோ சோல்பரி பிரபுவோ சோல்பரி ஆணைக் குழுவினரோ அல்லது சிறுபான்மை இனத்தவரோ குறிப்பாகத் தமிழ் அரசியல் தலைவர்களோ என்றும் எதிர்பார்த்திராதபடி 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கைக்குச் சுதந்திரம் (டொமினியன் அந்தஸ்து) வழங்கப்பட்டதையடுத்து டி.எஸ். சேனநாயக்கவின் அரசியல் அதிரடி நடவடிக்கைகள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய நிகழ்வுகளாக அமைந்தன.

சிறுபான்மையினரின் அரசியல் உரிமைகளும் நலன்களும் பாதுகாக்கப்படும் என சோல்பரி அரசியல் யாப்பில் விதந்துரைக்கப்பட்ட போதிலும் டி. எஸ்.சேனநாயக்க தான் ஏற்கனவே திட்டமிட்டபடி 1948 இற்குப் பின் கூட்டப்பட்ட இரண்டாவது பாராளுமன்றத் தொடரிலே மலையகத் தோட்டங்களில் வேலை செய்யும் இந்தியத் தமிழ் மக்களின் பிரஜாவுரிமையைப் பறித்த நிகழ்வு சோல்பரி ஆணைக்குழுவினரின் அரசியல் சீர்திருத்தம் முற்றாக தோல்வியைத் தழுவிக் கொண்டது என்பதனை எடுத்துக் காட்டியது.

பெரும்பான்மை சிங்கள அரசின் இந்நிகழ்வுடன் ஆரம்பித்த சிறுபான்மையினருக்கு எதிரான பாரபட்ச அரசியல் நடவடிக்கைகள் இன்றுவரை தொடர்ச்சியாக நிகழ்ந்த வண்ணம் இருப்பதை உலகம் அறியும்.

எனவே இவ் இறுதி அத்தியாயம் 1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்ததிலிருந்து 1976 ஆம் ஆண்டு தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தமிழீழப் பிரகடனத்தை வட்டுக்கோட்டை மகாநாட்டில் பிரகடனப்படுத்தியது வரை ஏற்பட்ட முக்கியமான நிகழ்வுகளையும் அதனைத் தொடர்ந்து 1983 வரை அவை எவ்வாறு தமிழ்த் தேசியவாதத்தின் எழுச்சியையும் அதன் முன்னெடுப்பையும் விரைவுபடுத்தின என்பதனையும் உள்ளடக்கியதாக அமையும்.

மேற்படி காலகட்ட அரசியல் வரலாறு பற்றி பேராசிரியர்களான ஏ.ஜே.வில்சன், அம்பலவாணர், சிவராசா, கே.எம்.டி. சில்வா, மைக்கேல் றொபட்ஸ் போன்ற புலமைசார் அறிஞர்கள் பல நூல்களையும் கட்டுரைகளையும் ஏற்கனவே எழுதி வெளியிட்டுள்ளதால் இவ் அத்தியாயத்தில் மிக முக்கியமான அரசியல் நிகழ்வுகள் மட்டுமே இந்நூலின் பூரணத்துவம் கருதி விபரிக்கப்படும்.

1947 தொடக்கம் 1956 வரையிலான தமிழர் பற்றிய வரலாறு முதன்மை ஆதாரங்களின் அடிப்படையில் இதுவரை முறையாக ஆராயப்படாமையால் மேற்படி காலகட்ட அரசியல் நிலைமைகள் பற்றிச் சற்று ஆழமாக ஆராயப்படும்.

இச்சந்தர்ப்பத்தில் இக்காலகட்ட அரசியல் நிலைமையினைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு அக்காலத் தமிழரின் சமூக, பொருளாதார பின்னணி பற்றி நோக்குவது மிக அவசியமாகும்.

### இலங்கைப் பூர்வீகத் தமிழர்

இலங்கைத் தமிழர் இலங்கையின் வடக்கு- கிழக்கு மாகாணங்களிலேயே பிரதானமாகச் செறிந்து வாழ்கின்றனர். இந்த மாகாணங்களில் வாழும் தமிழர் இனம், மதம், மொழி, கலாசாரம் ஆகியவற்றால் ஒத்தவர் என்றபோதிலும் அவர்களின் பொருளாதார நிலை, பாரம்பரிய சட்டங்கள், வழமை என்பவற்றிலும் விசேடமாக பொருளாதாரக் கட்டுமானங்களிலும் சில வேறுபாடுகளைக் கொண்டுள்ளனர் என்பது ஏற்கனவே ஆராயப் பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் பிரதானமாக மட்டக்ளப்பு, திருகோணமலை மாவட்டங்களில் தமிழர் வாழ்கின்றனர். திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் அதன் சமூகக் கட்டமைப்பு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இரு மாவட்டங்களினதும் இயல்புகளுக்கு இடைப்பட்ட ஒரு நிலையில் அமைந்ததாகத் தோன்றுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டம் விவசாயத்தையே பிரதானமாகக் கொண்டிருக்க யாழ்ப்பாண மாவட்டமோ புகையிலை, மிளகாய், வெங்காயம் போன்ற பணப்பயிர்களுடன் சிறியஅளவிலதான நெற்செய்கை யையும் கொண்டுள்ளது.

யாழ்ப்பாணத் தமிழர் இலங்கையின் முக்கிய நகரங்களில் விசேடமாகக் கொழும்பு நகரில் வர்த்தக வியாபாரத் துறையிலும் அதிகமாக ஈடுபட்டுள்ளனர். கிழக்கு மாகாணம் கல்வித் துறையில் பின்னடைந்த நிலையில் இருந்தமையால் பொதுச் சேவைத் துறையில் அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய பங்கு கிடையாமற் போயிற்று.

யாழ்ப்பாணத்தில் ஏனைய இடங்களை விடச் சிறந்த கல்வி வசதிகள் இருந்த காரணத்தால் யாழ்ப்பாணத் தமிழர், பிரித்தானியர் ஆட்சிக்காலப் பிற்பகுதியிலும் இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தின் பின்னரும் பொதுச் சேவைத்துறையில் ஆதிக்கம் பெற்றிருந்தனர்.

1921 ஆம் ஆண்டு கணக் கெடுப்பின்படி தமிழர், சிங்க ளவர், பறங்கியர், முஸ்லிம்கள் இன்னும் பிறர் பின்வரும் எண்ணிக்கையில் அரச சேவைகளில் குறிப்பாக உயர் பதவிகளில் இருந்திருக்கின்றனர்.

(தொடரும்)

# பல்கலைக்கு பயங்கரவாதிகளால் குண்டுத்தாக்குதல் மிரட்டல் கடிதம்

(மிஹிந்தலை) —

**மிஹிந்தலை ரஜரட்ட பல்கலைக்கழகத்திற்கு பயங்கரவாதத் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாக துணைவேந்தருக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. பயங்கரவாதிகளால் அனுப்பப்பட்ட ஆங்கில மொழியிலான இந்தக் கடிதம் தொடர்பில் மிஹிந்தலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.**

குறித்த பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கை நேற்று ஆரம்பிக்கப்பட்டது. இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களாக பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு பிரிவினர் தீவிர சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதற்கு மேலதிகமாக தனிப்பட்ட ரீதியில் மாணவர்களின் பைகள் மற்றும் விடுதி அறைகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இந்நிலையில் இந்தக்கடிதம் தொடர்பில் பொலிஸாரிடம் வினவிய போது,

கடிதம் கிடைத்துள்ளதாக பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அறிவித்துள்ளார். இதுவும் கற்கை நடவடிக்கைகளை தடுப்பதற்காக அனுப்பப்பட்ட கடிதமாக இருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர். இதே வேளை பல்கலைக்கழகத்திற்கு முழுமையான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7)

## முறைகேடுகளைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழு காலம் நீடிப்பு

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம், வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா கேடரிங் நிறுவனம் மற்றும் வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா தனியார் நிறுவனம் ஆகியவற்றில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படும் முறைகேடுகளைக் கண்டறிவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பதவிக்காலத்தை 2019 ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்படுவதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

2006 ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் 2018 ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் குறித்த நிறுவனங்களில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் முறைக்கேடுகள் குறித்து கண்டறிவதற்காக ஜனாதிபதியால், 2018 பெப்ரவரி 14 ஆம் திகதி இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் 2018 ஜூலை மாதம் 31 ஆம் திகதி நிறைவடையவிருந்த ஆணைக்குழுவின் காலம் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டிருந்தது.

அதன்பின்னர் மீண்டும் அந்தக் காலம் 2019 பெப்ரவரி 15 ஆம் திகதி வரை மீண்டும் நீடிக்கப்பட்டு பின்னர் மே மாதம் 30 ஆம் திகதி வரை மீண்டும் நீடிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இக்காலத்தினை மேலும் ஒரு மாத காலம் நீடிப்பதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டது. (இ-7)

# கோர விபத்திற்குள்ளானது வான்; கர்ப்பிணி உட்பட 8 பேர் படுகாயம்



ஜாஎல தெற்கு நிவந்தம - வேவல்காரய பகுதியில் நேற்று முன்தினம் வான் ஒன்று விபத்திற்குள்ளானதில் அதில் பயணித்த 8 பேர் படுகாயமடைந்தனர்.

திருமண நிகழ்வில் கலந்து கொண்ட தரப்பினர், வான் ஒன்றில் மீண்டும் வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே இந்த விபத்து ஏற்பட்டது.

வாகனத்தின் வேகத்தை சாரதியால் கட்டுப்படுத்த முடியாமல், வீதிக்கு அருகில் இருந்த தொலைத்தொடர்பு தூணில் மோதுண்டுள்ளது.

விபத்தில் சாரதியின் கால் ஒன்று முறிந்துள்ளதோடு, அவரின் கர்ப்பிணி மனைவியும் காயமடைந்தார்.

காயமடைந்தவர்கள், ராகமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# இரண்டு பெண்கள் மீது கத்திக் குத்து தாக்குதல்

## ஒருவர் உயிரிழப்பு

(மாதம்பை)

மாதம்பை - திம்பிரிகஸ்வல பகுதியில் இரண்டு பெண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கத்திக் குத்து தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார்.

குறித்த இரண்டு பெண்களும் நேற்று முன்தினம் மாலை மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளை, வீதியில் குறுக்கிட்ட நபரொருவர் இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் படுகாயமடைந்த அவர்கள், சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அதில் பல்லேகல - கஸ்முருவ பகுதியைச் சேர்ந்த (வயது-42) பெண் உயிரிழந்தார்.

காயமடைந்த அவரின் சகோதரி, சிலாபம் பொது வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

கத்திக் குத்துச் சம்பவம், உயிரிழந்த பெண்ணின் கணவனால் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிப்பதோடு, அவர் தற்போது அப்பகுதியில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1732

Search for people, places and things


### அகிலன்

மனைவியால் கொடுமை? கணவனும் விவாகரத்து பெறலாம்- செய்தி
இதைப் பார்த்தோன இன்னொரு ரவுண்டு அடி எக்ஸ்ட்ரா விழும்




### விசாகன்

நட்பு மட்டும்தான் கடைசி வரை வரும்



### தார்மீகன்

பைக்ல, கார்ல போறவன் வசதியானவன் இல்ல..
பஸ்ல போறவன்தான் பணக்காரன்-எதிர்காலம்



### யாழவி

சமையல் முடிந்தவுடன் அடுப்பை அணைக்கவும்னு சொன்னாங்க அதான் கட்டிப் பிடிக்கத் தயாராயிட்டேன்...



### கிசாளினி

வாழ்க்கையில கடைசிவரை போராட வேண்டும் என்ற எளிய தத்துவத்தை நமக்குச் சொல்லித் தருகிறது இந்தக் காலியாகப் போகிற பேஸ்ட் என்னா அமுக்கு அமுக்க வேண்டியிருக்கு!



### நித்தியன்

சீரியஸான நேரத்திலகூட சிரிப்பானுக- நட்பு



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# றிசாத்துக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியாது!

## ஐ.தே.க. நிராகரிப்பு

(கண்டி)

**குற்றச்சாட்டுக்கள் எவையும் நிரூபிக்கப்படாத நிலையில் அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக உடனடியாக அரசியல் அதிரடி நடவடிக்கைகளை எடுக்க முடியாதென அமைச்சர் பி.ஹரிசன் தெரிவித்தார்.**



கண்டியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே ஹரிசன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரரேரணை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் சில உறுப்பினர்களுக்குள் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன.

கத்தோலிக்க மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிலர் இவ்வாறான நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அவர்களைப் பொறுத்தவரை இந்த விடயம் தொடர்பில் தீர்க்கமான விசாரணைகள் இடம்பெற வேண்டும் என்பதே நிலைப்பாடாக இருக்கிறது.

எவ்வாறாயினும், நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் ஒருசிலர் முடிவெடுத்துவிட முடியாது. மாறாக, ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவிலேயே இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

அமைச்சர் றிசாத் பதியுதீன் குற்றமிழைத்திருந்தாலோ, அதற்கான சாட்சிகள் இருந்தாலோ பொலிஸில் முறைப்பாடளிக்க முடியும். இல்லையென்றால் நீதிமன்றத்தை நாட முடியும்.

ஆனால், இதுவரை அவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. எனவே, குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாத ஒருவர் தொடர்பில் எம்மால் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது.

எதிர்க்கட்சியினர் இந்தச் சம்பவத்தைப் பயன்படுத்தி, எப்படியாவது அரசியல் இலாபம் தேடவே முயற்சித்து வருகிறார்கள். இவர்களைப் பொறுத்தவரை இந்த அரசாங்கத்தை பலவீனப்படுத்த வேண்டும் என்பதுதான் முக்கியமான நோக்கமாகும்.

மகிந்த உள்ளிட்ட எதிரணித் தலைவர்கள், அமைச்சர் றிசாத்தை தங்களுடன் ஒருபோதும் இணைத்துக் கொள்ளப்போவதில்லை என்ற உறுதிப்பாட்டை வழங்குவார்களா?

நாட்டு மக்களுக்கு இந்த உறுதிப்பாட்டை பகிரங்கமாக வெளிப்படுத்துவார்களா? இல்லை. ஐக்கிய தேசியக் கட்சி என்பது அனைத்து இனங்களுக்கும் உரிய ஒரு கட்சியாகும்.

அமைச்சர் றிசாத் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டால், நாம் நிச்சயமாக அதுதொடர்பில் நடவடிக்கை எடுப்போம்.

இந்த விடயம் தொடர்பில் தற்போது தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. தெரிவுக்குழுவில் சுயாதீனமாக விசாரணைகள் முன்னெடுக்கப்படும்.

தற்போதைய சூழ்நிலையில் நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அதைவிடுத்து இதில் அரசியல் இலாபம் தேட முனையக்கூடாது" என அமைச்சர் ஹரிசன் மேலும் தெரிவித்தார். (இ-7)

# குற்றம் நிரூபிக்கப்பட்டால் றிசாத்தை உடன் தூக்கிலிட வேண்டும் - மனுஷ

(காலி)

குற்றம் நிரூபிக்கப்பட்டால் அமைச்சர் றிசாத் பதியுதீனை உடன் தூக்கிலிட வேண்டும் என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார வலியுறுத்தினார்.

அத்துடன், பயங்கரவாதிகளுக்கு நாடாளுமன்றத்தில் அடைக்கலம் கொடுக்க முடியாது. குற்றவாளிகள் தொடர்பாக விசாரணை செய்யும் அதிகாரமும் பாராளுமன்றத்துக்குக் கிடையாது எனவும் அவர் தெரிவித்தார்.

காலியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், "றிசாத் பதியுதீன் குற்றவாளியா? அல்லது நிரபராதியா? என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள பொலிஸார் விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும்.

அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் கைது செய்வது மாத்திரமல்லாமல் தூக்கிலிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான முழு ஒத்துழைப்பையும் நாடாளுமன்றத்தினூடாக பெற்றுக்கொடுப்போம்.

அத்துடன் களவு வேலைகளுக்கும் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கும் அரசியல் விளையாட்டுக்களுக்கும் நாங்கள் இடமளிக்கப்போவதில்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகவும் அரசாங்கத்துக்கு எதிராகவும் பல்வேறுபட்ட சந்தரப்பங்களில் நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டு வரப்பட்டன.

52 நாள் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தி சட்டத்துக்கு புறம்பாக புதிய பிரதமரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தார்கள். தற்போது அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பித்து அரசியல் விளையாட்டுக்களை முன்னெடுத்து வருகின்றனர்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மகப்பேற்று வைத்தியர் ஷாபிக்கு எதிராக முன்னாள் கல்வி அமைச்சர் முறைப்பாடு

குருநாகல் போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்தியர் ஷாபிக்கு எதிராக, வடமேல் மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் சந்தியப குமார ராஜபக்ஷ முறைப்பாடு செய்யவுள்ளதாகத் தெரிவித்தார்.

சந்தேகத்துக்கிடமான முறையில் சொத்து சேகரித்துள்ளமை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட குறித்த வைத்தியர், பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக, அரசாங்கப் பதவியிலிருந்து விலகியபோதும், சட்டவிரோத நடவடிக்கை மூலம் மீண்டும் அவர் அப்பதவியைப் பெற்றுள்ளமைக்கு எதிராக, இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாக முன்னாள் கல்வியமைச்சர் தெரிவித்தார். (இ-7)

# செய்தித்துளிகள்

## 51 அடையாள அட்டைகளுடன் பொலிஸாரால் ஒருவர் கைது

(கொழும்பு)

வெலிமட - திமுதுகம பிரதேசத்திலிருந்து ஒரு தொகை தேசிய அடையாள அட்டைகளை வைத்திருந்த நபரொருவரை பொலிஸார் கைது செய்தனர்.

குறித்த நபரிடமிருந்து 51 தேசிய அடையாள அட்டைகள் மீட்கப்பட்டுள்ளதோடு, தான் வட்டிக்குப் பணம் கொடுத்து வருவதாகவும், ஆகையால் பணத்தைப் பெற்றுச் செல்லும் நபர்களிடமிருந்து அடையாள அட்டைகளை வாங்கி வைத்துக் கொள்வதாகப் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணைகளின் போது குறித்த நபர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## இலங்கை தேயிலை ஏற்றுமதி 15.6 சதவீதத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த மாதம் 20.8 மெற்றிக் தொன் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக, தேயிலை தரகு தரப்பினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த வருடம் 15.6 சதவீதம் ஏற்றுமதி வளர்ச்சியை எட்டியுள்ளதாக, அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலை கட்டுநாயக்கவுடன் இணைப்பு

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் கட்டுநாயக்க நெடுஞ்சாலையுடன் இணைக்கப்படவுள்ளது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை எதிர்வரும் நவம்பர் மாதம் கட்டுநாயக்க வரை நீடிக்கப்படவுள்ளது.

வெளிச்சுற்று வீதி அமைக்கப்பட்டவுடன் கடவத்தையில் இருந்து கெரவெலப்பிட்டி ஊடாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலையுடன் தொடர்புகளை ஏற்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## லொத்தர் விற்பனையில் வீழ்ச்சி

(கொழும்பு)

அன்றாட லொத்தர் விற்பனையானது 30-40 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளதாக அகில இலங்கை லொத்தர் விற்பனையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.


இதனால் 4500 லொத்தர் விற்பனையாளர்களும் 30 ஆயிரம் உதவி விற்பனையாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக லொத்தர் விற்பனையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 100 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 110 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 160 | 140 | 150 | 150 |
| தக்காளி | 100 | 120 | 130 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 150 | 140 | 100 |
| கோவா | 100 | 120 | 80 | 120 |
| கரட் | 80 | 130 | 80 | 240 |
| பூசணி | 60 | 60 | 65 | 80 |
| புடோல் | 80 | 80 | 80 | 120 |
| வாழைக்காய் | 50 | 60 | 65 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 80-160 | 140 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 75 | 100 |
| பாகற்காய் | 160 | 140 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 50 | 80 |
| பயற்றங்காய் | 120 | 80 | 90 | 100 |
| லீக்ஸ் | 150 | 110 | 100 | 120 |
| பீற்றூட் | 140 | 110 | 90 | 120 |
| கறிமிளகாய் | 150 | 120 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 200 | 120 | 70 | 120 |
| போஞ்சி | 250 | - | 200 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | - | 80 | 100 |
| கீரை-பிடி | 30 | 30 | 20 | 40 |
| தேசிக்காய் | 500 | 400 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 20-40 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 180 | 150 | 100 | 160 |
| வெங்காயப்பூ | 200 | — | 200 | 280 |
| முள்ளங்கி | 130 | 130 | 75 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | - | — | — | 150 |




# குயில் டாக்டர்!




கற்பூரவள்ளி என்ற காட்டில் ஆந்தை குடும்பம் ஒன்று வாழ்ந்து வந்தது. ஆந்தைக்கு இரண்டு ஆந்தை குஞ்சுகள் இருந்தன. தன் குஞ்சுகளை பேணிப்பராமரித்து வளர்த்தது தாய் ஆந்தை. குஞ்சுகள் வளர வளர அம்மாவிடம் பல கேள்விகள் கேட்க ஆரம்பித்தன.

ஒரு நாள், "அம்மா எல்லாரும் பகலில்தான் சுறுசுறுப்பாக உலாவிக் கொண்டிருக்கின்றனர். நாம் மட்டும் பகலில் தூங்கிவிட்டு இரவில் இரை தேடுகிறோம். நாம் சென்று இரை தேடும் வேளையில்ஊரே உறங்கிக்கொண்டிருக்கிறது. இது ஏன்?" என்றது.

"நமக்கு பகலில் கண் தெரியாது. இரவில்தான் கண் தெரியும். அதனால் தான் நாம் பகலெல்லாம் தூங்கிவிட்டு இரவில் சென்று இரை தேடுகிறோம்" என்றது தாய் ஆந்தை.

"ஏனம்மா கடவுள் நம்மை மட்டும் இப்படி படைத்துவிட்டார்?" என்று கேட்டது இன்னொரு ஆந்தை குஞ்சு.

"கடவுள் நம்மையெல்லாம் ஒரே மாதிரித்தான் படைத்தார். முன்னொரு காலத்தில் நம்முடைய முன்னோர்களில் ஒருவர் செய்த தவறால்தான் நாம் இன்றும் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்" என்றது தாய் ஆந்தை.

"அப்படி என்ன தவறு செய்தார்?" என்று கேட்டன குஞ்சுகள்.

"ஒரு முறை நம் முன்னோர் ஒருவர் காகம் ஒன்றிடம் மிகவும் நட்பாக இருந்தார்.

ஒரு நாள் அந்தக் காகத்திற்கு உடல்நிலை மிகவும் சரியில்லை. எனவே, அதை அழைத்துக் கொண்டு காட்டில் டாக்டராக இருந்த குயில் டாக்டரிடம் சென்றனர்.

"குயில் டாக்டரோ நன்றாக வைத்தியம் பார்த்து காக்காவை குணமாக்கிவிட்டது. அதன் பிறகு டாக்டருக்கு பீஸ் கொடுக்கணும் இல்லையா? ஆனால், இவர்கள் இருவரும் கொடுக்கவில்லை. எனவே, குயில் டாக்டர் எனக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுங்கள் என்று கேட்டது.

"இவர்கள் இருவரும் எங்களிடம் பணம் இல்லை என்று சொல்லிவிட்டு ஓடி வந்துவிட்டனர். அதன் பிறகு இவர்கள் இருவரையும் பார்க்கும் பொழுதெல்லாம் பணம் கேட்க ஆரம்பித்தது குயில் டாக்டர். என்னடா தொல்லையாப்போச்சு என்று நினைத்த நம்முடைய பாட்டனாரான ஆந்தையார், பகலில் தலை காட்டுவதே இல்லை. இரவில் மட்டுமே வெளியே வருவதும் இரையை பிடித்து தின்பதுமாக இருந்திருக்கிறார்.

"பகல் முழுவதும் மரப் பொந்துகளில் படுத்து நன்கு தூங்குவது... இரவில் எழுந்து வெளியே செல்வது... இப்படியே இருந்ததால் ஆந்தையாரை கண்டுபிடிக்க முடியவில்லை குயில் டாக்டரால்.

அதனால் ஆத்திரமடைந்த குயில் டாக்டர், காக்காவைப் பிடித்து நன்கு திட்டியிருக்கிறது.

"அந்த திருட்டு காக்கா கடுமையாக வேலை செய்தாவது டாக்டர் பீசை கொடுத்திருக்க வேண்டியது தானே... அப்படி கொடுக்கவில்லை.

இதனால் கோபம் கொண்ட குயில் டாக்டர், இனிமேல் எங்கள் இனத்தார் இடும் முட்டைகளை எல்லாம் உன் இனத்தார் தான் காவல்காக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டது.

"அன்றிலிருந்து குயில் இனத்தார் அனைவரும் காக்கையின் கூட்டில் தங்கள் முட்டைகளை இட்டு விட்டு சென்று விடுவர்.

அது குயிலின் முட்டை என்பது தெரியாமலே காக்கை இனம் வளர்த்துக் கொண்டு வருகிறது.

"நம்முடைய இனத்தார் பகலில் தூங்கி தூங்கியே நமக்கு பகலில் கண் தெரியாமல் போய்விட்டது. இதுதான் கதை" என்றது தாய் ஆந்தை.

"அம்மா பிறரை ஏமாற்றுவதால் ஏற்படும் கஷ்டம் காலம் காலமாக பலரை பாதிப்பதை புரிந்து கொண்டோம்.

இனிமேல் நாங்கள் ஒருகாலும் இப்படிப்பட்ட காரியத்தை செய்யவே மாட்டோம்" என்றனர்.

செல்லமாக தன் குஞ்சுகளை அணைத்து முத்தமிட்டது தாய் ஆந்தை.

## விடுகதைகளும் விடைகளும்

• கையளவு உடம்புக்காரன், காவலுக்கு கெட்டிக்காரன். அவன் யார்?

**பூட்டு**

• மேகத்தின் பிள்ளை அது, தாகத்தின் நண்பன். அது என்ன?

**மழை**

• முற்றத்தில் நடக்கும் மூலையில் படுப்பான். அவன் யார்?

**துடைப்பம்**

• முன்னும் பின்னும் போவான், ஒற்றைக்காலிலே நிற்பான். யார் அவன்?

**கதவு**

• மேல் பலகை, கீழ் பலகை நடுவில் நெளி பாம்பு. அது என்ன?

**நாக்கு**

• மேலே பூ பூக்கும், கீழே காய் காய்க்கும். அது என்ன?

**வேர்க்கடலை**

• இருட்டில் கண் சிமிட்டும் ஆனால் நட்சத்திரமல்ல. அது என்ன?

**மின்மினிப் பூச்சி**

## சிந்தனைத்துளிகள்

• அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப் பின்பற்றுவது என்ற போராட்டம் எழும் போது உள்ளம் சொல்வதையே பின்பற்றுங்கள்.

• மகத்தான செயல்களைச் செய்யவே இறைவன் நம்மைத் தேர்வு செய்கிறான். அவற்றைச் செய்து முடிப்போம் என்று உறுதியெடுங்கள்.

• பசியால் நலிந்து வாழும் மக்களிடையே சென்று சமயப்பிரசாரமும், தத்துவபோதனையும் செய்வது அவர்களை அவமதிப்பதாகும்.

• மிருக, மனித, தெய்வீக இயல்புகளால் மனிதன் உருவாக்கப்பட்டிருக்கிறான். உன்னிடமுள்ள தெய்வீகத் தன்மையை வளர்க்கக்கூடியது தான் நல்லொழுக்கம். மிருக இயல்பை அதிகரிக்கச் செய்வது தீய ஒழுக்கம்.

**இவர் கணனி தொழில்நுட்பத் துறையில் வேலை பாக்குறவரு போல.**

**இதயத் துடிப்ப வச்சே எப்படி சொல்றீங்க டாக்டர்.**

**இதயம் லப் டப்புன்னு துடிக்காம லேப் டாப் லேப் டாப்புன்னு துடிக்குதே... அத வச்சித்தான்.**



முதலில் தன்னைத் மாற்றிக் கொள்ளத் தயாராக இருப்பவன் மட்டுமே, உலகை மாற்றத் தகுதி உடையவன்.
~ நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ரெலோவின் பெறுமதியான முடிவுகள் ஈற்றில் பலமிழந்து போவது ஏன்?

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் என்ற ரெலோ அமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஓர் அங்கத்துவக் கட்சியாக இருந்து வருகிறது.

எனினும் கூட்டமைப்பின் முழு அதிகாரத்தையும் தன்னகத்தே கொண்டுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தவறான முடிவுகளைத் தடுத்து நிறுத்துகின்ற பணியை ரெலோ ஒருபோதும் செய்ததான வரலாறு இதுவரை இல்லை.

ஆனால், தமிழரசுக் கட்சி பயணிக்க வேண்டிய சரியான பாதை எது என்பதை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ரெலோ முன்வைத்துள்ளது.

அட, ரெலோ முன்வைத்த கருத்து மிகவும் தரமானதாக உள்ளது என்று நினைக்கும் போது, கருத்து மட்டுமே தரமும் தகுதியானதும் ஆகும்.

மற்றும்படி, தமிழரசுக் கட்சி எடுக்கின்ற தவறான முடிவுக்கு தானும் கைஉயர்த்துகின்ற செயலைத்தான் ரெலோ அமைப்பு இதுவரை செய்து வந்துள்ளது எனும்போது இது எதற்கானது? ஏன் இப்படி நடக்கிறது? என்று எண்ணத் தோன்றும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் மட்டும் நாம் உறவைப் பேண வேண்டுமென்று இல்லை. ஜனாதிபதி மைத்திரியுடனும் நாம் சமாந்தரமான உறவைப் பேணுவதுதான் தமிழ் மக்களுக்கு நல்லது என்ற ஆணித்தரமான கருத்தை முன்வைத்த ரெலோ அமைப்பு, பின்னர் தமிழரசுக் கட்சியின் ஒருதலைப்பட்சமான தீர்மானத்தின் பின்னால் இழுபட்டுச் சென்றதைக் காண முடிந்தது.

இதுதவிர, இப்போது அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் ரெலோ அமைப்பு மிகத் தெளிவான தீர்மானத்தை எடுத்துள்ளது.

அந்தத் தீர்மானம்; அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தனது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும். இல்லையேல் அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ரெலோ ஆதரிக்கும் என்பதாகும்.

ரெலோ எடுத்த மேற்போந்த தீர்மானம் மிகச் சிறந்தது. நாட்டில் ஏற்பட்ட ஓர் இக்கட்டான சூழ்நிலைக்கு அமைச்சர் ரிஷாத் பதியுதீனும் காரணம் என்பதான நினைப்பு அரசியல் புலத்தில் எழுந்துள்ளது.

இந்த நினைப்பின் தாக்கம் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடமும் விரவி; ரிஷாத் பதியுதீனை இன்னமும் அமைச்சராக வைத்திருப்பது எதற்காக என்ற கேள்வி நாடு முழுமையிலும் எழுந்துள்ளது.

எனவே இந்த இக்கட்டான சூழ்நிலையில் தனது அமைச்சுப் பதவியைக் காப்பாற்ற வேண்டும் என அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நினைப்பாராக இருந்தால், அது மிகத் தவறான முடிவாகவே இருக்கும்.

எனவே ஏற்பட்டுள்ள புறநடையான சூழ்நிலையில் அமைச்சர் ரிஷாத் தனது பதவியை இராஜினாமாச் செய்வதுதான் சிறந்த வழி.

இந்த சிறந்த வழியை ரெலோ அமைப்பு அமைச்சர் ரிஷாத்துக்குப் பௌவியமாகக் கூறியுள்ளது.

அவ்வாறு அவர் இராஜினாமாச் செய்யாவிட்டால், நாம் என்ன செய்ய முடியும். நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பதுதான் ஒரே வழி என்பது ரெலோவின் அறிவிப்பு.

ஆனால் நான் அடித்துக் கூறுவேன். அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வருமாக இருந்தால், தமிழரசுக் கட்சி அதனை எதிர்க்கும். ரெலோவும் அதையே செய்யும்.

இல்லை என்று ரெலோ தரப்பு மறுத்தால் காலம் அதற்குப் பதிலளிக்கும்.

எதுவாயினும் நல்ல தீர்மானங்களை எடுக்கின்ற ரெலோ, ஈற்றில் அதனை அமுலாக்க முடியாமல் பலமிழந்து போவது ஏன் என்பது தான் புரியாமல் உள்ளது.

வவுனியா மாணவி துன்புறுத்தல் விவகாரம்

## அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆளுநர் செயலகம் பணிப்புரை

(யாழ்ப்பாணம்)

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவி ஒருவர் துன்புறுத்தலுக்கு உள்ளான விடயம் தொடர்பில் வவுனியா வலயக் கல்விப் பணிப்பாளரை அறிக்கை சமர்ப்பிக்குமாறு வட மாகாண ஆளுநர் செயலகம் பணிப்புரை விடுத்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை குறித்த பாடசாலையின் அபிவிருத்திச் செயற்பாடுகள் பற்றி ஆராய்வதற்கான கூட்டம் கல்லூரி அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்துக்கு வந்த ஒரு பகுதியினர் பாடசாலையில் மாணவி ஒருவர் துன்புறுத்தலுக்கு உள்ளான விடயம் தொடர்பில் கேள்வி எழுப்பியதுடன் குறித்த குற்றச்சாட்டுத் தொடர்பில் அதிபர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவித்து கூட்டத்தில் அமளி ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் வட மாகாண ஆளுநர் செயலகத்துக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து குறித்த பாடசாலைச் சம்பவம் தொடர்பில் விரிவான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு வட மாகாண ஆளுநர் செயலகம் வவுனியா வலயக் கல்விப் பணிப்பாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளது. (3.10)

இன்று விசேட

## அமைச்சரவை கூட்டம்

நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் வாராந்த அமைச்சரவைக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

குறித்த அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா தலைமையில் இன்று காலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது அமெரிக்காவுடன் கைச்சாத்திடுவதற்கு எதிர்பார்க்கப்படும் சோபா உடன்படிக்கை, கொழும்பு துறைமுக அபிவிருத்தி, அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை உட்பட மேலும் சில முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளன.

அத்துடன், அமைச்சரவைப் பத்திரங்களும் ஆராயப்பட்டு, அவற்றுக்கு ஒப்புதல் வழங்கபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

முல்லை, நீராவியடி ஆலயத்தில்

## ஊடகவியலாளர் மீது பொலிஸார் தாக்குதல்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற சுயாதீன ஊடகவியலாளர் கொக்கிளாய் பொலிஸாரால் தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மிக நீண்டகாலமாக சர்ச்சைக்குரிய பகுதியாக இருந்து வருகின்ற நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் புதிதாக பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கமராக்களை அகற்றுமாறு முல்லைத்தீவு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த கமராக்களை உடனடியாக அகற்றுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்ட நிலையில் இந்த விடயம் தொடர்பாக செய்தி சேகரிப்பு நடவடிக்கைக்காக நேற்றைய தினம் சென்ற முல்லைத்தீவு மாவட்டத்தின் சுயாதீன ஊடகவியலாளரான கணபதிப்பிள்ளை குமணனை கொக்கிளாய் பொலிஸ் நிலைய அதிகாரிகள் தாக்கியதாகக் கூறப்படுகிறது. (3,281)

## 216 வகையான மருந்துகளை உடனடியாக கொள்வனவு செய்க

சுகாதார அமைச்சர் பணிப்புரை

(கொழும்பு)

216 வகை மருந்துகளுக்கான கேள்வி அதிகரித்துள்ளதுடன் அந்த மருந்து வகைகளில் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. அவற்றை விரைவில் கொள்வனவு செய்வதற்கு உடனடி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன பணிப்புரை விடுத்துள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சுகாதார அமைச்சில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் அமைச்சர் சேனாரத்ன இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார். (3)

## ஞானசார தேரருக்கு பொதுமன்னிப்பு வழங்கியமை ஒரு தலைபட்சமானது

திஸ்ஸ விதாரண குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள்ளமை ஒருதலைப்பட்சமானது. இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்கள் நீதியினை கோரும் போது பிரச்சினைகளே ஏற்படும் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ஞானசார தேரர் கடுமையான முறையில் பிற இனங்கள் மீது இனவாத கருத்துக்களை பகிரங்கமாக கட்டவிழ்த்து விட்டார். இதன் காரணமாக பல விளைவுகள் ஏற்பட்டன. இவருக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

நீதிமன்றத்தை அவமதித்த வழக்கில் சிறைவாசம் அனுபவித்த ஞானசார தேரரை எவரும் எதிர்பாராத விதத்தில் பொதுமன்னிப்பு வழங்கியமை வருந்தத்தக்கது. ஜனாதிபதிக்கு அரசியலமைப்பின் பிரகாரம் பொது மன்னிப்பு வழங்கும் அதிகாரம் காணப்படலாம். ஆனால் அதனை முறையாக செயற்படுத்தியிருக்க வேண்டும். இவரது விடுதலையினை தொடர்ந்து மறுபுறம் பாதிக்கப்பட்டவர்கள் நீதித்துறையினை நாடும் போது பிரச்சினைகளே ஏற்படும் என்றார். (3)

ஆளுநரின் ஏற்பாட்டில்

## ஆயிரம் மரக்கன்றுகளை வடக்கில் நடத் திட்டம்

(சாவகச்சேரி)

வடக்கு ஆளுநர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணத்தில் ஆயிரம் மரக்கன்றுகளை நாட்டும் திட்டம் எதிர்வரும் ஐந்தாம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள்ளும் மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்படவுள்ளதாக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் புத்தூர் சந்தியில் இருந்து எழுதுமட்டுவாள் வரையான பகுதிகளில் வீதியின் இரு பக்கமும் மரக்கன்றுகள் நாட்டப்படும் எனவும் மரக்கன்றுகளை பராமரிக்கும் பொறுப்பு பிரதேச சபையினுடையது எனவும் மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த மர நடுகைத் திட்டத்தில் அரசாங்க அதிபர், ஆளுநரின் செயலாளர் மற்றும் இராணுவத் தளபதி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3,30)

## அபிவிருத்திக் குழுக்களின் இணைத் தலைவராக ஹிஸ்புல்லா

ஜனாதிபதியால் நியமனம்

கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் அபிவிருத்திக் குழுக்களின் இணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் குறித்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தினைச் சேர்ந்த மூன்று மாவட்டங்களுக்கும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவராக ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தினை துரித கதியில் அபிவிருத்தி செய்யும் வகையில் குறித்த நியமனம் ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளது. (3)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- அறியாமையால் அச்சம் உண்டாகிறது. அச்சம் துன்பத்திற்கு வழிவகுக்கிறது.
- நிமிர்ந்த நெஞ்சுடன் தைரியமாகப் போராடுங்கள்.
- பணியின் முழுப் பொறுப்பையும் உங்கள் மீது சுமத்திக் கொள்ளுங்கள்.
- துணிவுடன் செயலாற்றுங்கள். உங்களுக்குரிய விதியை வகுத்துக் கொள்வது நீங்கள் தான் என்பதை உணருங்கள்.
- ஒழுக்கம், அன்பு, அமைதி உள்ளவர்களையே இந்த மண்ணுலகம் வேண்டுகிறது.

# மட்டுவில் சவாரிப் போட்டியின் பதிவுகள்





(படங்கள்-ஐ.சிவசாந்தன்)

சாவகச்சேரி மட்டுவில் பிரதேச சவாரித் திடலில் கடந்த 26 ஆம் திகதி மதியம் சவாரிப் போட்டி நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

இந் நிகழ்வில் முன்னாள் விவசாய பிரதி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இரமாநாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தார்.

யாழ்.மாவட்ட சாவாரி மன்றம் பதிவு செய்து விவசாயிகளின் பாரம்பரியமிக்க மாட்டு வண்டிச் சவாரிக்கு புத்துயிர் அளித்தமைக்காக இடம்பெற்றிருந்த சவாரிப்போட்டி நிகழ்வின் போது விவசாயிகள் மற்றும் சவாரி சங்கத்தினரால் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராம நாதன் கௌரவிக்கப்பட்டார்.

கிளிநொச்சி, பூநகரி, வட்டுக்கோட்டை, அளவெட்டி, சாவகச்சேரி, கீரிமலை, சங்குவேலி, போன்ற பிரதேசங்களில் இருந்து போட்டியாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

வெற்றி பெற்றவர்களுக்கு தங்கப் பதக்கமும் பெறுமதியான பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (க)

# ஐந்தாவது தடவையாக கிண்ணம் வென்ற கே.சி.சி.சி.அணி





கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில், யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் 30 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியொன்று வருடா வருடம் நடத்தப்பட்டு வருகின்றது.

26 அணிகள் பங்குபற்றிய இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிக்கு திருநெல்வேலி கிரிக்கெட் அணியும் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியும் (கே.சி.சி.சி.) நுழைந்தன.

இறுதியாட்டம் கடந்த 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற திருநெல்வேலி அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

32.5 ஓவர்களில் 135 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் றொகான் 26, றஜிந்தன் 36, சுரேஸ் 30, பிரபவன் 15 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் கே.சி.சி.சி. அணி சார்பாக, நிருசிகன் 8 ஓவர்கள் பந்துவீசி 34 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளையும், சஜானன் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

136 ஓட்டங்களை எடுத்தால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய, கே.சி.சி.சி. அணி முதலாவது விக்கெட்டை விரைவாக இழந்தது. ஜெயரூபன் 6 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

பின்னர் வந்த துடுப்பாட்ட வீரர்கள் தம் பங்கிற்கு ஓட்டங்களை எடுத்துக்கொடுக்க, 22.3 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் ரி.பானுஜன் 39 ஓட்டங்களையும், கே.ஜனுதாஸ் 32 ஓட்டங்களையும், சத்தியன் 19 ஓட்டங்களையும், றொசான் 15 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சிவராஜ் 3 விக்கெட்டுகளையும், றொகான் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இறுதிப்போட்டியின் நாயகன் மற்றும் சிறந்த பந்துவீச்சாளராக கே.சி.சி.சி. அணியின் என். நிருசிகன் தெரிவு செய்யப்பட்டதுடன், கே.சி.சி.சி. அணியின் ரி.பானுஜன் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும், திருநெல்வேலி அணியின் வி.அசோக் சிறந்த களத்தடுப்பாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதுவரையில் நடைபெற்ற 25 சுற்றுப்போட்டிகளில், சென்றலைட்ஸ் அணி ஐந்து தடவைகளும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் ஆகிய அணிகள் தலா 4 தடவைகளும், ஜொனியன்ஸ், ஜொலிஸ்ரார்ஸ், பற்றீசியன் அணிகள் தலா 3 தடவைகளும், மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழகம் 2 தடவைகளும், திருநெல்வேலி விளையாட்டுக்கழக அணி 1 தடவையும் சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டன.

26 ஆவது போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் ஐந்து தடவைகள் கிண்ணத்தை வென்ற, சென்றலைட்ஸ் அணியுடன் கே.சி.சி.சி.அணியும் இணைந்து கொள்கின்றது. (க-26)


# அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்






தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் வடக்கு அபிவிருத்தி மீள்குடியேற்றம் மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 31 ஆவது தேசிய விளையாட்டு விழா இம்முறை சிறப்பாக இடம்பெற இருக்கின்றது.

அந்த வகையில், கடந்த 31 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் முல்லைத்தீவு மாவட்ட மட்ட விளையாட்டு விழாக்களில் கபடி மற்றும் கரப்பந்தாட்டப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

அந்த வகையில் இதுவரை நடைபெற்று முடிந்த போட்டிகளில் பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் துணுக்காய் பிரதேச செயலக பிரிவு அணி இரண்டாம் இடத்தையும் மணலாறு பிரதேச செயலகப் பிரிவு அணி முதலாமிடத்தையும் பெற்றிருக்கின்றது.

அதேபோன்று ஆண்களுக்கான கபடிப் போட்டியில் இரண்டாம் இடத்தை மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவு அணியும் முதலாம் இடத்தை ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவு அணியும் பெற்றுக் கொண்டது. (க-281)

## குருநாகல் வைத்...

முறைப்பாடு செய்ய தயாராகி வருவதாக வும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

திருமணம் முடித்த தாங்கள் குறுகிய காலத்துக்குள் கர்ப்பம் தரித்தோம் என்றும், குருநாகல் போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை மூலமாக முதலாவது குழந் தையைப் பெற்றுக்கொண்டபோதும், இன்று வரையிலும் மீண்டும் கர்ப்பம் தரிக்கவி ல்லை என குறித்த முறைப்பாடுகளில் தெரி விக்கப்பட்டுள்ளது.

மீண்டும் கர்ப்பம் தரிக்காதவகையில், சத் திரசிகிச்சையேதும் அவர் மேற்கொண்டு விட்டாரா என்ற சந்தேகம் எழுத்துள்ளது என வும் அவர்கள் தங்களது முறைப்பாடுகளில் குறி ப்பிட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (3)

## விசாரிப்பதற்கு...

டின் மொஹமட் சபிக்கு எதிரான குற்றச் சாட்டுக்கள் குறித்து விசாரிப்பதற்காக விசேட விசாரணை குழு ஒன்று நியமிக்கப்படவு ள்ளது. சுகாதார அமைச்சர் ராஜித சேனா ரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த குழு குறித்த வைத்தியருக்கு எதி ரான குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணை அறிக்கையை விரைவில் அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் கையளிக்கும் என எதிர் பார்க்கப்படுகின்றது. (3)

## நம்பிக்கையில்லா...

விடுதலை முன்னணியின் ஊடக சந்திப் பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அக்கட்சியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் இதனை தெரிவித்துள்ளார்.

இதேவேளை முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கை யில்லாப் பிரேரணைக்கு மக்கள் விடுதலை முன்னணி விவாதத்தின்போது முன்வைக்க ப்பட்ட உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு அந்த நபர்களுக்கு எதிராக வாக்க ளித்தது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் இந்த நிலையில் அரசாங்கத்தின் எந்தவொரு உறுப்பினரையும் பாதுகாக்க வேண்டிய நோக்கம் ஜே.வி.பிக்கு கிடையாது என்றும் தமது கட்சி முழு அரசாங்கத்திற்கும் எதிராக ஒரு நம்பிக்கையில்லா பிரேர ணையை கொண்டுவந்துள்ளது என்றும் கூறினார்.

பாராளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அது தேர்தலுக்கு வழி வகுக்காது என்றும் ஆனால் ஒரு புதிய அரசா ங்கத்தை உருவாக்க வாய்ப்பளிக்கும் என் றும் கூறினார்.

மேலும் நாடெங்கிலும் அதிகரித்துவரும் அழுத்தத்தின் காரணமாகவே அரசாங்கத் திற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை அமைச்சர் ரிஷாத் பதியு தீனுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேர ணைக்கு ஆதரவாக வாக்களிக்கத் தயார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங் காளிக் கட்சியான ரெலோ அறிவித்துள்ளது.

பாராளுமன்றில் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் 16 பாராளுமன்ற உறுப்பினர்க ளில் 2 பேர் ரெலோ கட்சியை முன்னிலை ப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் என் பதும் குறிப்பிடத்தக்கது. (3)

## பிக்குவால் பொரு...

செம்மலைக்கிராம மக்களும் பௌத்த பிக்குவுக்கும் விகாரைக்கும் பாதுகாப்பாக நிற் கும் பொலிஸ் உத்தியோகத்தரால் தடுக்கப் பட்டதோடு பௌத்த பிக்குவின் முறைப்பாட் டுக்கு அமைவாக உடனடியாக சம்பவ இட த்துக்கு வந்த முல்லைத்தீவு பொலிஸார் ஆல யத்துக்கு அபிவிருத்தி வேலைகளுக்காகவும் வழிபாட்டுக்காகவும் வருகைதந்த மக்களை நிலத்தில் அமர்த்தி விசாரணைகளை செய்து பதிவுகளை மேற்கொண்டு குற்றவாளிகளை போல நடத்தியிருந்தனர் .

இந்த சம்பவங்களையடுத்து குறித்த நீரா வியடி பிள்ளையார் ஆலயத்தினை சேர்ந்தவ ர்களால் நகர்த்தல் பத்திரம் ஒன்று தாக்கல் செய்யப்பட்டு நேற்றையதினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் இந்த வழக்கு விசார ணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது .

மாவட்ட நீதிபதி எஸ்.லெனின்குமார் முன்னிலையில் இடம்பெற்ற இந்த வழக்கு விசாரணையில் சிரேஷ்ட சட்டத்தரணி அன் ரன் புனிதநாயகத்தின் தலைமையில் முல் லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தினை சேர்ந்த சட்டத்தரணிகளும் ஆஜரா கியிருந்தனர் .

நேற்று முன்தினம் வழிபாடுகளுக்கும் அபிவிருத்தி வேலைகளுக்கும் சென்ற நீரா வியடி பிள்ளையார் ஆலயத்தினருக்கு பொலி ஸாரினாலும் பௌத்த பிக்கு தரப்பினராலும் இடையூறு ஏற்பட்டமை தொடர்பில் பத்தி ரிகை ஒன்றில் வெளியான செய்தியை ஆதா ரம் காட்டி சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் மன்றின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

இதனையடுத்து உடனடியாக முல்லைத் தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை மன்றுக்கு அழைத்த நீதிபதி வழக்கின் தீர்ப் பின் படி பௌத்தபிக்குவால் மாற்றம் செய்யப் பட்ட கணதேவி தேவாலயம் என்ற பெயரை ஏற்கெனவே இருந்ததை போன்று நீராவியடி பிள்ளையார் ஆலயம் என மாற்றம் செய்யு மாறு பொலிஸாருக்கு கூறப்பட்டது. எனினும் அது மாற்றம் செய்யப்படவில்லை எனவும் இரண்டு புதிய இரகசிய கமராக்கள் பொரு த்தப்பட்டுள்ளமை தொடர்பிலும் வினவினார்.

இதன்போது இன்றையதினமே (நேற்று) இரகசிய கமராக்களை அகற்றுவதாகவும் பெயரினையும் மாற்றுவதாகவும் பொலிஸ் பொறுப்பதிகாரி மன்றில் தெரிவித்ததை தொடர் ந்து உடன் குறித்த வேலைகளை செய்யுமா றும் மேலும் இரண்டு தரப்பினரையும் ஏற் கெனவே வழங்கப்பட்டுள்ள நீதிமன்றின் தீர் ப்பை மதித்து செயற்படுமாறும் அமைதிக்கு பங்கம் ஏற்படாதவாறு செயற்படுமாறும் கட்ட ளையிட்டது.

இதனை இனியும் மீறுவோர்மீது நீதி மன்ற அவமதிப்பு குற்றச்சாட்டுக்கு உள்ளாக நேரிடும் எனவும் மன்று எச்சரித்தது. (3-281)

## போதைப்பொருள்...

முதல் ஜூலை 01ஆம் திகதி வரையான காலத்தை தேசிய போதைப்பொருள் ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தி நாடளாவிய ரீதி யில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்ட ங்கள் முறையாகவும் வினைத்திறனாகவும் முன்னெடுக்கப்பட இருக்கின்றன.

போதைப்பொருள் கட்டுப்பாடு மற்றும் குற் றங்களை குறைத்தல் பற்றிய சட்ட வரைவு தொடர்பிலான கலந்துரையாடல் ஜனாதிபதி யின் செயலாளர் உதய ஆர்.செனவிரத்ன வின் தலைமையில் நேற்று முற்பகல் ஜனா திபதி செயலகத்தில் இடம்பெற்றபோதே இவ் விடயம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையா டப்பட்டது.

மதுவரி கட்டளைச் சட்டம், விஷ போதைப் பொருள் கட்டளை திருத்தச் சட்டம், சிறைச்சா லைகளின் பாதுகாப்பு, போதைப்பொருளு க்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளி த்தல் மற்றும் இரசாயன பகுப்பாய்வு திணை க்களத்தில் நிலவும் போதைப்பொருள் பகுப் பாய்வுடன் தொடர்பான பிரச்சினைகள் போன்ற விடயங்களைப் பற்றி இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வண.குப்பியாவத்தே போதானந்த தேரர், அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் உரிய நிறுவனத் தலைவர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் பதிற்கடமை பொலிஸ்மா அதிபர் சீ.டி.விக்ரமரத்ன உள்ளிட்ட பாதுகாப் புத்துறை பிரதானிகளும் இந்த கலந்துரையா டலில் பங்குபற்றினர். (3)

## அவசரகால சட்ட...

பேச்சுக்களை தடுக்க நிரந்தரமான சட்டம் ஒன்றினை உருவாக்கி பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

சகல மக்களுக்குமான பொதுச் சட்டமே அவசியம் எனவும் மாறாக ஒரு சமூகம் மட் டும் தனித்து செயற்படும் சட்டங்களுக்கு இனி யும் இடமளிக்கக்கூடாது எனவும் அவர் குறிப் பிட்டார்.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க நேற்று அஸ்கிரிய பீட மாநாயக்க தேரர்களை சந்தித்து தமது தேசத்துக்கான வழி அமைப்பின் செய ற்பாடுகள் குறித்து தெளிவுபடுத்தியிருந்தார். தேரரை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை குறிப்பிட்டார். (3)

## இதுவரையில்...

63 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறி யலில் வைக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியென அடையாளம் காணப்பட்ட சஹ்ரான் காத்தான்குடியைச் சேர்ந்தவரென பொலிஸார் அண்மையில் அடையாளப்படு த்தினர்.

இந்நிலையில் சம்பவம் இடம்பெற்ற நாள் முதல் இதுவரை. பொலிஸார் மற்றும் இரா ணுவத்தினர் நடத்திய தேடுதல் நடவடிக்கை களில் மௌலவிகள் உட்பட 63 பேர் பயங் கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய் யப்பட்டுள்ளனர்.

மேலும் கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும், மட்டக்களப்பு நீதவான் நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்திய பின்னரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என வும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை குறித்த பிரதேசங்களில் இராணுவத்தினர் தொடர்ந்தும் சுற்றிவளை ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (3)

## 22 ஆயிரம் பட்ட...

மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, வடமா காண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலு வல்கள் அமைச்சினால் இதற்கான ஆட் களை இணைக்கும் செயற்பாடு முன்னெடு க்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்கு அபிவிருத்தி பணிகளை துரிதப்படுத்துவதற்காக பனை அபிவிருத்தி நிதியத்தை அமைக்கும் நிகழ்வு நேற்று திங் கட்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற் றது. அதில் தலைமை உரையாற்றிய போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார். அங்கு கரு த்து தெரிவித்த அவர்,

எமது அரசின் கீழ் 22 ஆயிரம் பட்டதாரி களை அரச சேவையில் இணைத்துக்கொள் வதற்கான திட்டம் தற்பொழுது ஆரம்பிக்கப்ப ட்டுள்ளது. இதில் ஒரு பகுதி வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பட்டதாரிகளுக் கும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொ ள்ளப்படும்.

வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கு தேவை யான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு ள்ளோம். இந்த அபிவிருத்தி வேலைத்திட்டத் திற்காக நிதி அமைச்சு வழங்கும் ஊக்கு விப்பு நிதி தொடர்பாக அமைச்சர் விரைவில் அறிவிக்கவுள்ளார் என்றும் பிரதமர் தெரி வித்தார். (3)

## பனை அபிவிருத்...

என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு அபிவிருத்தி பணிகளை துரிதப்படுத்துவதற்காக பனை அபிவிருத்தி நிதியத்தை அமைக்கும் நிகழ்வு நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்றது. அதில் தலைமை உரையாற்றிய போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு பாராளுமன்ற உறுப்பின ர்கள் தமது பிரதேசங்களின் அபிவிருத்திக் குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய் யுமாறு கோரிக்கை விடுத்திருந்தனர். இதற் கமைவாக இந்த நிதியம் ஏற்படுத்தப்பட்டு ள்ளது. அபிவிருத்திக்காக தேவையான நிதியை இந்த நிதியத்தினூடாக வழங்குவ தற்கு ஆற்றல் உள்ளது என்றும் பிரதமர் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு பாராளுமன்ற உறுப்பின ர்களின் கோரிக்கைக்கு அமைவாக பிரதேச அபிவிருத்திக்காக நிதி அமைச்சர் வரவு செலவுத்திட்டத்தின் மூலம் இந்த நிதியத் துக்கு நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு நடவ டிக்கை முன்னெடுத்தார்.

அந்தந்த பிரதேசங்களின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அபிவிருத்திக்காக தத்தமது பிரேரணையை சமர்பிக்கும் பொழுது அவ ற்றுக்கு அமைவாக அதற்கான நிதியை இந்த நிதியத்தின் ஊடாக வழங்க முடியும் என்று பிரதமர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிதியத்துக்கு மேலதிகமாக வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்காக கம்பெரலிய வேலைத் திட்டத்தின் கீழ் நாம் 7 பில்லியன் ரூபாயை வழங்குவோம். இதற்கமைவாக பொதுவாக பார்க்கும் பொழுது வடக்கு, கிழக்கு பிரதேச அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக இந்த வருடத்தில் மொத்த செலவாக 50 பில் லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக திரை சேரியின் செயலாளர் என்னிடம் தெரிவித் தார் என்றும் பிரதமர் கூறினார்.

வடக்கு கிழக்கு பிரதேசத்தில் உத்தேசி க்கப்பட்டுள்ள 2ஆயிரம் வீடமைப்பு திட்ட த்தின் கீழ் சேதமடைந்த வீடுகளின் அபிவி ருத்தி பணிகள் மேற்கொள்ளப்படும். இதே போன்று என்டர் பிரைஸ் ஸ்ரீலங்கா வேலை த்திட்டத்தின் கீழும் நிதி வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். (3)

## மோ.சைக்கிள்-டிப்...

நேற்று இரவு 9.40 மணியளவில் டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேரு க்கு நேர் மோதியதிலேயே இவ்விபத்து ஏற்ப ட்டுள்ளது. இவ்விபத்தில் மீசாலை மேற்கைச் சேர்ந்த மகேஸ்வரன் சுரேந்திரகுமார் (வயது 45) என்பவரே பலியாகியுள்ளார்.

மீசாலை மேற்கைச் சேர்ந்த கதிரேசு உத யன் வயது 35 என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ளார்.

டிப்பர் சாரதியை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளதோடு விசாரணைகளை யும் முன்னெடுத்துள்ளனர். (3-30-89-114)

## வல்வைப் பகுதி...

பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை வல் வெட்டி பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

அதிகாலை வீட்டில் இருந்தவர்கள் மல சலகூடம் செல்வதற்காக வீட்டை திறந்து சென்றதை சாதகமாக பயன்படுத்தி உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த தாலிக்கொடி, சங்கிலி உள்ளிட்ட தங்க ஆபரணங்களை திருடிச் சென்றுள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (3-6C)

## ரிஷாத்தை சிறை...

குற்றமாகும். ஆகவே இவரை தண்டனை சட்டக்கோவையின் பிரகாரம் சிறைப்பிடிக்க வேண்டும் என பொதுஜன பெரமுனவின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊட கவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கரு த்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறி ப்பிட்டார். (3)












உங்கள் இல்லங்கள் நவீன முறையில் புதுப்பொலிவுடன் புனர்நிர்மாணம் செய்து கொள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.



- மேசன்/ தச்சு வேலைகள்
- Marble டைல்ஸ்
- Ceiling சீலிங்
- Painting பெயின்ரிங்
- Kitchen Pantry பென்ரி கபேர்ட்

தொடர்புகளுக்கு: 0776194994

குறைவான கட்டணம் அழகிய தோற்றம்



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்



## ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: ராஜ் - 077 679 6623 (8880)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

வருமான பரிசோதகர் பரீட்சைக்கான வகுப்பு

இன்று செவ்வாய் மற்றும் புதன், வியாழன் 4.15pm - 6.15pm

300/= நாள் கட்டணத்துடன்

கோலாசிற்றி

இல.234. நாவலர் வீதி. யாழ்ப்பாணம். 077 182 3534

இறுதிக் கருத்தரங்குகள்

வட மாகாண வருமான பரிசோதகர், முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சைகளுக்குமானது

P.கமல்தாசன் மற்றும் வளவாளர்கள்

29/05/, 31/05 புதன், வெள்ளி 3pm - 6pm

01.06.2019 சனி (அதிர்பார்க்கை விடைகள்) 9am - 2pm

நாவலர் கல்வி நிறுவனம்

ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம். 077 111 6739

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

| | |
|---|---|
| UK- 550 | /=Kg |
| கனடா-900 | /=Kg |
| ஜேர்மனி- 700 | /=Kg |
| நெதர்லாந்து-700 | /=Kg |

(C-6232)

0768226240

V2 TRAVELs

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

வணிகக்கல்வி தொடர் கருத்தரங்கு

## A/L 2019

ஆரம்பம்: 30.05.2019 வியாழன்

நேரம்: 2pm - 5pm

குறிப்பு

- இக்கருத்தரங்கு 30 மணித்தியாலங்களைக் கொண்டது.
- வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.
- குறிப்பேடுகள் வழங்கப்படும்.
- அனுமதிகளை அலுவலகத்தில் பெறலாம்.

T.S.ரிஷி (BBA (Hons) HRM (Spl), PGDE)

D.M.I

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். 077 206 8760

தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கான

யுனிலங்காஸ் வெளியீடுகள்

தற்போது விற்பனையில்!

## வெற்றிக்கு வழிகாட்டி

(24 மாதிரி வினாத்தாள்கள்) விலை 275/

(8-6479)

## பூமாலை

(15 மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன்) விலை 700/-

## சுற்றாடல் மாதிரி வினாத்தாள்

(12 மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன்) விலை 150/

(தொகுதி -1, தொகுதி -2, தொகுதி -3)

## விவேக நுண்ணறிவு வழிகாட்டி

(நுண்ணறிவு வினாக்களும் விடைகளும்) விலை 525/-

## புலமைத்தேர்வு

65 அலகு ரீதியான பயிற்சிகளும் அதற்கான விடைகளும்

கணிதம் - 23 அலகுகள், தமிழ் - 24 அலகுகள், சுற்றாடல் - 15 அலகுகள்

ஆங்கிலம், சிங்களம், பொதுஅறிவு, நுண்ணறிவு

அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள்

முதன்மை நிலை 1 (தரம்-1, தரம்-2)

முதன்மை நிலை 2 (தரம்-3, தரம்-4)

எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

தொடர்புகளுக்கு யுனிலங்காஸ் 077 6258778


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## அமரர் பாலசுப்பிரமணியம் கவிராஜ் (கவி)


திதி: தசமி

கடந்த 29.04.2019 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த எங்கள் குடும்பக் குலவிளக்கு

**அமரர் பாலசுப்பிரமணியம் கவிராஜ்**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (29.05.2019) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.



அன்னை மடியில்: 16.05.1994

இறைவன் அடியில்: 29.04.2019

121/44, சோலைபுரம், கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர் 077 386 8675

(8952)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.